வாழ்க்கை வாழ்வதற்கே!

கோ. த. சண்முகசுந்தரம்

அன்னை நிலையம்
இராயவரம் :: புதுக்கோட்டை ஸ்டேட்

முதற்பதிப்பு ஆகஸ்ட் 1946

விலை ரூ. 2

அச்சிட்டோர்
பாப்பா பிரஸ், இராயவரம்.

சமர்ப்பணம்

என்னை எழுத்தாளனாக்கி
உங்கள் எல்லோருக்கும்
அறிமுகம் செய்துவைத்த
தலைவர் சி.பா. ஆதித்தன்
எம்,ஏ., பாரிஸ்டர்-அட்-லா
அவர்களுக்கு

பொருள் அடக்கம்

அறிமுகவுரை

"தந்தி" தினசரிக்கும் "தமிழன்" வாரப்பதிப்புக்கும் ஏககாலத்தில் ஆசிரியராக இருந்த ஸ்ரீ கோ. த. சண்முக சுந்தரம் அவர்களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்துவைக்க முற்படுவது எவ்வளவு அவசியமற்றது என்பது எனக்குத் தெரியும். அவரையும் அவரது எழுத்துக்களையும் நீண்ட காலமாக அறிந்திருக்கும் வாசகர்களுக்கு அவரைப் பற்றி நான் புதிதாக என்ன சொல்லப் போகிறேன்?

ஆனால் ஸ்ரீ சண்முகசுந்தரம் அவர்களைப் பற்றி வாசகர்களுக்குத் தெரியாத ஒரு உண்மை எனக்குத் தெரியும். அவர் ஒரு சோம்பேறி! இல்லாவிட்டால் அவருக்கிருக்கும் திறமைக்கு அவர் ஒன்பது கதைகளல்ல, ஒன்பதினாயிரம் கதைகள் எழுதி இருக்கலாம்!

பெண்களின் மனோதத்துவத்தை படம் பிடித்துக் காட்டுவதில் ஸ்ரீ கோ. த. ச. அலாதி திறமை பெற்றிருக்கிறார். அவருடைய இந்தத் திறமை, "பிரார்த்தனை" "குரூபி" "தாய்" "வாழ்க்கை வாழ்வதற்கே" ஆகிய கதைகளில் வெளியாகி இருக்கின்றன.

ஆனாலும் ஸ்ரீ சண்முக சுந்தரம் அவர்கள் கதைகளில் பலருக்கு ஒரு குறை இருக்கிறது. கதைகளில் பெரும்பாலானவை சோகமாக முடிகின்றன. இதைப்பற்றி நான் அவரோடு வெகுவாக தர்க்கம் செய்திருக்கிறேன். ஆனால் அவற்றிற்கெல்லாம் அவர் ஒரே ஒரு சமாதானம் சொல்லி அடக்கி விடுகிறார்.

அதாவது "வாழ்க்கையை உள்ளது உள்ளபடி நிர்வாணமாக படம் பிடித்துக் காட்டுகிறேன். முடிவு சோகமாக இருந்தால் அது என் குற்றமல்ல. சமூக அமைப்பின் குற்றம்" என்று கூறுவார்.

சமூக சீர்திருத்தத்தில் மிகவும் ஆர்வங்கொண்ட ஸ்ரீ சண்முக சுந்தரத்தின் கதைகளை, பெண் குலம் வெகுவாக வரவேற்கிறது. அவரது நடையிலுள்ள இன்பமும் சந்தர்ப்பங்களை லாகவமாக அமைத்து எழுதும் திறனும் படிப்பவர் உள்ளத்தை கவர்வனவாகும்.

இப்படிப்பட்ட எழுத்தாளர்களின் கையில் தான், தமிழ்க்கன்னி புத்துயிர் பெற முடியும்.

திருச்சி
23—6—1946.

S. பங்கஜம்
(Miss Pankajam Sowmyanarayanan)

நமஸ்காரம்

இந்தத் தொகுதியில் ஒன்பது சிறு கதைகள் அடங்கி இருக்கின்றன. அவற்றில் "நண்பனின் மனைவி"யும் "அந்தமான் கைதி"யும் 1940 ம் வருஷத்தில் எழுதி, முறையே விசேஷ மலர் ஒன்றிலும் "பாரத தேவி"யிலும் வெளிவந்தவை.

மற்ற ஏழு கதைகளில் "பக்தி" என்ற கதை ஒரு சென்னைப் பத்திரிகையில் பிரசுரமானது. "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற கதை "தந்தி" விசேஷ மலரில் வெளிவந்தது. பாக்கி ஐந்து கதைகளும் "தமிழன்" பத்திரிகையில் 1943 ம் வருஷம் வெளிவந்தவை.

இந்தத் தொகுதியில் எனக்குப் பிடித்த கதை "வாழ்க்கை வாழ்வதற்கே!" என்பது தான். ஆனால் நான் எழுத்துலகில் வளர்ச்சிபெற மூலகாரணமாக இருந்த "தந்தி" நிர்வாக ஆசிரியர் ஸ்ரீ சி. பா. ஆதித்தன் அவர்கள் "குரூபி" என்ற கதையை மிகவும் பாராட்டினார். 1943 ம் வருஷம் "தமிழ"னில் அந்தக் கதை பிரசுரமானதும் ஸ்ரீ ஆதித்தன், "இதைப்போல நீங்கள் கதைகளெல்லாவற்றையும் எழுத ஆரம்பித்தால், உங்களோடு போட்டி போட தமிழ் எழுத்தாளருலகில் ஒருவராலும் முடியாது" என்று சொன்னதாக ஞாபகம். ஒருக்கால் அது அன்பின் மிகுதியாலோ, அல்லது உற்சாகம் அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தினாலோ எழுந்த வார்த்தையாக இருக்கலாம்.

இந்த ஒன்பது கதைகளிலும் கூடுமான வரை எல்லோருக்கும் விளங்கும் எளிய நடையையே கையாள வேண்டும் என்று முயற்சித்திருக்கிறேன். எனது நடையைப்பற்றி நான் எதுவும் பிரமாதமாக நினைத்துக் கொண்டிருக்கவில்லை. சென்ற அக்டோபர் மாதம் நண்பர் "கல்கி" எனக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "எழுத்துத் திறமையும் அறிவாற்றலும் நிரம்பியவர் தாங்கள்" என்று குறிப்பிட்டிருந்ததைக் கூட, நான், உற்சாக மொழி என்று எடுத்துக் கொண்டேனே தவிர, ஒரு "தகுதிச் சான்று" என்று பாவித்துக் கொள்ளவில்லை.

ஆகவே இதை வாசிக்கும் அன்பர்கள் இந்த நடையிலோ கருத்திலோ தவறு இருக்கிறது என்று சுட்டிக் காட்டினால் அதைப் பெரிதும் வரவேற்கிறேன்.

இதுவரையில் யாருமே வெளியிட்டிராத புது "பந்தா" வில் இந்த சிறுகதைத் தொகுதியை பல வர்ணங்களில் அச்சிட்டு வெளியிட்ட அன்னை நிலயத்தாருக்கு எனது நன்றி.

மதுரை
9—8—46

கோ. த. சண்முக சுந்தரம்.



வாழ்க்கை வாழ்வதற்கே!

வாழ்க்கையில் நாம் பல பேர்களைச் சந்திக்கிறோம். அவர்களில் பலருடைய சரித்திரம் பிரமை தட்டும்படி இருப்பதை நாம் உணருகிறோம். அதை என்றைக்கும் மறக்க முடியாது என்று நம் மனது சொல்லுகிறது.

ஆனால் உள்ளபடியே அவர்களை யெல்லாம், நாம் நினைவிலேயே வைத்துக் கொண்டிருப்பதில்லை. காலப் போக்கின் வேகத்திலே மறதி என்ற இருட்டில் அவர்கள் உருவம் மறைந்து விடுகிறது.

என்றைக்காவது ஒரு நாள் திடீரென்று அவர்கள் நம் முன் எதிர்ப்படுவார்கள். அப்பொழுது பழைய நினைவுகளெல்லாம் நம் மனக் கண்ணின் முன் ஆலவட்டம் போடும். நமக்கு முன்னால் நிற்கும் பழைய நண்பரின் புரட்சிகரமான வாழ்க்கையை எண்ணி அனுதாபமோ பூரிப்போ அடைவோம்.

இதைப் போன்ற அனுபவம் என் வாழ்நாளில் பல தடவை ஏற்பட்டிருக்கிறது. எனக்கு ஞாபக மறதி கொஞ்சம் அதிகம் என்று சொல்ல வேண்டும். இதனால் நெருங்கிப் பழகும் நண்பர்களைக் கூட, சில மாதங்களில் நான் மறந்துவிடுவது சகஜமாகி விட்டது.

அதே போலத்தான் சிவராமனைப் பற்றிய நினைவே, எனக்கு அற்றுப் போய் இருந்தது. சிவராமன் என்ன ஆனான், எங்கே போனான், என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கக்கூட நான் முயற்சி எடுக்கவில்லை.

அப்படி இருந்த சமயத்தில்தான், ஒரு எதிர்பாராத நிகழ்ச்சி ஏற்பட்டது.

* * * *

அன்றைக்கு என்னவோ தெரியவில்லை; ஆபீசில் ஏகப்பட்ட வேலை இருந்தது. எனது சோம்பேறித்தனத்தால் நீண்ட நாட்களாக ஒத்தி போடப்பட்டிருந்த பல அலுவல்கள், மலை போல என் முன்னே குவிந்திருந்தன.

அவற்றை யெல்லாம், எப்படியாவது முடித்து விட்டுத்தான் எழுந்திருப்பது என்ற வைராக்யத்துடன் உட்கார்ந்திருந்தேன். வேலை வெகு வேகமாக நடந்து கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில், ஆபீஸ் பையன் என் அறைக்குள் வந்து மெதுவாக எட்டிப் பார்த்தான். அவன் கையில் ஒரு விசிட்டிங் கார்டு இருந்தது. தயங்கிக் கொண்டே அதை என்னிடம் நீட்டினன்.

எனக்கிருந்த அலுப்பில் நான் அந்தக் கார்டை வாங்கிப் பார்க்கக்கூட இல்லை. "சரி; சரி! சீக்கிரம் வரச் சொல்லப்பா! இருபத்து நான்கு மணி நேரமும் பேட்டியிலேயே கழிந்துவிடும் போலிருக்கிறது" என்று சீறி விட்டு மீண்டும் ஆபீஸ் 'பைல்' களைப் புரட்டும் வேலையில் ஆழ்ந்து விட்டேன்.

சில நிமிஷங்களில் யாரோ என் அறைக்குள் நுழையும் அரவம் கேட்டது. ஆயாசத்தோடு தலை நிமிர்ந்து பார்த்தேன். என்ன ஆச்சரியம்! சிவராமனே என் எதிரில் நின்று கொண்டிருந்தான்.

"யார், சிவராமனு? உட்கார். நீ எப்பொழுது வந்தாய்? சௌகரியமாக இருக்கிருயா?" என்று ஆவலாகக் கேட்டேன்.

"இப்பொழுதுதான் இங்கே வந்தேன். மங்கம்மா சத்திரத்தில் இறங்கி இருக்கிறேன். தமயந்தி அங்கே இருக்கிருள். உன்னைப் பார்த்து அழைத்துக் கொண்டு போக வந்தேன்."

"தமயந்தியும் உன்னுடன் வந்திருக்கிறதா? அப்படியானல்..........." என்று சந்தேகமாக அவன் முகத்தைப் பார்த்தேன்.

"ஆமாம்! எல்லாம் மங்களகரமாகவே முடிந்து விட்டது. எல்லாம் அங்கே போய்ப் பேசிக் கொள்ளலாம், வா! பிறகு வந்து வேலையைப் பார்க்கலாம்" என்று என்னைப் பயணப் படுத்த ஆரம்பித்தான்.

சிவராமனும் தமயந்தியும் சேர்ந்து மதுரைக்கு வந்திருக்கிறார்கள் என்ற செய்தி என்னை ஏனே, குதூகலம் அடையச் செய்தது. கையிலிருந்த ஆபீஸ் காகிதங்களை மேஜைமேல் அப்படியே குப்பையாகப் போட்டு விட்டு அவசர அவசரமாக சிவராமனுடன் புறப்பட்டேன்.

* * * *

மங்கம்மா சத்திரத்தை நாங்கள் அடைந்த போது, தமயந்தி ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் "அண்ணுவா? வாருங்கள்! வாருங்கள்!" என்று ஆர்வத்தோடு வரவேற்ருள்.

தமயந்தியை நான் பார்த்துச் சரியாக இரண்டு வருஷங்களுக்கு மேல் ஆகி விட்டது. ஆனல் இன்று நான் அவளைப் பார்த்த பொழுது அவளிடமிருந்த குதூகலத்தையும், மனநிறைவையும், என்றைக்கும், நான் அவளிடம் கண்டது இல்லை.

ஒரு காலத்தில் ஏக்கமும் ஏமாற்றமும் மலிந்து கிடந்த அவள் முகத்திலே, இன்று மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது.

வெகு நேரம் வரையில் அவர்களோடு நான் பேசிக் கொண்டிருந்தேன். கடைசியில் எழுந்து வரும்பொழுது, "அண்ணு! எங்களுக்கு இந்த உலகத்தில் வேறு ஆதரவு யாரும் கிடையாது. நீங்கள் ஒருவர் தான் இருக்கிறீர்கள். எங்களைப்பற்றிய முழுக் கவலையையும் நீங்கள் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று தமயந்தி தழுதழுத்த குரலில் கூறியது, என் மனதை என்னவோ செய்தது.

* * * *

பார்க்கப் போனல், தமயந்திக்கும் சிவராமனுக்கும் ஆதரவு அளிக்கக் கூடியவர், என்னைத் தவிர வேறு ஒருவரும் இந்த உலகத்தில் கிடையாது.

அவர்கள் சமூகத்தின் படுவைரிகளாக மாறி விட்டார்கள். சட்டம் அவர்களைப்பார்த்து பயங்கரமாக உறுமுகிறது. சனதன சமுதாயம் "அவர்களை சும்மா விடுவோமோ?" என்று கர்ஜிக்கிறது.

இந்த நிலையில் அவர்கள் இருவரும் இன்ப வாழ்வு நடத்த வேண்டும்; சமூக சட்டங்களுக்கு சரணுகதியாகிக் கிடக்கும் கோழைகளை விட, எந்த விதத்திலும் சளைக்காமல் மனேகர வாழ்க்கையை அநுபவிக்கவேண்டும். இது தான் அவர்களுடைய அபிலாஷை.

இது நடக்குமா?..........ஈசா! நீதான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

* * * *

தமயந்தியை எனக்கு ரொம்ப காலமாகத் தெரியும். சிவராமனும் எனது பள்ளித் தோழன் தான். நாங்களெல்லோரும் ஒரே கிராமத்தில் இருந்ததால், ஒருவருக்கொருவர் நன்ருக அறிமுகமாகி இருந்தோம்.

இருந்த போதிலும் சென்ற இரண்டு வருஷத்திற்கு முன்பு வரையில், தமயந்தியைப்பற்றி நான் அவ்வளவாக நினைத்தது கிடையாது. சொல்லப் போனல், அவளை நான் நேரில் பார்ப்பது கூட அபூர்வம். பார்த்தாலும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளமாட்டோம்.

அந்தக் காலத்திலெல்லாம், தமயந்தி ரொம்பவும் அடக்கமான பெண் என்று பெயர் வாங்கி இருந்தாள். அதோடு அவளுடைய அப்பா ஒரு பெரிய மிராசுதார். அவர்கள் குடும்பம் என்ருலே ஊரில் அலாதி மதிப்புக் கொடுத்திருந்தார்கள்.

தமயந்தி நாலைந்து வருஷங்கள் தான், பள்ளிக்கூடத்தில் படித்தாள் போலிருக்கிறது. அதன் பிறகு அவள் பெரிய பெண்ணுகிவிட்டபடியால் அவள் பள்ளிக்கூடம் போவது நின்றுவிட்டது.

* * * *

படிப்பை நிறுத்தி இரண்டொரு வருஷங்களில் தமயந்திக்குக் கல்யாணமாகி விட்டது. அவள் கணவன் முத்து கிருஷ்ணன் காலேஜில் பி.ஏ., வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய பெற்றோர்களும் பெரிய பணக்காரர்கள்தான் என்று கேள்வி.

* * * *

இது நடந்தது 1939ம் வருஷத்தில்! கல்யாணமான சிலமாதங்களுக்கெல்லாம், தமயந்தி புருஷன் வீட்டிற்குப் போய்விட்டாள்.

ஆனால், கணவன் வீட்டில், அவள் எதிர்பாராத முறையில், அவளுக்கு விபரீத வரவேற்புக் கிடைத்தது!

தமயந்தியின் மாமியார் கொஞ்சம் மமதை பிடித்தவள்! மாமனர் ஒரு சிடுமூஞ்சி!

இந்த நிலைமையில் கணவனுவது சற்று நல்ல குணமாக இருந்தால்தான், எந்தப் பெண்ணும் வாழ்க்கை நடத்த முடியும். ஆனால் தமயந்தியின் கணவனுடைய கதை ஒரு பெரிய ராமாயணமாக இருந்தது.

* * * *

தமயந்தியின் புருஷன் முத்துக்கிருஷ்ணன் ஒரு நவநாகரிகப் பைத்தியம். அவனுடைய வாழ்க்கை லட்சியமெல்லாம் மேல் நாட்டைப் பார்த்து அப்படியே "காப்பி" அடித்து வாழ்க்கை நடத்தவேண்டும் என்பதுதான்.

ஆங்கில நாவல்களை ஏராளமாகப் படித்து, அவற்றில் வரும் கதா நாயகர்களைப் போல, தானும் புரட்சிகரமான வாழ்க்கை நடத்த வேண்டுமென்று ஆசைப்பட்டான் முத்துக்கிருஷ்ணன்.

மேல் நாடுகளில் நடப்பதைப் போல, தானும் சுயேச்சையாக யாராவது ஒரு பெண்ணைத் தேடிப் பிடித்து, கடைசி வரையில் காதலித்து அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும்! அவள் அப்படி கல்யாணம் செய்து கொள்ள மறுத்தால், அவளுக்குப் பிடித்தவனை தேடிக் கொண்டு வந்து அவர்கள் இருவருக்கும் கல்யாணத்தை நடத்திவைத்து, அவர்கள் எதிரில் நின்று 'மளமள'

வென்று கண்ணீர் வடிக்க வேண்டும்! அதுவும் அசாத்தியமானல் பேசாமல், யுத்தத்தில் போய்ச் சேர்ந்து விடுவதுதான் முடிவு!

* * * *

இப்படிப்பட்ட 'உன்னதமான' லட்சியங்களுடன் வாழ்க்கை நடத்த ஆசைப்பட்ட முத்துகிருஷ்ணனை கொஞ்சங்கூடக் கலந்துகொள்ளாமல் அவன் தந்தை அவனுக்கு தமயந்தியை கல்யாணம் செய்து வைத்து விட்டார். தந்தையிடம் எதிர்த்துப் பேச தைரியமில்லாத முத்துகிருஷ்ணனல் அந்தக் கல்யாணத்தைத் தடைசெய்ய முடியவில்லை. ஆகவே அவனுக்கு தமயந்தியோடு வாழ்க்கை நடத்தவேண்டும் என்ற ஆர்வமே இல்லாமல் போய் விட்டது.

இன்னும் பார்க்கப் போனல், தனது வாழ்க்கை லட்சியத்திற்கே உலை வைக்க வந்தவள் என்று தமயந்தி மீது வெறுப்புக் கூடக் கொண்டான் என்று சொல்ல வேண்டும்..................

இருந்த போதிலும், முத்துகிருஷ்ணன் மனம் ஒடிந்து போய் விடவில்லை. தன்னுடைய 'மகத்தான' லட்சியத்தை மறந்து விடவும் இல்லை! தமயந்தி எக்கேடு கெட்டுப் போனலும், தான் ஒரு "லட்சியத் திருமணம்" செய்தே ஆக வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

அதன் விளைவாக அவன், தன் காலேஜில் படித்துக் கொண்டிருந்த கல்யாணியின் மீது அடங்காத "உண்மைக் காதல்" கொண்டான்! இம்மாதிரி முத்துகிருஷ்ணன் தன்னைக் காதலிக்கிருனென்பது கல்யாணிக்குத் தெரியவே தெரியாது! கல்யாணிக்கே தெரியாமலிருக்கும் பொழுது அவளுடைய தந்தை ஆத்மனதய்யருக்கு இந்த 'எழவெல்லாம்' எங்கே தெரியப் போகிறது!

ஆகவே கல்யாணி பாதிப் படிப்பு படித்துக் கொண்டிருக்கும் பொழுது அவளுக்குத் திடீரெனத் திருமணத்தைச் செய்து வைத்து, அவள் பள்ளிப் படிப்புக்கும், முத்துகிருஷ்ணனின் காதலுக்கும், சேர்த்து, ஏக காலத்தில் ஒரு சமாதி கட்டிவிட்டார்!

முத்து கிருஷ்ணனின் முதல் இரண்டு ஆசைகளும் நிர்மூலமாகிவிட்டன. ஏற்கனவே நாலைந்து "மறைகள் கழன்றிருந்த" அவனுக்கு இப்பொழுது அடியோடு 'ஸ்குரூ லூஸாகி' விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த நிலைமையில் காலேஜில் அவனுக்கு இருப்புக் கொள்ளாமல், எங்கோ, பம்பாய் பக்கம் கிளம்பி ஓடி விட்டான். அதன் பிறகு அவன் பட்டாளத்தில் சேர்ந்து எதிரிகளை விரட்டினனா, அல்லது 'மறை கழன்று' தெருவில் அலையும் பொழுது அவனை, வாலுப் பட்டாளங்கள் விரட்டினவா, என்பதைப்பற்றி யாருக்கும் தெரியாது!

* * * *

இப்படிப்பட்ட ஒரு "கிறுக்கு"க்கு மனைவியான தமயந்தியின் நிலைமை, மிகவும் பரிதாபகரமாக மாறிவிட்டது. சாதாரணமாக எல்லாக்குடும்பங்களிலும் உள்ள பெண்கள் பேசுவதைப் போலவே, தமயந்தியின் மாமியும் "தமயந்தி அடியெடுத்து வைத்த நேர விசேஷத்தால்தான், தங்கள் குடும்பமே சின்ன பின்னமாகப் போய்விட்டதாக" ஜாடையாகவும் (தமயந்திக்கு) நேரிலும் பேசி வந்தாள்.

வரவர, மாமியாரின் பேச்சுக்களையும் மாமனாரின் 'சிடுசிடுப்பை'யும் சகிக்க முடியாது என்ற நிலைமை தமயந்திக்கு ஏற்பட்டுவிட்டது. இந்த நிலைமையில், பிறந்த வீட்டுக்குப் போவதைத் தவிர, அவளுக்கு வேறு ஒரு வழியும் இல்லை.

எனவே, தான் படும் கஷ்டங்களையும், தனது கணவன் ஓடிப் போனதால் ஏற்பட்ட நிலைமையையும், மனம் உருகும் வண்ணம் விவரித்துத் தன் பெற்றோர்களுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டாள்.

கடிதம் போட்ட மூன்றாவது நாளே, தமயந்தியின் தந்தை வந்து, அவளை வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய் விட்டார். அப்பொழுது, சம்பந்திகளுக்குள் பேச்சு வார்த்தை தடித்து, மனக் கசப்பு அதிகமாகி விட்டதாகவும் தெரிகிறது.

* * * *

வருஷங்கள் நான்கு, இறக்கை கட்டிக்கொண்டு பறந்தன. தாய் வீட்டிற்கு வந்த தமயந்தி (மாமியார் வீட்டில் இருந்ததைவிட எந்த விதத்திலும்) அதிக சந்தோஷத்துடன் இருக்க முடியவில்லை. பாலைவனம் போல வரண்டு போன வாழ்க்கையில் உழன்று கொண்டிருந்த அவள் மனம், தனக்கு அருகாமையில் மற்ற பெண்கள் நடத்தி வரும் மனோகரமான வாழ்க்கையைக் கண்டதும் துடி துடித்தது.

தன்னுடைய இளமையும் அழகும் குரங்கின் கையில் சிக்கிய பூமாலையைப் போல, முத்துகிருஷ்ணனால் பாழாக்கப்பட்டதே என்று நினைக்கும் பொழுதெல்லாம் அவள் நெஞ்சே வெடித்து விடும் போலிருக்கும்.

* * * *

ஊருக்குப் போனதிலிருந்து தமயந்தியைச் சுற்றி நடை பெற்ற ஒவ்வொரு சம்பவமும் அவள் மனதை சித்ரவதை செய்வதாகவே இருந்தது.

தமயந்திக்கு உடன் பிறந்த சகோதரிகள், சரோஜினி, கமலா, என்று இரண்டு பேர் இருந்தார்கள். அவர்களுக்கும் மணமாகி விட்டது.

சரோஜினி, தமயந்தியின் இளைய சகோதரி. தமயந்தியைவிட அவள் அழகாக இருப்பாள் என்று சொல்ல முடியாது. அவள் கணவன் மூன்று முறை 'மெட்ரிகுலேஷன்' வகுப்பில் படையெடுத்துத் தோல்வி அடைந்தவன். அதோடு ஒரு கிராமவாசி. நிலம் நீச்சுகளைக் கவனித்துக் கொண்டு, சொந்த கிராமத்திலேயே இருந்து வருகிறான்.

சரோஜினியின் புருஷன் ஊரிலிருந்து வந்து விட்டால், தமயந்தியின் வீடு, ஏக அமர்க்களமாக இருக்கும். சரோஜினியும் அவனும், ஹாலில் உள்ள அறையில், பொழுதெல்லாம் உட்கார்ந்து கொண்டு பேசுவார்கள், பேசுவார்கள், அப்படிப் பேசுவார்கள்!..............என்னதான் இருக்குமோ, சதாகாலமும் பேசுவதற்கு!

இடையிடையே அவர்கள் அறையிலிருந்து 'கலகல' வென சிரிப்புச் சப்தம் கேட்கும். பிறகு கேலி; பரிகாசம்; இப்படி ஒரே கொம்மாளமாக இருக்கும்.

அறையைவிட்டு எழுந்து, குளிப்பதற்கு அவன் வெளியே வந்துவிட்டால், சரோஜினி நிற்கிற நிலையை கண்கொண்டு பார்க்க முடியாது.

அவன் குளிப்பதற்கு இறங்கும் முற்றத்தில் ஒரே பாசியாக இருக்கிறதே, என்று வேலைக்காரியைத் திட்டுவாள். (உள்ளபடியே அதைப்போல் பத்துமடங்கு அதிகமாக பாசி பிடித்திருந்த காலத்தில்கூட, அவளே அந்த முற்றத்தில் ஆபத்து ஏற்படாமல் குளித்திருக்கிறுள்!) அவன் முற்றத்தில் இறங்கும் பொழுது "ஜாக்கிரதையாக இறங்குங்கள்; வழுக்கிவிடப் போகிறது!" என்று துடிப்பாள்.

அவன் தலை துவட்டிக் கொள்வதற்கு, தன் தந்தையின் விலையுயர்ந்த அங்க வஸ்திரத்தைப் பிரித்துக் கொண்டு வந்து வைப்பாள்! குளித்து முடிப்பதற்குள் "சோப்பு வேண்டுமா? வாசனைப் பவுடர் வேண்டுமா?........ சந்தனுதித் தைலம் கொஞ்சம் தலையில் தடவிக்கொள்ளுங்கள்; குளிர்ச்சியாக இருக்கும்" என்றெல்லாம் ஓயாமல் ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பாள்.

குளித்து முடிந்து சாப்பிட வந்துவிட்டால் அவள் பேச்சும், செய்கையும் ஒரே குதூகலமாக இருக்கும். சாப்பாட்டிற்குப் பிறகு புருஷனும் மனைவியும் மறுபடியும் அரட்டை அடிக்கப் போய் விடுவார்கள்.

* * * *

தமயந்தியோடு பிறந்த தம்பி ஒருவன் இருக்கிறுன். அவன் சரோஜினிக்கும் இளையவன். சாயங்காலமானதும், அவனை ஹோட்டலுக்குப் போகும்படி சரோஜினி ஒரேயடியாக 'நாட்டாண்மை' செய்வாள்.

கொஞ்சநேரம் தாமதமாகி விட்டால் அவள் போடுகிற சப்தத்தைப் பார்க்க வேண்டுமே! ஹோட்டலுக்குப் போய்த் திரும்பியதும், தன் கணவன் 'தம்பிப்பயலுக்கு' நாலணு இனும் கொடுப்பதைப் பார்ப்பதில் அவளுக்கு எவ்வளவோ பெருமை!

இவற்றையெல்லாம் தமயந்தி கவனித்துக் கொண்டே இருப்பாள். தன் தங்கை இவ்வளவு சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவதைப் பார்ப்பதில் அவளுக்கும் எவ்வளவோ மகிழ்ச்சிதான்.

இருந்தபோதிலும், சரோஜினியின் ஒவ்வொரு அசைவும், தமயந்திக்கு, தன் பாழ்பட்ட வாழ்க்கையின் நினைவைத் தூண்டிவிட்டு, பெருமூச்சு விடச் செய்யும்.

சரோஜினியைவிட, தான் எவ்வளவோ அழகியாக இருப்பது தமயந்திக்கு நன்றாகத்தெரியும். அவள் கணவன் மட்டும் அவளிடம் ஒழுங்காக நடந்து கொண்டிருந்தால், அவனுக்கு எப்படி எப்படியோ பணிவிடைகள் செய்திருப்பாளே! முற்றத்திலிருக்கும் பாசியை சுத்தம் செய்ய, வேலைக்காரியையா, கூப்பிடுவாள்? தானே – தன் கையினலேயே—அதைச் சுத்தம் செய்வாளே! குளித்தவுடன் ஈரத்தைத் துவட்டிக்கொள்ள, தன் விலையுயர்ந்த ஜரிகைச் சேலையையே கொண்டுவந்து கொடுப்பாளே! ஹோட்டலிலிருந்து 'டிபன்' வரவழைத்துக் கொடுத்தால் அவன் உடம்பு கெட்டு விடும் என்று, தன் கையினல் வீட்டில், காபி பலகாரம் தயாரித்துக் கொடுக்கத் தவறுவாளா?

இப்படி யெல்லாம் தன் கணவனுக்குப் பணிவிடை செய்ய வேண்டும்; தன் இருதயத்திலிருக்கும் அன்பை அளவில்லாமல் அள்ளிக் கொட்டி அவன் காலடியில் வீழ்ந்து கிடக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட தமயந்திக்கு தன் கணவனின் அருகில் இருக்கும் பாக்கியம்கூட, கிடைக்காமல் போய்விட்டது.

இதை நினைக்கும் பொழுதெல்லாம், அவள் இருதயம் சகிக்க முடியாத வேதனையை அடையும். "இதற்கு முடிவில்லையா, ஆண்டவனே?" என்று பகவானை மனம் நொந்து பிரார்த்திப்பாள்.

* * * *

எல்லாவற்றையும் விட, தமயந்தியின் மனதை நிரம்பவும் வேதனைப்படுத்தியது ஒரே ஒரு விஷயந்தான்.

அவள் தம்பி, மற்ற இரண்டு சகோதரிகளையும் விட, தமயந்தியின் மேல் தான் 'உயிராக' இருப்பான். பள்ளிக்

கூட நேரம் போக, மற்ற சமயங்களிலெல்லாம், தமயந்தியின் மடியிலேயே வந்து படுத்துக் கிடப்பான்.

தன்னுடைய பள்ளிக்கூட பிரதாபங்களையும், விஷமக்கார விசுவநாதனுக்கு, தான், புத்திகற்பித்ததையும், அவனைச் சரியானபடி 'நிமிர்த்துக்கட்டியதை'யும் அவளிடம் கதை கதையாய்ச் சொல்லுவான்.

வீட்டு அலுவல்களைப்பார்த்த நேரம் போக, மற்ற நேரங்களில் தமயந்தி தன் தம்பியோடு கதை பேசிக் கொண்டிருப்பதற்கே பொழுது சரியாகப் போய்விடும்.

தமயந்தியும், தன் தம்பியிடம் அளவிட முடியாத பிரியம் வைத்திருந்தாள். அவனை யாராவது ஒன்று சொல்லி விட்டால், அவளுக்குப் பொல்லாத கோபம் வந்து விடும்.

சரோஜினியின் புருஷன் அங்கு வந்திருந்த சமயத்தில், அவள் தம்பி ஒரு நாள் அவசர அவசரமாக தமயந்தியிடம் ஓடிவந்தான். "அக்கா! அக்கா! அத்திம்பேர் (அத்தான்) ஒரு ரூபாய் கொடுத்தார் அக்கா!" என்று குதூகலத்தோடு சொல்லிவிட்டு சந்தோஷம் தாங்காமல் கூத்தாடினன்.

தமயந்திக்கு அவன் செய்கை 'சுறுக்' கென்று மனதில் தைத்தது. தன் கணவன் மட்டும் இருந்து அந்த ரூபாயைக் கொடுத்திருந்தால், அவளுக்கு எவ்வளவு பெருமையாக இருந்திருக்கும்; தன் தம்பி சந்தோஷப்படுவதைப் பார்க்க அவளுக்கு எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்!

ஆனல் இன்று அந்தப் பெருமையை சரோஜினி அடித்துக்கொண்டு போகிருள். இதற்கு யார் காரணம்?

தமயந்தியா?.........

*   *   *   *

இது மிகவும் சிறிய நிகழ்ச்சிதான் என்ருலும், இதை நினைக்கும் பொழுதெல்லாம், தமயந்தியின் மனம் சகிக்கவொண்ணுத கஷ்டத்தை அடையும்.

தன்னைவிட வயதில் குறைந்தவளும் அழகில் மட்டமானவளுமான சரோஜினி, தன் கணவனல் மகிழ்ச்சியும்

பெருமையும் அடையும் பொழுது, தனக்கு மாத்திரம் அந்த பாக்யம் அற்றுப் போனதை நினைத்து அவள் நெஞ்சு அலறும்.

* * * *

சரோஜினியின் கணவன் வரும் பொழுது தான் இந்த நிலைமை என்றால், கமலாவின் புருஷன் வந்திருந்த பொழுது நடந்த ஒரு சம்பவம், அவள் இதயத்தைப் பிளந்து விட்டது.

என்னவென்றால், தமயந்தியின் வீட்டுக் கூடத்தில் ஒரு ஊஞ்சல் போட்டிருந்தது. அதில் உட்கார்ந்து தமயந்தி ஒரு நாள் ஏதோ படித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது கமலாவும் அவள் கணவனும் ஹாலில் உள்ள ரூமில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கொஞ்ச நேரத்திற் கெல்லாம், கமலா அறையை விட்டு வெளியே வந்து, தன் தாயிடம் என்னவோ சொன்னாள். உடனே தமயந்தியிடம் அவள் தாயார், "தமயந்தி! உன் அத்திம்பேர் ஊஞ்சலுக்கு வர வேண்டுமாம். நீ கொஞ்சம் இந்தப் பக்கம் எழுந்து வந்துவிடு" என்று சொன்னாள்.

தமயந்திக்கு அன்று என்னவோ அலுப்பாக இருந்தது. "ஒரு இடத்தில் உட்கார விடமாட்டீர்கள்; சட்!" என்று என்னவோ முணுமுணுத்துக் கொண்டு எழுந்தாள்.

உடனே கமலாவுக்கு ரோஷம் தாங்கவில்லை. "கொடுத்து வைத்தவர்கள் அனுபவிக்கிறார்கள்; அதற்கு நாம் பொறாமைப்பட்டு என்ன செய்வது?" என்று துடுக்காகச் சொல்லிவிட்டாள்.

இதைக் கேட்ட தமயந்தி ஸ்தம்பித்துப் போய்விட்டாள். பொறாமையினால், கமலா மேல், தான் விரோதம் பாராட்டுவதாக அவள் சொன்னது தமயந்தியின் மனதில் சம்மட்டி கொண்டு அடித்ததைப் போலிருந்தது.

ஒன்றுமே பதில் சொல்லாமல், 'விறுவிறு' வென்று கொல்லைப்புறம் போய்விட்டாள். தோட்டத்தில் போய்,

ஒரு இடத்தில் உட்கார்ந்து, ஆத்திரம் தீருமட்டும் அழுதாள்.

*   *   *   *

வெகுநேரம் கழித்து, தோட்டத்தைவிட்டு எழுந்து வீட்டுக்குப் போகக் கிளம்பினுள். அப்பொழுது பக்கத்துத் தோட்டத்தில் ஏதோ அரவம் கேட்டது. 'சட்'டென்று திரும்பிப் பார்த்தாள்.

யாரோ ஒரு வாலிபன், செடி மறைவில் போய்க் கொண்டிருந்தான். யார் போகிறுர்களென்று பார்க்கலாமென தமயந்தி நின்று கவனித்தாள்.

செடி மறைவை விட்டுத்தாண்டி அப்பால் போகும் பொழுது அந்த ஆளின் முகத்தை நன்ருகப் பார்த்த தமயந்தி திடுக்கிட்டு விட்டாள். ஏனென்ருல் தனது வகுப்பில் தன்னேடு படித்த சிவராமன் தான் போய்க் கொண்டிருந்தான்.

சிவராமனைப் பார்த்ததும் அவள் திடுக்கிட்டுப் போனதற்குக் காரணம் இருக்கிறது. ஏனென்ருல் சிவராமனை அவள் பார்த்துக் கிட்டத்தட்ட ஐந்தாறு வருஷங்களாகி விட்டன.

இடைக் காலத்தில், அவன் சென்னையில் ஏதோ வேலையில் இருக்கிருன் என்று அவள் கேள்விப்பட்டிருக்கிருள். இப்பொழுது அவன் ஒரேயடியாக வளர்ந்து விட்டான். முன்னிருந்ததைவிட எவ்வளவோ நன்ருக இருக்கிருன் என்று கூட தமயந்தி எண்ணினுள்.

தமயந்தி நிற்பதை சிவராமன் கவனிக்கவில்லை. அவன் நேராகத் தோட்டத்தின் மற்ருெரு கோடியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். அவன் அந்தக் கடைசி போகும் வரையில், அவனையே பார்த்துக்கொண்டு நின்ருள் தமயந்தி.

தற்செயலாக சிவராமன் திரும்பிப் பார்த்தான். தமயந்தியின் பார்வையும் அவன் பார்வையும் சந்தித்தன.

தமயந்தி 'சட்'டென்று திரும்பி வீட்டிற்குள் அதிவேக மாகப் போய் நுழைந்து விட்டாள்.

* * * *

அன்று இரவு படுக்கையில் படுத்த தமயந்திக்கு, வெகு நேரம் வரையில் தூக்கமே பிடிக்கவில்லை. கமலா வின் வார்த்தைகள் அவள் மனதை ரம்பம் போட்டு அறுத்த வண்ணமிருந்தன.

கமலாவைவிட தான் எவ்வளவோ அழகியாக இருந்தும், தனக்குக் கிட்டாத பாக்கியங்களெல்லாம் கம லாவுக்குக் கிடைக்கிறது. அதோடு கமலாவாலேயே தனக்கு அவமானமும் ஏற்படுகிறது என்று நினைத்ததும் தமயந்தியின் கண்களிலிருந்து 'பொலபொல' வெனக் கண்ணீர் வடிந்தது.

தன் கணவன் மட்டும் தன்னேடு இருந்தால், தனக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்குமா என்று அவள் மனம் துடித்தது.

படுக்கையில் படுத்த படியே கண்களைச் சிறிது மூடி தன் கணவனின் உருவத்தை மானசீகமாகப் பார்த்தாள். சட்டென்று அந்த உருவம் மறைந்து, சிவராமன் உருவம் காட்சி அளித்தது.

ஒரு விநாடி அந்த உருவத்தைப் பார்த்தாள். உடனே அவள் உடல் சிலிர்த்தது. "ஆண்டவனே! இந்தப் பாப நினைவை யெல்லாம் எனக்கு ஏற்படுத்தாதே," என்று நடுங்கிக் கொண்டே மனதிற்குள் பிரார்த்தனை செய்தாள்.

ஆனல் அவள் எவ்வளவுக்கெவ்வளவு அந்த உருவத் தைப் பார்க்கக்கூடாது என்று கருதினளோ, அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக சிவராமன் அவள் மனக் கண்களின் முன் தோன்றிக்கொண்டேயிருந்தான்.

இரவு முழுவதும், மனதோடு போராடிவிட்டு, விடியும் நேரத்தில், தமயந்தி நன்ருக அயர்ந்து விட்டாள்.

* * * *

காலையில் அவள் எழுந்திருக்கும் பொழுது, விடிந்து வெகு நேரமாகி விட்டது. இரவு ரொம்ப நேரம் தூங்கா

ததால், அவள் கண்கள் 'செக்கச் செவேலென' சிவந்து கிடந்தன.

படுக்கையை விட்டு எழுந்திருந்து தமயந்திக்கு ஒரு வேலையிலும் புத்தி செல்லவில்லை. குளத்திற்குப் போய்க் குளித்துவிட்டு வரலாம் என்று நினைத்துக் குடத்தை எடுத்துக் கொண்டு கிளம்பினள்.

அப்பொழுது காலை ஒன்பது மணி இருக்கும். சாதாரணமாக கிராமங்களில் அதிகாலையிலேயே எழுந்து, எல்லோரும் காலைக் கடன்களை முடித்து விடுவார்கள். ஆகவே அந்த நேரத்திற்கு ஒருவரும் குளக் கரையில் இருக்க மாட்டார்களென்று நினைத்துக் கொண்டுதான் தமயந்தி குளிப்பதற்குக் கிளம்பினள்.

அவள் எதிர்பார்த்தது போலவே அங்கே யாரும் இல்லை. சோப் பெட்டியையும் குடத்தையும் (துணி துவைக்கும்) கல்லின்மேல் வைத்துவிட்டு குளத்தில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்தாள்.

தமயந்தி தண்ணீரில் இறங்கிய சில நிமிஷங்களுக்கெல்லாம், அவள் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. என்னவென்றல் (பட்டண வாசத்தில் ஏற்பட்ட பழக்கப்படி) அப்பொழுதுதான் தூங்கி விழித்துக் குளிக்க வந்திருந்தான் சிவராமன்!

சிவராமனைப் பார்த்தவுடன் தமயந்தியின் மனதில் ஒரு விவரிக்க இயலாத உணர்ச்சி தோன்றியது. ஒரு பக்கம் அவனைக் கண்டதால் ஏதோ ஒருவகைக் குதூகலமும், மற்ருெரு பக்கம் கலவரமும் ஏற்பட்டு அவளை வதைத்தன.

தமயந்தியைப் பார்த்ததும் சிவராமன் முகத்திலே மகிழ்ச்சிக்களை படர்ந்தது. அவளோடு பேசவேண்டுமென்று அவன் உள்ளம் தவித்தது. ஆனல் ஒருபுறம் கூச்சம் வந்து கௌவிக்கொண்டது.

அவளோடு பேச வேண்டுமானல், ஏதாவது ஒரு காரணம் கண்டுபிடிக்க வேண்டும்! எந்த விஷயத்தில் பேச்சை ஆரம்பிப்பது என்று தீர்மானிக்க அவனல் முடியவில்லை.

இந்தச் சமயத்தில் யதேச்சையாக அவன் பார்வை துணி துவைக்கும் கல்லின்மீது சென்றது. அதில் தமயந்தியின் சோப் பெட்டியும் குடம், துணி முதலியவை களும் இருந்தன.

சிவராமன் உடனே, தன் மேலே போட்டிருந்த துண்டை எடுத்து தண்ணீரில் நனைத்தான். பிறகு தம யந்தியின் பக்கமாகத் திரும்பி, "கொஞ்சம் அந்த சாமான்களை, கல்லைவிட்டு எடுக்க முடியுமா?" என்று மெதுவாகக் கேட்டான்.

தமயந்திக்கு பதில் சொல்ல நாவெழவில்லை. நின்ற இடத்தை விட்டு நகரக்கூட முடியாமல் அவளுக்கு ஒரே வெட்கமாக இருந்தது.

தான் கேட்ட கேள்விக்குப் பதில் வராததைக் கண்ட சிவராமன், கொஞ்சம் துணிச்சலுடன், "பதில் வராவிட் டால், நானே எல்லாவற்றையும் தூக்கிக் கீழே போட்டு விடுவேன்!" என்றான்.

இதைக் கேட்டதும் பெண்களுக்கு இயற்கையாக உள்ள அகந்தை உணர்ச்சி மேலெழும்பி, தமயந்தியின் நாணத்தைச் சிதற அடித்துவிட்டது.

"போட்டால், தெரியும்!" என்று சட்டென்று தன்னையறியாமல் பதில் சொல்லிவிட்டாள்.

"என்ன நடந்துவிடும்?" என்றான் சிவராமன்......... இருவரிடையேயும் பேச்சு வளர்ந்தது!........

* * * *

அன்றைக்குப் பகல் முழுவதும் தமயந்திக்கு மனம் 'திக் திக்' கென்று அடித்துக்கொண்டது. தான் அவ் வளவுதூரம் சிவராமனிடம் பேச்சு வைத்துக்கொண்டது சரிதானா, என்று அவளால் தீர்மானம் செய்ய முடிய வில்லை.

அன்றிரவும் தமயந்திக்குத் தூக்கம் பிடிக்கவே இல்லை. சிவராமனின் அழகிய முகமும், அவனுடைய குறும்புப் பார்வையும் அவள் மனக்கண்முன் தோன்றிய வண்ண மிருந்தன.

அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையிலும் இருந்த கிண்டலும், கேலியும், அவள் காதருகே ரீங்காரமிட்டபடி இருந்தன.

நேரம் செல்லச் செல்ல, தமயந்தியின் மனம் எப்படி யெல்லாமோ வேலை செய்தது.

தன் கணவன் மட்டும், சிவராமன் இருப்பதைப் போல அவ்வளவு அன்பாக இருந்தால், அவளுக்கு நிகர் இந்த உலகத்தில் யார் இருக்க முடியும்? ஆனல் இன்று அவன் ஒருவனுடைய புறக்கணிப்பால், தன் வாழ்வே சீர்குலைந்து சின்னபின்னமாகி விட்டதே என்று நினைத்ததும், தன் கணவன் மீது அவளுக்கு வெறுப்புக் கூடத் தோன்றியது.........

இப்படி என்னென்னவோ யோஜித்துக்கொண்டே, அன்று இரவு முழுவதையும் தூக்கமில்லாமலே கழித்தாள். மறுதினம் காலையில் அவள் நேரத்தோடு எழுந்துவிட்டாள். இருந்த போதிலும், அன்றைக்குக் குளிக்கப் போகும் பொழுது காலை ஒன்பது மணியாகிவிட்டது.

தமயந்தி எதிர்பார்த்தது போலவே, சிவராமனும் அந்த நேரத்திற்குக் குளக்கரைக்கு வந்துவிட்டான்!

முதல் நாளைப் போலில்லாமல், அன்றைய தினம், இரண்டு பேரும் கலகலப்பாகப் பேசிக்கொண்டார்கள். என்னென்னவோ வம்பளந்துவிட்டு, தமயந்தி வெகு நேரங்கழித்து வீட்டிற்குத் திரும்பினுள். என்றைக்கும் கேட்காத அவள் தாயார் கூட, "ஏண்டி, இவ்வளவு நேரம்?" என்று கோபித்துக்கொண்டாள்.

அன்று இரவு தான் தமயந்திக்குத் தன்னுடைய உண்மை நிலைமை புரிந்தது. சமூகத்தின் கட்டுப்பாடு என்ற வேலியை முறித்துக்கொண்டு, தான் வெகு தூரம் போக முயலுவதை அவள் உணர்ந்துகொண்டாள்.

தனக்கு சிவராமன் மீது ஏற்பட்டிருக்கும் பாசம், கட்டுப்படுத்த முடியாத காதல் உணர்ச்சிதான், என்று அவள் புரிந்துகொண்டாள்...........

*   *   *   *

............சிவராமனை, தான் காதலிப்பதோ, அவனோடு வாழ்க்கை நடத்த ஆசைப்படுவதோ, எவ்வளவு அபாயகரமானது என்று அவளுக்குத் தெரியும். சிவராமனை அவள் அடைய வேண்டுமானல், அதற்காக எப்படிப்பட்ட கொடிய தியாகங்களுக்கும், தான், தயாராக இருக்க வேண்டும் என்பதையும் அவள் அறிவாள்.

இதற்காக அவள் சமூகத்தை எதிர்க்கவேண்டும். சட்டத்துடன் போராடவேண்டும். தன் பெற்றோர், உற்றார் எல்லோரையும் உதறிவிட்டு, தன்னந்தனியே சிவராமனை நம்பிப் புறப்பட்டு விடவேண்டும்!

சமூகத்தைப்பற்றி தமயந்திக்குக் கவலை இல்லை. சமூகம் எவ்வளவுதூரம் முதுகெலும்பற்றது, கையாலாகாதது, என்று அவளுக்குத் தெரியும்.

வாழ்க்கையில் கதியற்றுத் தவிக்கும் அபலைகள், கண்யமாக வாழ்க்கை நடத்த ஆசைப்பட்டு சமூகச் சட்டத்தைக் கொஞ்சம் மீறினாலும், அவளுக்கு "நடத்தை கெட்டவள்" "யோக்யதை அற்றவள்" என்று பட்டம் கட்டி, சமுதாயத்தின் மத்தியில் அவள் தலை நிமிர வொட்டாமல் அடித்து விடுகிறது இந்த சமூகம்! ஆனால் அதே சமயத்தில், கலை என்ற பெயரால், பகிரங்கமாக நடைதவறி நடக்கும் பல பரத்தைகளுக்கு அலாதி மதிப்புக் கொடுத்து வைத்திருக்கிறது!

கணவனை இழந்த அபாக்கியவதிகளாகட்டும், அல்லது கணவனால் நிராகரிக்கப்பட்ட அபலைகளாகட்டும், அவர்கள் உலக இன்பத்தை அனுபவிக்க நேர்மையான முறையில் ஒருவனோடு வாழ்க்கை நடத்துவதை, சமூகம் அக்ரமம் என்கிறது; அதைக் கேவலம் என்கிறது.

ஆனால் கலையின் பெயரால் காமலீலைகள் நடத்தி, முறை, ஒழுங்கு, நியமம் இவற்றையெல்லாம் சமாதி கட்டிவிட்டு சபைக்கு முன்னால் வரும் பெண்களை இந்த சமூகம் தாங்குகிறது. அவர்களை வானளாவப் புகழுகிறது!

சினிமாவில் தான் ஆகட்டும்; எவ்வளவோ அக்கிரமங்கள் நடக்கவில்லையா? பிற ஆடவர்களோடு, லஜ்ஜையின்றி பல பெண்கள் சல்லாபிக்கவில்லையா? அவர்களை

யெல்லாம் இந்த சமூகம் என்ன செய்து விட்டது? அவர்களை ஒதுக்கி வைத்து விட்டதா? வெறுத்துத் தள்ளி விட்டதா?...............

இப்படி விவஸ்தை கெட்டு நடககும் சமூகத்திற்கு நாம் எதற்காக அஞ்சவேண்டும் என்று தமயந்தி நினைத்தாள்.

அடுத்தபடி சட்டத்தைப் பற்றியும் அவளுக்குக் கவலை இல்லை. இந்தச் சட்டம் அவளைக் கோர்ட்டுக்கு இழுக்கலாம். பொது மக்கள் முன்னிலையிலே அவளை அவமானப்படுத்தலாம். ஒழுக்க முறை தவறி நடந்தாள் என்று சிறைக்கு அனுப்பலாம்........

........இவ்வளவுதானே! தாராளமாகச் செய்யட்டும்!.... இந்தச் சட்டம் தனது கைவரிசையை தமயந்தியிடம் காட்டுவதற்குக் கொஞ்ச நாட்களாவது பிடிக்காதா?

கொஞ்ச நாட்கள் கூட வேண்டாம். ஒரு நாளாவது தாமதமாகாதா? அந்த ஒரு நாள் அவள் சிவராமனோடு சேர்ந்து வாழ்க்கை நடத்துவாளல்லவா? அந்த ஒரு நாளில், தன் இதயத்தையே திறந்துவிட்டு அவன் காலடியில் தன் அன்பைப் பொழிந்துவிட முடியாதா? அந்த ஒரே தினத்திற்குள், விதியினல் தீய்ந்துபோன தனது வாழ்க்கையை அவனிடம் கண்ணீர் பொழிய எடுத்துக் கூறி, அவன் ஆறுதலை—அவனது அரவணைப்பை—பெற்றுவிட முடியாதா? அந்த ஒரே தினத்தில் அவனோடு ஆசை தீரப் பேசி, மனம் விட்டுக் கொஞ்சி, குறும்பாகச் சண்டை வளர்த்து, அவன் கோபப்பட்டால், "என்னை மன்னியுங்கள்" என்று அவன் காலில் முகத்தைப் பதித்துக் கதறி, இன்னும் எப்படி யெப்படி யெல்லாமோ நடந்துகொள்ள முடியாதா?

........போதும் அந்த ஒரே தினம்! அந்த ஒரு நாளைய இன்ப வாழ்வுக்காக அவள் எத்தகைய கொடுமையையும் சகிக்கத் தயார்! அந்த ஒரு நாளைய வாழ்வு அவளுக்குக் கிடைத்தால், இந்த உலகமெல்லாம் கூடி அவளை அவமானப் படுத்தினலும் அவளுக்கு லட்சியமில்லை. சட்டத்தின் பெயரால் அவளுக்கு ஜெயில் வாசம் கிடைத்தாலும்

அக்கரை யில்லை. அல்லது மரணமே தான் கிட்டட்டுமே! அதையும் அவள் மனமகிழ்ச்சியோடு—பூரிப்போடு வர வேற்கத் தயாராக இருந்தாள்.

எனவே சட்டத்தைப் பற்றிக்கூட தமயந்திக்குக் கவலையில்லை. ஆனால் பெற்றோர்....?........

பெற்றோர்!........சென்ற பதினெட்டு வருஷ காலமாக அவளைக் கண்போலக் காப்பாற்றி வந்த பெற்றோர்கள் !.... தமயந்தி, சிவராமனுடன் சேர்ந்து ஓடி விட்டால், அவர் களுக்கு எவ்வளவு அபகீர்த்தி! எவ்வளவு கேவலம்!........ அதன்பிறகு அவர்கள் வெளியே தலைகாட்ட முடியாது. அவமானத்தால் குன்றி, நடைப் பிணமாக அவர்கள் மாற வேண்டி வந்து விடும்! அவர்களை அப்படித் தவிக்க விட்டுச் செல்லலாமா?

அவர்கள் தமயந்தியிடம் அன்பாக இல்லையா? தம யந்தியின் நைந்து போன வாழ்க்கையைப் பற்றி அவர்கள் மனம் உருகித் துடிக்க வில்லையா?.......

அவர்கள் அன்பாக இருப்பதை தமயந்தி மறுக்க வில்லை. ஆனால் அவர்கள் அன்பு அவளுக்கு ஒரு விதத் திலும் ஆறுதல் அளிக்கக் கூடியதாக இல்லையே! அவளை மணமே செய்து கொடுக்காமல் வீட்டில் கன்னிகையாக வைத்திருந்தாலும், அவர்கள் அன்பு ஒன்றிலேயே அவள் வாழ் நாளைக் கழித்து விடலாம்.

ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. அவளை ஒரு உதவாக்கரையிடம் கொண்டு போய்த் தள்ளி, அவள் வாழ்க்கையைப் பாழாக்கினார்கள். அவளை அந்தரத்தில் விட்டு அவன் ஓடிப் போனான்...........

ஓடிப்போய் விட்டானே என்று அவர்கள் என்ன செய்து விட்டார்கள்? அவளை அனாதை போலத் திக்கற்றுத் தவிக்கும்படி மாமியார் வீட்டிலேயே விட்டு வைத்திருந் தார்கள். அப்புறம், தன் பெற்றோர் வீட்டிற்கு வர, அவளாகவே கெஞ்ச வேண்டி இருந்தது........

வந்த பிறகுதான் ஆகட்டும்; தமயந்தி மீதுள்ள அன் பின் மிகுதியால், அவளது அவல வாழ்க்கையை நினைத்து

ஏங்கி, தங்களுடைய சுகத்தில் அவர்கள் எதைத் தியாகம் செய்து விட்டார்கள்?

அவர்கள் சந்தோஷமாகச் சாப்பிட வில்லையா? உல்லாசமாகப் பேச வில்லையா? நிம்மதியாகத் தூங்க வில்லையா?........இவை யெல்லாவற்றையும் விட, அவர்கள் —தமயந்தியின் தாயும் தந்தையும்—ஒருவரோடொருவர் பிரேமையுடன் கேலி செய்து கொள்ள வில்லையா? தமயந்திக்கு எதிரிலேயே அவர்கள் ஒருவருக்கொருவர் விளையாட்டாகப் பேசிக் குதூகலிக்க வில்லையா?........

இவற்றை யெல்லாம் நினைத்ததும், தமயந்தியின் கண்களில் நீர் ததும்பியது. தனக்குக் கிட்டாத இன்ப வாழ்க்கையை மற்றவர்கள் அனுபவிப்பதைப்பார்த்ததும், உலக முழுவதிலும் உள்ளவர்கள் எல்லோரும், சுயநல வாதிகள் தான், என்று முடிவு கட்டி விட்டாள்................

அதோடு, தன் பெற்றோர்கள், தன்னிடம் அன்பாக இருப்பதற்கும், சுயநலந்தான் காரணம் என்று தீர்மானித்து விட்டாள். அவர்கள் தன்னிடம் அன்பாக நடந்து கொள்ளா விட்டால், தான் எங்காவது ஓடிவிட்டால் பெரிய அவமானம் வந்து மூளுமே என்ற பயத்தினுல் தான், அவ்வளவு பிரியமாக நடந்து கொள்ளுகிருர்கள் என்று அவள் மனம் சொல்லியது.

* * * *

இப்படிப்பட்ட புரட்சிகரமான எண்ணங்கள் மேலெ மூம்பி அவள் மனதில் ஆக்கம் பெற ஆரம்பித்தன........

பொழுது விடிவதற்குள் அவள் செய்த முடிவு (சமூகச் சட்டப்படி) விபரீதமானது........

* * * *

எல்லோரும் எதிர்பாராத நிலையிலே, ஒரு நாள் திடுக்கிடத்தக்க செய்தியொன்று எங்கள் கிராமம் முழுவதும் பரவியது. தமயந்தி சிவராமனுடன் சேர்ந்து கொண்டு சென்னைக்கு ஓடி விட்டாள் என்ற செய்தி தான் அது!

அன்று முழுவதும் கிராமம் அமளி துமளிப்பட்டது. தமயந்தியின் பெற்றோர் அடைந்த துக்கத்தைப் பார்த்து யாராலும் சகிக்க முடியாது.

* * * *

ஆனல் தமயந்திக்கு அவர்களைப் பற்றி இப்பொழுது அக்கறையில்லை. அவளுக்கு இனி சிவராமன் தான் வேண்டும். அவனை அடைந்த பிறகு அவள் எதற்காகக் கவலைப்பட வேண்டும்?



நண்பனின் மனைவி



ஏழு வருஷங்களுக்கு முன்னால் நடந்த அந்த அபாக்கிய நிகழ்ச்சியை இன்றைய தினம் எனக்கு வந்த மண அழைப்பு மீண்டும் நினைவு படுத்தி விட்டது.

ஆலாலசுந்தரம், தான் மறு விவாகம் செய்து கொள்ளப் போவதாகவும், அதற்கு நான் அவசியம் வந்து சேரவேண்டு மென்றும் தனியாக ஒரு கடிதம் கூட எழுதி இருந்தான்.

அந்தக் கடிதத்தைப் படித்ததும் என் உடல் சிலிர்த்தது. என்மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்திருக்கும் ஆலாலசுந்தரத்திற்கு நான் இழைத்த துரோகத்தை நினைத்ததும் என் இதயம் ‘கிடுகிடு’ வென நடுங்கியது.

2

ஆலாலசுந்தரமும் நானும் சிறு வயதிலிருந்து இணை பிரியாத நண்பர்களாக இருந்து வந்தோம். திண்ணைப் பள்ளிக்கூடத்திலிருந்து சர்வ கலாசாலை வரையில் ஒன்றாகவே சேர்ந்து படித்த நாங்கள், உத்தியோகம் வகிக்கும் பொழுதுகூட, ஒரு இடத்தில் சேர்ந்துதான் இருந்தோம்.

தஞ்சை சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே, அவன் ஒரு கிளார்க். நான் ஒரு டைபிஸ்ட்.

ஆலாலசுந்தரத்தின் முதல் மனைவி ராஜம் நல்ல ரூபவதி. என் மனைவி லீலாவும் அப்படி ஒரு குரூபியல்ல.

எனவே சகல துறைகளிலும் சந்தோஷத்தை அநுபவித்து வந்த எங்களுக்கு இல்வாழ்க்கையிலும் ஒரு இன்பம் நிலவி இருந்ததாகத் தோன்றியது.

நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் மிகச்சமீபத்தில் குடியிருந்ததால், லீலா அவன் வீட்டிற்கு அடிக்கடி போவாள். ராஜம் அவளுடைய உயிர்த்தோழியாகி விட்டாள். ராஜமும் என் வீட்டிற்கு அடிக்கடி வருவதுண்டு.

எங்களுடைய வாழ்க்கைச் சக்கரத்திலே எவ்வித சிக்கலும் ஏற்படாமல் ஒரு வருஷம் கழிந்தது.

II

அன்றைய தினம் நான் ஆலாலசுந்தரத்தின் வீட்டிற்குப் போயிருந்தேன். ஏதோ ஆழ்ந்த சிந்தனையோடு உட்கார்ந்திருந்தான் அவன்.

"என்னடா? அபாரயோசனை செய்கிறாய்? " என்று விளையாட்டாக அவன் முதுகில் தட்டினேன்.

அவனுடைய தங்கை புருஷன் மிகுந்த உடல் அசௌகரியமாக இருக்கிறான் என்று தந்தி வந்ததாம். ஆகவே மைத்துனனைப் போய்ப் பார்த்துவர திருச்சி செல்ல வேண்டுமென்றும், தான் வரும் வரையில் வீட்டில் ராஜத்திற்குத் துணையாக இருக்க வேண்டுமென்றும் என்னைக் கேட்டான்.

"சரி" என்று சொல்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

அன்று மாலை 7 மணிக்கு தஞ்சையை விட்டுக் கிளம்பும் வண்டியில் அவன் திருச்சிக்குப் பிரயாணமானான்.

அவனை ரயிலேற்றி விட்டு, வீட்டிற்குப் போய்ச் சாப்பிட்டுத் திரும்புவதற்குள் இரவு வெகு நேரமாகி விட்டது.

* * * *

தன் வீட்டு வாயிற்படியில் நின்று கொண்டிருந்தாள் ராஜம். இதுவரையில் ராஜத்தை நான் உற்றுப் பார்த்தது கிடையாது. இன்று அவளை நான் நன்றாகப் பார்த்தேன். அவளது தோற்றத்தில் தோய்ந்து கிடந்த மோகனம் என்னை ஆச்சரியத்தால் திகைக்கச் செய்தது.

அவ்வளவு நாட்களும் கண்டறியாத ஒரு கவர்ச்சியை இன்றுதான் கண்டது போலிருந்தது.

"உங்களுக்காகத் தான் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று மிருதுவாகக் கூறிக் கொண்டே உள்ளே சென்ருள் ராஜம்.

அவளது குரலும் தோற்றமும் எனக்கு ஒரு புதுமையாக இருந்தது. அவளது ஒவ்வொரு அசைவும் என் மனதிலே என்னென்னவோ விபரீத கற்பனைகளை எழுப்பிய வண்ணமிருந்தது.

பலவாருக யோசித்துக் கொண்டே ஹாலில் நுழைந்தேன்.

வெளிக் கதவைத் தாளிட்டு விட்டு ராஜம் நான் உட்கார்ந்திருந்த நாற்காலி யோரமாக ஏதோ வேலையாகப் போனுள்.

அவள் என் ஓரமாகப் போகும் பொழுது வீசிய அந்தக் காற்று, எவ்வளவு மனோகரமாக இருக்கிறதென்று என் மனம் கற்பனை செய்தது.

இவ்வாறு நெஞ்சிலே பல நினைவுகள் நர்த்தனமாட, நாற்காலியில் சாய்ந்து கொண்டு என்னை மறந்து உட்கார்ந்திருந்தேன்.

ஹாலில் மாட்டி இருந்த கடிகாரம் பத்துத் தடவை அடித்தது.

"ஏன் ? நீங்கள் படுக்கவில்லையா ?" என்று ஆச்சரியம் செறிந்த குரலில் கேட்டாள் ராஜம்.

திடுக்கிட்டு உணர்வடைந்தேன். என்முன்னே ராஜம் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய உருவம் என் உள்ளத்தைக் கவர்ந்து விட்டது.

"ஆஹா ! ஆலாலசுந்தரம் ஒரு பாக்யசாலி !" என்று என் மனதிற்குள் முணு முணுத்துக் கொண்டேன்.

ஆலாலசுந்தரம் என்ற வார்த்தையை நினைத்ததும் என் மனம் துணுக்குற்றது. அவன் என் நண்பன் ! என்னை நம்பி தன் மனைவிக்குத் துணையாக என்னை வைத்துச் சென்ருன். அதற்குக் கைமாருக அவனை

மோசம் செய்வதா? என்று எண்ணியதும் என் இதயம் நடு நடுங்கி விட்டது. ஒன்றும் பேசாமல் நேரே எனக்குப் போடப்பட்டிருந்த படுக்கையில் போய்ப்படுத்தேன். உடல் முழுவதும் போர்த்திக் கொண்டு, பலவாருக சிந்தித்த படியே நன்ருக அயர்ந்து விட்டேன்.

* * * *

அப்பொழுது மணி இரண்டிருக்கலாம்; திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன். என்னுடைய மனதிலே இரவு முற்பகுதியில் நடந்த அந்த உள்ளப் போராட்டம் மறு படியும் வந்து கவிந்து கொண்டது.

"............நண்பனுடையமனைவிதான்!.........அதனுல்? ....அவனுக்கு மணம் நடப்பதற்கு முன்பு நான் அவளைச் சந்திக்க நேர்ந்து நெறிதவறி இருந்தால்....? அது நண் பனுக்குச் செய்த துரோக மென்று சொல்ல முடியும்........? அப்பொழுது அது தவருக இல்லாவிட்டால், இப்பொழுது மாத்திரம் எப்படித் தவருகும்?........ஆகவே...................."

இவ்வாறு எனது அயோக்யச் செயலுக்கு அரண் கோலிக் கொண்டு, ஒரு முரட்டுத் துணிச்சலோடு ராஜம் படுத்திருந்த அறையை நெருங்கிக் கதவிலே கையை வைத் தேன். கதவு தாளிடப் படாமல் சாத்தப்பட்டிருந்தது. எனவே நான் கையை வைத்தவுடன் திறந்து கொண்டது.

என் மனம் 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது. அவள் இணங்காவிட்டால்...........?...........இந்த நினைவு ஏற்பட்டதும் என் உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. அந்தச்சமயத்தில் ராஜம் தற் செயலாக விழித்துக் கொண் டாள்.

"யார் அங்கே?" என்று சிறிது கலவரத்தோடு கேட்டாள்.

எனக்கு என்ன செய்வ தென்றே புரியவில்லை. ஓடி விடலாமா?.........அப்படி ஓடினுல்.........சட், என்ன வெட்கக் கேடு!

ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "ஏன்? நான்தான். ஒரே தாகமாக இருக்கிறது. தண்ணீர் கேட்க வந்தேன்" என்று புளுகினேன்.

ராஜம் எழுந்து உள்ளே சென்று, கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். தலையைக் குனிந்து கொண்டே தண்ணீரை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு டம்ளரை அவளிடம் கொடுத்தேன். அதை அவள் வாங்கும்பொழுது அவளது மெல்லிய பூங்கரம், எனது கையிலே பட்டு மின்சாரம் பாய்வதைப் போல ஒரு வகை உணர்ச்சியை உண்டாக்கியது.

எனது உள்ளத்தில் உண்டான முரட்டுத் துணிகரம் எங்கோ சென்று மறைந்து விட்டது. ஏன்?.........அவள் இணங்காவிட்டால்?..........

இந்த ஒரே நினைவோடு திரும்பவும் படுக்கையில் போய்ப் படுத்துப் புரண்டு கொண்டு கிடந்தேன்.

காலையில் நான் கண்விழித்தபொழுது ஏழரைமணி இருக்கலாம். ஜன்னல் இடுக்குவழியாக சூரியகிரணங்கள் என் மீது தாக்கின. படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டிருந்தேன்.

"அடேயப்பா! இவ்வளவு நேரம் தூங்குகிறீர்களே!" என்று கூறிக்கொண்டே நான் படுத்திருந்த அறையில் நுழைந்தாள் ராஜம்.

"இரவு வெகு நேர மட்டும் தூக்கமே வரவில்லை" என்று என்னென்னவோ மனதில் எண்ணிய வண்ணம் கூறினேன்.

"எனக்குந்தான்!" என்று அவளும் ஒத்து ஊதினாள்.

"ஏன்?" என்று என்னையறியாமல் அவசரத்தோடு கேட்டேன்.

"இல்லை......என்னவோ போலிருந்தது; சரி! பல் விளக்கிக் கொள்ளுங்கள். காபி சாப்பிட்டு விட்டு வீட்டிற்குப் போகலாம்" என்று பேச்சை வேறு வழியில் திருப்பினாள்.

எழுந்து சென்று பல்லை விளக்கிக் கொண்டு காப்பி சாப்பிட உட்கார்ந்தேன். ஒரு பிளேட் நிறைய 'உப்புமா' வும் ஒரு 'லோட்டா' நிறைய காபியும் கொண்டு வந்து என் முன் வைத்தாள்.

"யாருக்குப் படையல் போட்டு வைத்திருக்கிறது?" என்று கேலியாகக் கேட்டேன்.

"சாப்பிட்டு விட்டுப் பாக்கியை வைத்துப் போங்களேன்!" என்ருள் கொஞ்சும் குரலில்.

"பிறகு?"

"நான் சாப்பிடுகிறேன்! நீங்கள் தொட்டதைச் சாப்பிடக் கூடாதா, என்ன?" என்று ஏதோ குறைப்படுவதைப் போலப் பேசினுள் ராஜம்.

"நீங்கள் தொட்டதைச் சாப்பிடக்கூடாதா, என்ன?" என்ற வாக்கியம் என் காதருகே ரீங்கார மிட்டபடி இருந்தது.

சாப்பிட்டு முடிந்ததும் நேரே வீட்டிற்குக் கிளம்பினேன். வாயிற்படியில் வந்து நின்று கொண்டு ராஜம், "இன்றைக்கும் அவர்கள் வராவிட்டால், அவசியம் நீங்கள் துணைக்கு வாருங்கள். பேசாமல் இருந்து விடக்கூடாது" என்று கண்டிப்பான குரலில் சொன்னுள். அவள் முகம் சிவந்திருந்தது.

வீட்டிற்குப் போயும் எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. மனதில் என்னென்னவோ சிந்தனைகள் அலைமோதிக் கொண்டிருந்தன.

எனது ஆபீஸ் பதினேரு மணிக்குத் தான். இருந்தாலும் அன்று வீட்டில் தங்கி இருக்கவே எனக்கு மனமில்லை. எனது தாயார் கூட, "ஏன்? இவ்வளவு சீக்கிரமாக ஆபீசிற்குப் போகிருயே!" என்று கேட்டாள். "வேலை இருக்கிறது" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டேன்.

ஆபீசில் பியூன் மட்டுந்தான் வந்திருந்தான். நேரே எனது மேஜைக்குச் சென்று, முதல் நாள் பாக்கி வைத்துப் போயிருந்த ஒரு 'சர்க்குலரை' டைப் அடிக்க ஆரம்பித்தேன்:

"தட தடதட்" "ததட தட தட்" என்று டைப் மிஷின் அலறியது. எனது இதயமும் அதனுடன் சேர்ந்து அடித்தது. என் மனக் கண்ணின் முன்னே ராஜத்தின்

சிவந்த மூகம் இடைவிடாமல் காட்சி அளித்தது. எனக்கு வேலையில் புத்தி ஓடவில்லை.

டைப் மிஷினை விட்டு எழுந்து ஆபீஸ் ஹாலில் உலாவ ஆரம்பித்தேன். என கண்கள் யதேச்சையாக சுவற்றில் மாட்டப்பட்டிருந்த ஒரு "குரூப்" போட்டோவின் மீது சென்றது.

அந்தப் படம் சென்ற வருஷம் எடுத்தது. பழைய மாஜிஸ்டிரேட் மாற்றலாகிப் போகும் பொழுது ஆபீசி லிருந்த எல்லோரும் சேர்ந்து எடுத்துக் கொண்டோம். அதில் ஆலாலசுந்தரம் என் ஓரமாக நின்று கொண் டிருந்தான். அவன் கை என் தோள்மீது கிடந்தது.

அந்தப் படத்தைப் பார்த்ததும் என் நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டது. என்னை மனப்பூர்வமாக நம்பிக் கொண்டிருக்கும் அந்த களங்கமற்ற முகம் என் பாழ் பட்ட இதயத்தை ரம்பம் போட்டு அறுத்தது.

இரவு நடக்கவிருந்த அந்தப் பயங்கரமான சம்ப வத்தை நினைக்க நினைக்க என் மனம் அலறியது. மிருகத் தனமான இச்சைக்காக, நண்பனுக்குத் துரோகம் செய்வதா? என்ன முட்டாள்தனம் செய்யவிருந்தேன் இரவு மட்டும் அந்நிகழ்ச்சி நடந்திருந்தால்.........?

அதிலிருந்து என்னை ஆண்டவன் காப்பாற்றிய தற்காக என் மனதார அவனை வாழ்த்தினேன். என் மனம் ஒரு பேராபத்திலிருந்து தப்பியவன் இதயத்தைப் போலிருந்தது.

*   *   *   *

அன்று மத்தியானம் பியூன் ஒரு தந்தியைக் கொண்டு வந்து கொடுத்துச் சென்றான். திருச்சியிலிருந்து ஆலால சுந்தரம் எனக்குத் தந்தி அடித்திருந்தான். தன் மைத்துனருக்கு உடம்பு கொஞ்சம் குணமாக இருக்கிற தென்றும் அன்றைய தினத்திற்கு தனக்கும் 'லீவ்' வாங்கி வைக்கும்படியும், தன் வீட்டைக் கவனித்துக் கொள்ளும் படியும் அதில் கண்டிருந்தது.

மாலை ஆபீசை விட்டதும் நேராக வீட்டிற்குப் போனேன். காலையிலிருந்த மனப் போராட்டம் அடி யோடு ஒழிந்து மிகவும் நிம்மதியாக இருந்தேன்.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு ஆலால சுந்தரத்தின் வீட்டிற்குப் போனேன்.

"இன்றைக்குத் தந்தி வந்திருக்கிறது. திருச்சி மாப்பிள்ளை சௌகரியமாக இருக்கிறாராம். ஆலாலம் நாளைக்கு வருகிறானாம்'' என்று அவளிடம் சொன்னேன்.

"அப்படியா? அவர்கள் இன்றைய இரவு வரமாட்டார்களா?'' என்று சிறிது மகிழ்ச்சிக்களை ததும்பக் கேட்டாள்.

அவளுடைய முகம் அவள் ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்ததாக எனக்குப் புலனாக்கியது. அவளது மேலாடை சிறிது விலகி இருந்தது. அதைக் கவனிக்காதவள் போல் "சாப்பாடு ஆகி விட்டதா?'' என்று வாஞ்சையாய்க் கேட்டாள்.

"ஆய் விட்டது" என்றேன்.

சிறிது நேரம் இருவரும் ஒன்றும் பேச வில்லை. மௌனத்தின் கொடூரத்தைத் தணிக்க நினைத்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தேன். புகைச் சுருள்கள் வளையம் வளையமாக மேலே செல்வதை சிறு குழந்தையைப் போல வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.

"அடேடே!'' என்று கத்திக் கொண்டே என் மடியில் விழுந்திருந்த சிகரெட் பொரியைத் தன் கைகளால் தட்டி விட்டாள். அவளுடைய கரம் என்மேல் பட்டதும் என் உடம்பு நடுங்கியது.

"எனக்குத் தூக்கம் வருகிறது'' என்று சொன்னேன். அப்பொழுது மணி ஒன்பதுதான். எனக்கு உண்மையிலேயே தூக்கம் வரவில்லை. அங்கே உட்கார்ந்திருந்தால் ஏதாவது விபரீதம் நடந்து விடுமோ என்று பயந்தே அவ்வாறு புளுகினேன்.

எனக்குப் படுக்கையைப் போட்டுவிட்டு, "போய்ப் படுக்கலாமே!'' என்று சிறிது ஏமாற்றத்தோடு கூறினாள்.

அதைக் கவனியாதவன் போல் நான் என் படுக்கையில் போய்ப் படுத்தேன்.

என்னிடம் ஒரு கெட்ட வழக்கம் உண்டு. விளக்கிருந்தால் எனக்குத் தூக்கம் வராது. ஆகவே விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக் கொண்டேன்.

நல்ல தூக்கத்திலிருக்கும் பொழுது ஏதோ ஒரு வித சக்தி என்னை விழிப்படையச் செய்தது. விழித்துக் கொண்டே கவனித்தேன். ஹாலில் மாட்டப்பட்டிருந்த கடிகாரம், பனிரெண்டு தடவைகள் ஆயாசத்துடன் அடித்தது.

நான் படுத்திருந்த அறையின் வாயிற் படியிலே ஏதோ ஒரு கருத்த உருவம் இருட்டிலே தோன்றியது ....ஆம்! சந்தேகமில்லாமல் அது ராஜம் தான்!

அவள் மெதுவாக நான் படுத்திருந்த கயிற்றுக் கட்டிலை நெருங்கி வந்து, ஓரத்திலே உட்கார்ந்தாள். தன் மெல்லிய கரத்தினால் என்னைத் தொட்டாள். என் தொண்டை அடைத்துக் கொண்டது. வாயிலிருந்து வார்த்தைகள் வெளியே வரவில்லை. செயலற்றுப் போய் அப்படி அயர்ந்து கிடந்தேன்.

என்னுடைய முகத்திலே, தன்முகத்தை ஒற்றிக் கொண்டு, “கண்ணா!” என்று மெதுவாகக் கொஞ்சினாள்.

என்னை யறியாமல் எனக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. “சீ, பீடை!” என்று அவளைத் தள்ளிவிட்டு, படுக்கையை விட்டு இறங்கினேன். சட்டென்று ஓடிவந்து அவள் என்னைத் தழுவிக் கொண்டு, “கண்ணா! நீங்கள்.......நீங்கள் தானே நேற்றைய இரவு எனக்கு “இந்த எண்ணத்தை” உண்டாக்கினீர்கள்.......... இல்லாவிட்டால் இரவு இரண்டு மணிக்கு என் அறை வாயிற் படியில் உங்களுக்கு என்ன வேலை?.................. எங்கே?.........இதோ நீங்கள் விரும்பிய உங்கள் காதலி! ....அவளை ஏற்றுக் கொள்ளுங்கள்” என்று பதறினாள்.

பாம்பை மிதித்தவன்போல் ஒரு துள்ளுத் துள்ளி அவளை எட்டத் தள்ளிவிட்டு அறையை விட்டு வெளியேறிக் கதவைத் திறந்தேன்.

திரும்பவும் ஓடி வந்து என் கால்களைப் பிடித்துக் கொண்டு, "ஐயோ! என் சுவாமி! நீங்கள் என் கேவல இச்சைக்கு உடன்பட வேண்டாம்.......ஆனல்.......நீங்கள் இங்கேயே படுத்திருங்கள்.......நீங்கள் வீட்டிற்குப் போனல் எப்படியும் இந்தச் செய்தி வெளியாகிவிடும்.......அப்புறம் என் கதி?" என்று விம்மி விம்மி அழுதாள்.

நான் ஒன்றுமே பேசவில்லை. அவளை ஒரு புறமாக நகர்த்திவிட்டு வெளியே வந்தேன். திண்ணையில் எனது கையைத் தலையணையாக வைத்துக்கொண்டு படுத்திருந் தேன். ராஜம் கதவைத்திறந்து எட்டிப் பார்த்தாள். பிறகு தலையை உள்ளுக்கு இழுத்துக்கொண்டாள். சில விநாடிகள் சென்றதும் ஒரு தலையணையும் பெட்ஷீட்டும் திண்ணையிலே எறியப்பட்டன. அதை எடுத்து விரித்துக் கொண்டு படுத்தேன். என் இதயத்தில் என்னென்ன எண்ணங்களோ தோன்றி மறைந்தன.

மணி ஐந்திருக்கலாம். இன்னும் கங்குல் கரைந்த பாடில்லை. யாரோ என்னை எழுப்பினர்கள். விழித்துக் கொண்டு உற்றுப்பார்த்தேன். அது ஆலாலசுந்தரம்!

"எப்பொழுது வந்தாய்?" என்று ஆவலோடு கேட் டேன்.

"இப்பொழுதுதான் விடியற்கால வண்டியில்" என்று கூறிவிட்டுக் கதவை இடித்தான். ராஜம் கதவைத் திறந் தாள்.

ஆலாலசுந்தரம் உள்ளே போய்ச் சட்டைகளைக் கழற்றிப் போட்டுவிட்டு தன் மனைவியிடம், "ஏன் ராஜம்! உன் கொழுந்தனைத் திண்ணைக் காவலாய்ப் போட்டுவிட் டாய்?" என்று விளையாட்டாகக் கேட்டான்.

"அதை அவர்களையே கேளுங்களேன்" என்று நிம்மதியற்ற குரலில் ராஜம் பதில் சொன்னது என் காதில் விழுந்தது.

அடி நீலி! என்னையா கேட்கவேண்டும். நான் சொல்ல மாட்டேன் என்கிற தைரியமா? என்மேலும் குற்றம் இருக்கிறதென்ற எண்ணம் போலும்!

இவ்வாறு என்னவென்னவோ யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த என்னை, ஆலால சுந்தரம் ஓங்கி ஒரு குத்துக் குத்தி, "என்னடா, சாமியாரே! ஆபீஸில் என்ன சொன்னார்கள்? நீ ஏன் வாசல் காக்கும் நாய் மாதிரி திண்ணையிலே படுத்துக் கிடந்தாய்?" என்று கலாட்டா செய்ய ஆரம்பித்து விட்டான். அப்பொழுது வாயிற்படியின் ஓரமாக ராஜம் நின்று கொண்டிருந்தது அவள் நிழல் மூலம் தெரிந்தது.

"இப்பொழுது மணி என்னவிருக்கும்?'' என்றேன்.

"ஐந்தரை'' என்று சொன்னான்.

"சரி! வா பேசிக்கொண்டே வெளியே போய் வரலாம்'' என்று அவனை அழைத்துக்கொண்டு "வடலாற்று''ப் பக்கம் போனேன்.

வழியிலே என்னென்னமோ, கதைகள் பேசிச் சிரித்துக்கொண்டோம். ஆனால் திண்ணையில் நான் படுத்திருந்ததன் காரணத்தை அவன் கேட்கவுமில்லை, நான் சொல்லவுமில்லை.

திரும்பி வரும்பொழுது ஆலால சுந்தரம் என்னைத் தன் வீட்டிற்குக் காப்பி சாப்பிடக் கூப்பிட்டான்.

இரவு நடக்க விருந்த நாடகம் என் கண் முன் தோன்றி மறைந்தது. "வேண்டாம்'' என்று தட்டிக் கழிக்கும் முறையில் சொன்னேன். "சீ, கழுதை! என் மனைவியைப் பார்த்தால் உனக்குப் பயமாக இருக்கிறதாடா? என்னடான்னா, திண்ணையிலே சாய்ந்து கிடந்தாய். இப்பொழுது சாப்பிடக் கூப்பிட்டால், வேண்டாம் என்கிறாய். சரிதாண்டா! இடியட்! வாடா, போகலாம்,'' என்று கையைப் பிடித்து இழுத்தான்.

வீட்டில் நுழைந்ததும் ஹாலில் கிடந்த நாற்காலியில் நான் உட்கார்ந்திருந்தேன்; ஆலாலசுந்தரம் "ராஜம்!'' என்று கூப்பிட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தான். சில விநாடிகளுக்கெல்லாம், "ஆ'' என்று அவன் அலறும் கூச்சல் கேட்டது. திடுக்கிட்டு எழுந்து உள்ளே ஓடினேன்.

ஐயோ! அங்கு நான் கண்ட அந்தக் கொடிய காட்சி! ராஜம் தூக்குப் போட்டுக் கொண்டு, அடுப்பங்கரை உத்

திரத்திலிருந்து தொங்கினாள். அவள் கழுத்து நீண்டு தலை சாய்ந்திருந்தது. இரவு என்னிடம் கொஞ்ச வந்த அவள் நாக்கு வெளியே தள்ளிப் போய்க் கிடந்தது.

பரபரப்புடன் சுருக்கை அவிழ்த்து அவளைக் கீழே கிடத்தினேன். ஆலால சுந்தரம் மூர்ச்சை போட்டுக் கிடந்தான்.

ராஜம் போய்விட்டாள்! இனி அவளைப்பற்றி நினைக்க முடியாது என்று உணர்ந்த நான் அவள் கழுத்திலிருந்த சுருக்கை அவிழ்த்து விட்டு, ஒரு துணியை எடுத்து பயங்கரமாகத் தோன்றிய அவள் முகத்தை மூடினேன். அவள் சேலைத் தலைப்பிலே ஒரு முடிப்பு இருந்தது. சட்டென்று அதை அவிழ்த்துப் பார்த்தேன். அது ஒரு கடிதத் துண்டு. அதில் எழுதி இருந்தது இதுதான்!

“..........தங்கள் நண்பர் எல்லா விஷயங்களையும் சொல்லி இருப்பார். கடைசியாக இந்தப் பாவி வேண்டுவது விபசாரியான என்னைத் தாங்கள் மனப் பூர்வமாக மன்னிக்க வேண்டிய தென்பதே..........”

என் தேகம் இடியோசை கேட்ட நாகம் போல் நடுங்கியது. ஐயோ! அவள் மரணத்திற்குக் காரணம் இந்தப் பாவிதானா? மன ஒற்றுமையோடு இல்லறம் நடத்தி வந்த இவர்கள் வாழ்க்கையில் ஒரு சனியன் போல் வந்து குறுக்கிட்டேனே..........

என் இருதயம் வெடித்து விடும் போலிருந்தது. கையை நெஞ்சில் வைத்து அழுத்திக் கொண்டே, என்னை ஒருவாறு திடப் படுத்திக் கொண்டு, ஆலால சுந்தரத்திற்கு சிகிச்சை புரிய ஆரம்பித்தேன்; அந்தக் கடிதத்தை மென்று விழுங்கி விட்டேன்.

ஆலால சுந்தரம் மூர்ச்சை தெளிந்து எழுந்தான்.


“நண்பா! நான் இனி எப்படியடா உயிர் வாழப் போகிறேன். எனது உயிருக்குயிரான ராஜம், என்னை இவ்வுலகில் தனியாக விட்டுச் சென்றாளே! என் கண்மணி ஏன் தூக்குப் போட்டுக் கொண்டாள்? அவளுக்கு நான் செய்த அபசாரம் என்ன? உனக்குத் தெரிந்தால் சொல்லேன்” என்று கதறினான்.

'எனக்குத் தெரிந்தால் சொல்வதாம்!' அந்த வார்த்தைகள் என் நெஞ்சைப் பிளந்தன. கண்களிலிருந்து கடகட வென்று கண்ணீர் வடிந்தது.

*　　*　　*　　*

அந்தச் சம்பவம் நடந்து வருஷங்கள் ஏழு ஆகி விட்டன. இருந்த போதிலும் அதன் நினைவு இன்றையதினம் மிகவும் பயங்கரமான உருவிலே என் மனதில் எழுந்தது.

தனது வாழ்க்கை இன்பத்திற்கே உலை வைத்த என்னிடம், ஆலால சுந்தரம் காட்டும் நம்பிக்கை என் நெஞ்சைப் பிளந்தெறிவதைப் போலிருந்தது.



சுகம் எங்கே

நாலைந்து தடவைகள் சிவகாமி கூப்பிட்டும் சந்திர சேகரன் திரும்பியே பார்க்கவில்லை. எங்கேயோ நினைவை வைத்துக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிந்தது.

"கூப்பிடுகிறேனே; காதில் விழவில்லை?" என்று அலுத்துக்கொண்டாள் சிவகாமி.

'சும்மாகிட; சனியனே!' 'வாள் வாள்' என்று சதா கத்திக் கொண்டு கிடக்கிறாயே!" என்று 'சிடுக்' கென்று விழுந்தான் சந்திரன்.

சிவகாமி ஒன்றும் பேச வில்லை. அவள் கண்களிலே நீர் ததும்பியது. ஆத்திரத்தோடு "விர்" என்று எழுந்து உள்ளே போய் விட்டாள்.

* * * *

அவள் எழுந்து போன பிறகு தான் சந்திரனுக்கு உணர்வு வந்தது.

"ஏன் அப்படிப் பேசினோம்!" என்று கூட நொந்து கொண்டான்.

கல்யாணமாகி இந்த இரண்டு வருட இடைக்காலத்திலே, அவன் ஒரு நாளாவது சிவகாமியிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டது கிடையாது.

என்னவோ சொல்வார்களே 'அன்றில் பறவைகள் போல' என்று—அந்தப் பறவைகளைப் பார்த்திரா விட்டாலும்—அவற்றைப் போலவே இருவரும் இணையில்லாத அன்புடன் வாழ்க்கை நடத்திவந்தார்கள்.

சந்திர சேகரன் ஒரு தாலூகா ஆபீஸ் குமாஸ்தா. பகல் பூராவும் கிராமக்கணக்கப்பிள்ளைகளின் அபத்தக் கணக்குகளைப்புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, இரவு வீடு திரும்பும் பொழுது, அவனுக்கு உடலும் மன மும், ஒருங்கே சோர்ந்து போகும்.

அவனுடைய சோர்வைப் போக்க சிவகாமியின் பேச்சுக்கள்தான் 'டானிக்'காக இருந்தன. சதாசிரித்த முகத்தோடு அவள் 'கொன்னிக் கொன்னி'ப் பேசும் மழலைப் பேச்சுக்கள் அவனை இந்த உலகை விட்டு, இன்ப உலகத்திற்கு இழுத்துச்செல்லும். அர்த்தமில்லாத பல கேள்விகளைக் கேட்பாள். அவற்றிற்குப்பஃதில் சொல்வதி லேயே, தனி ஆனந்தம் இருப்பதாக அவனுக்குத் தோன்றும்.

இந்த இரண்டு வருட காலமாக, கொஞ்சங்கூட மன வேற்றுமை ஏற்படாமல், ஒற்றுமையாக வாழ்க்கை நடத் திய அந்தத் தம்பதிகளைப் பார்த்து ஆச்சரியப் படாத வர்கள் ஒருவருமில்லை.

ஆனால் இன்று......................!

ஆம்; இன்றைக்கு அவன் நடையிலே கொஞ்சம் மாற்றம் காணத்தான் செய்தது. அவனது முகத்திலே ஆழ்ந்த சிந்தனையின் ரேகைகள், இலேசாக ஓடி இருந்தன. சிவகாமி அதைப் புரிந்துகொண்டாள். எதற்காகஅப்படி உட்கார்ந்திருக்கிறான், என்பதைத் தெரிந்து கொள்ளத் தான் அவனைக் கூப்பிட்டாள். அதற்கு அவன் கொடுத்த பதிலைத்தான் மேலே படித்தீர்கள்.

*   *   *   *

சந்திரசேகரனின் ஆழ்ந்த சிந்தனைகளுக்குக் காரணம் இல்லாமலில்லை. அன்று ஆபீசைவிட்டு அவன் வீட்டுக்கு வரும் பொழுது ஒரு புதுவழியில் வந்தான். எந்தத் தெரு வின் வழியாக நடமாடக் கூடாதென்று அவன் நண்பர்கள் அவனை எச்சரித்திருந்தார்களோ, அந்தத் தெருவின் வழியாக நடந்து வந்தான்!

அந்தி மயங்கும் வேளையிலேதான், சந்திரசேகரன் அந்தத் தாசித் தெருவில் புகுந்தான். ஆனால் சந்தில்

நுழையும்பொழுது, தன் மதி, மயங்கிப் போய்விடப்போகிற தென்று அவன் எதிர்பார்க்கவில்லை.

அந்தத் தெருவில் ஒவ்வொரு வீட்டு வாசலிலும், ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். ஒருத்திகருப்பு!மற் ெருருத்தி மாநிறம்! இன்னொருத்திக்கு பல் வரிசை "பால்கனி" மாதிரி நீட்டிக்கொண்டிருந்தது. இவ்வாறு பல தினுசான பெண்கள்.

ஆனல் எல்லோருடைய தலையிலும் ஒரு கொத்து ஜாதி அரும்பு! முகத்திலே அரைடப்பா "பூதர்மாவு" நெற்றி யிலே சல்லடை அகலம் சாந்துப் பொட்டு!

சந்திர சேகரன் பெண்கள் மத்தியில் நடமாட மிகவும் கூச்சப் படுபவன். அதிலும் சர்வ அலங்காரங்களுடன் நவராத்திரி கொலுப் பொம்மைகள் மாதிரி அவர்கள் நிற்பதைப் பார்த்து அவன் உடம்பு சிலிர்த்தது. கால்கள் பின்னின.

யதேச்சையாக இரண்டொரு தடவைகள் நிமிர்ந்து பார்த்தான். அந்த "அலங்காரி" களெல்லாம் இவனையே பார்த்தனர். அத்துடன் அவனை விட்டு வைக்கக் கூடாதா? பாழாய்ப்போன புன் சிரிப்பும் சிரித்தார்கள்! வெள்ளைப் புடவைகட்டிக் கொண்டிருந்த ஒருத்தி புன்னகை பூத்த பொழுது, அவள் முகம் ரொம்ப அழகாக இருந்தது. ஆனல் அந்தச் சிவப்புப் புடவைக்காரி சிரித்த பொழுது "பரமகண்ருவி"யாக இருந்தது! இன்னொருத்தி அழு தாளா! அல்லது சிரித்தாளா! என்பதே சந்திரசேகர னுக்குப் புரியவில்லை.

தெருவை விட்டுத் தாண்டப் போகும் சமயத்தில், அந்த மூலையிலிருந்த ஒரு வீடு சந்திரசேகரன் கண்களில் பட்டது. அதில் ஒரு இள மங்கை நின்று கொண்டிருந் தாள்.

அவளும் மற்றவர்களைப் போல விபரீத அலங்காரங் களைச் செய்துகொண்டு தான் நின்ருள். ஆனல் அவள் முகத்திலே யௌவனத்தின் "தேஜஸ்" பரிபூரணமாகப் பிரகாசித்தது. அவள் உடம்பிலே ஆக்கம் செலுத்திக் கொண்டிருந்த இளமையின் முறுக்கு வாலிபர் உள்ளத் தைத் தூண்டில் போட்டு இழுத்தது.

அவளைப் பார்த்தவுடன், சந்திரசேகரன் பிரமித்துப் போய் விட்டான். சங்கோஜத்தினால் துவண்டு கிடந்த அவன் உணர்ச்சி நாடிகள், அந்த ரூப சௌந்தரியத்தைக் கண்டதும் புத்துயிர் பெற்றன.

தன்னை மறந்த லாகிரி நிலையிலே வீட்டிற்குத் திரும்பினான். வழி நெடுகவும், அவளைப் பற்றிய சிந்தனையோடு தான் போய்க் கொண்டிருந்தான்.

வீட்டில் நுழைந்ததும் சிவகாமி மலர்ந்த முகத்தோடு அவனை வரவேற்றாள். என்னென்னவோ அவனைக் கேட்டாள். அவை ஒன்றும் அவன் காதில் விழவில்லை.

"காபி கொண்டுவா! சிவகாமு!" என்றான்.

காபியை வாங்கிக் குடித்துவிட்டு ஈஸிசேரில், போய்ப் படுத்தான். மறுபடியும் அவன், சிந்தனைகள், அந்த 'மோஹினி'யை நோக்கியே பறந்தன. அப்பொழுது தான் சிவகாமி குறுக்கிட்டுப் பேசினாள். அவனுக்குக் கோபம் வந்து விட்டது......

* * * *

உள்ளே சமையலறையில் சிவகாமி பாத்திரங்களைத் "தட தட" வென்று போட்டு உருட்டிக் கொண்டு கிடந்தாள். தன் மீது உண்டான ஆத்திரத்தில் தான் அவள் அம்மாதிரி செய்கிறாள் என்று சந்திரன் புரிந்து கொண்டான். சிவகாமியிடம் போய் சமாதானம் செய்யலாம் என்று ஒரு நினைவு உண்டாயிற்று அவனுக்கு.

மறு நிமிடம் அந்த மோஹினியின் உருவம் அவன் கண்களின் முன் வந்து காட்சி யளித்தது. சிவகாமியை விட அவள் எத்தனையோ மடங்கு அழகி. அவளுடைய சிவந்த நிறத்திற்கும், கட்டமைந்த உடம்பிற்கும் சிவகாமி எத்தனையோ ஜன்மங்கள் தவம் கிடக்க வேண்டுமே!

"சென்ற இரண்டு வருட காலமாக சிவகாமியிடம் வாழ்க்கை நடத்தி நாம் என்ன இன்பத்தைக் கண்டோம்! ஏதோ கொஞ்சம் புத்திசாலித்தனமாகப் பேசுவாள்! எடுத்ததற்கெல்லாம் கிண்டல் செய்வாள்!.......அவ்வளவு தானே! ஆனால் அந்த 'மோஹினி!' யோடு ஒரு நாள்—ஒரு இரவு—நம் வாழ்க்கையைக் கழித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்று அவன் மனம் நினைத்தது.

"அவளை அடைவது பெரிதா? ஏதோ ஐந்து பத்து ரூபாய்களை வீசி எறிந்தால், அந்த உடலை —மாணிக்கத்தை—நம் வசம் ஒப்புவித்து விடுவாள்!—ஆம்; வெகு சுலபமாக அது நமக்குக் கிடைக்கும்! பின் ஏன் அவ்விதம் செய்யக் கூடாது?" என்று அவனுக்கு ஒரு எண்ணம் பிறந்தது.

நேரம் ஆக ஆக உணர்ச்சியின் மேலீட்டிலே, அந்தத் தீர்மானம் வலுப்பட்டது.

அப்பொழுது இரவு மணி ஒன்பது இருக்கும். பெட்டியைத் திறந்து மணிபர்சை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே வந்தான். அப்பொழுதும் சிவகாமி அடுக்களையில் தான் இருந்தாள்.

வெளியிலே ஒரே கும்பிருட்டு, அவன் மனம் 'திக்திக்' கென்று அடித்துக் கொண்டது. கால்கள் பயத்தினல் பின்னிக் கொண்டன. எங்கோ, கொலை செய்யப் போகிறவன் போல, உள்ளமும் உடலும் ஒருங்கே தள்ளாட "அந்த" த் தெருவை நோக்கி நடந்தான்.

அவளுடைய வீட்டை நெருங்க நெருங்க அவனுடைய கலவரமும் பீதியும் அதிகப்பட்டன. தன் உணர்ச்சி இல்லாமல், இயந்திரம் போல, அவள் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தான்.

வீட்டின் வாயிற் படியிலே அவள் நின்று கொண்டிருந்தாள். இவனைக் கண்டதும் "வாருங்கள்!" என்று உபசரித்தாள்.

யாராவது பார்த்து விடப் போகிறார்களோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டே அந்தத் தெருவின் இரு பக்கத்திலும் பார்த்தான். நல்ல வேளையாக ஒருவருமில்லை!

"வாருங்கள்!"என்று மறுபடியும் அழைத்தாள். மெதுவாக உள்ளே நுழைந்தான். ஒரு சோபா கிடந்தது அதில் போய் உட்கார்ந்தான்.

அந்த "மோஹினி" தெருவாயிற் கதவைத் தாளிட்டு விட்டு, அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

அவளுக்குத் தெரிந்தோ தெரியாமலோ, அவளது மேலாடை விலகிக் கிடந்தது. பெண்மையின் சின்னங்கள் அவன் காமத் தீயை, கொழுந்து விட்டு எரியச் செய்தன.

அவளுடைய கூச்சமற்ற தன்மையைக் கண்டு சந்திரசேகரன் பிரமித்துப் போய் விட்டான். உணர்ச்சியற்ற மரக்கட்டையைப் போல உட்கார்ந்திருந்தாள்! அவளுடைய அந்த 'மரத்துப் போன' நிலையைக் கண்டு இலேசாக அருவருப்புக் கொண்டான் சந்திரன்.

ஆனால் காமவெறியின் மிகுதியிலே அவளைத் தன் அருகே இழுத்து அணைத்துக் கொண்டான்.

அப்பொழுதும் அவள் உடம்பில் எவ்வித நாண உணர்ச்சியும் ஏற்படவில்லை. ஆனால் முரண்டிக் கொண்டு அவன் பிடியிலிருந்து விலகினாள். அதோடு அவள் பேசாமல் இருந்தால், சந்திரசேகரன் ரொம்ப சந்தோஷமடைந்திருப்பான். பெண்களுக்கு இயற்கையாக ஏற்படும் அன்பின் மிகுதியில் தன் காதலன் பிடியிலிருந்து விலகுவதைப் போல, அவளும் விலகிக் கொண்டாள், என்று அவன் நினைத்திருப்பான்.

ஆனால் அவள் கேட்ட கேள்வி!.......

"காசை எடு சாமி முதலில்!"........

இந்தக் கேள்வியை அவள் கேட்டதும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"அவள் பெண்ணல்ல! மிருகம்!...." என்று அவன் மனம் சொன்னது. அவளைப் போய் மோகித்தோமே, என்று அவனுக்கு வெட்கமும் ஆத்திரமும் ஏற்பட்டன.

சட்டென்று சோபாவை விட்டு எழுந்தான். மணிபர்சைத் திறந்து, ஒரு ரூபாய், நாணயத்தை எடுத்து அவள் முகத்திலே விட்டெறிந்து விட்டு, 'உணர்ச்சியற்ற மிருகமே!' என்று, முணுமுணுத்துக் கொண்டே வாயிற் படியை நோக்கி நடந்தான்.

வாயிற் படியை விட்டுத் தெருவில் அவன் இறங்கிய பொழுது "சோதாப் பயல்! திமிரைப் பாரு!" என்று அந்த 'மோஹினி' ஆத்திரமாகப் பேசியது அவன் காதில் விழுந்தது.

'விறு விறு' வென்று வீட்டை நோக்கி நடக்க ஆரம் பித்தான். வழி நெடுகவும் அவளுடைய நடத்தை அவன் மனதை ரம்பம் போட்டு அறுத்தது.

சந்திரசேகரன் வீட்டை நெருங்கும் பொழுதே, தன் அறையில் விளக்கு எரிவதைப் பார்த்து விட்டான். அதிலிருந்து, சிவகாமி அங்கே இருக்கிறாள் என்று தெரிந்தது.

அவசர அவசரமாக அறைக்குள் நுழைந்தான். கட்டிலிலே குப்புறப் படுத்து, தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, சிவகாமி "விம்மி"க் கொண்டிருந்தாள்.

துடிதுடிப்புடன் அவள் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டு "கண்ணு!" என்று அன்பாகக் கூப்பிட்டான்.

அவள் ஒன்றும் பதிலே பேசவில்லை. தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

அவளுடைய முகத்தின் அருகில் குனிந்து அவள் தலையை இலேசாகத் திருப்பினான்,


"என்மேல் கோபமாடா கண்ணு?" என்றான் தழு தழுத்த குரலில்.

"இல்லையே!" என்று சொல்லிக்கொண்டே, வாய் விட்டு அழுதுவிட்டாள் சிவகாமி.

துவண்டுபோய்க் கிடந்த அவளை வாரி மடியில் போட்டுக்கொண்டான் சந்திரன்.

"பைத்தியமே! இதற்கெல்லாமா, இப்படி அழுவது?" என்று சொல்லும்பொழுதே, அவன் கண்களிலிருந்து 'புல - புல' வெனக் கண்ணீர் வடிந்தது.

பிரார்த்தனை



“தஞ்சாவூர் ஜில்லாவிலே ஒரு வேலி நிலம் இருந்து விட்டால், ‘அக்கடா’ என்று இருந்து விடலாம்! ஒரு கஷ்டமும் இல்லை!” என்று பலர் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்.

ஆனால் மிராசுதாராக இருப்பவனுக்குஉள்ள கஷ்டம் அவர்களுக்குத் தெரியாது. நிலம் நீச்சு, எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு, மனக் கஷ்டமும் தொல்லையும்தான் அதிகமாக இருக்கும்.

சொல்லப்போனால், ஒரு வேலிக்கு ஒன்பது வேலி நிலமாகத்தான் இருந்தது தணிகாசலம் பிள்ளைக்கு. ஒன்பது வேலி (சுமார் 60 ஏகர்) நிலம் இருந்துங்கூட அவருக்கிருந்த மனக்கஷ்டமும், தொல்லைகளும் சொல்லிமுடியாது.

தணிகாசலம் பிள்ளைக்கு அவருடைய கிராமத்தில் நிறைய செல்வாக்கு இருந்தது. அந்தச் செல்வாக்கை அநுபவிப்பதற்குத்தான் அவர் உயிரோடிருக்கிறார் என்று பலர் நினைத்தார்கள். இல்லாவிட்டால், அவருக்கு இருக்கும் ‘பிடுங்கல்’ களுக்கு, அவர் கட்டாயம் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்.

உள்ளபடியே தணிகாசலம் பிள்ளைக்கு ‘சள்ளை’கள் ரொம்ப அதிகமாகத்தான் இருந்தன. அவற்றில் முதன்மையானது என்று சொல்லக் கூடியது அவர் பெண் பார்வதியின் கல்யாண விஷயந்தான்.

பார்வதியைத் தன் கண் போலப் பாவித்திருந்தார் தணிகாசலம். அவள் எப்படியாவது நல்ல நிலைமையில் குடும்பம் நடத்துவதை தன் மனங் குளிரப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்.

பார்வதியின் மீது அவர் அவ்வளவு அன்பாக இருந்ததற்கு முக்கிய காரணமும் இருந்தது. என்ன வென்றால், பார்வதி, தணிகாசலம் பிள்ளையின் முதல் தாரத்துப் பெண்.

முதல் தாரத்தோடு, நீண்ட நாள் வாழ்க்கை நடத்த பிள்ளையவர்கள் 'கொடுத்து வைக்க' வில்லை. ஏதோ அந்தப் புண்ணியவதி கொஞ்ச காலம் 'வந்தது போனது' தெரியாமல் 'பிள்ளை' யோடு வாழ்க்கை நடத்தினாள்.

தணிகாசலம் பிள்ளையின் கோபத்துக்கும், முரட்டு சுபாவத்துக்கும், "அனுசரித்து" நடக்கக் கூடிய பெண் எங்கே கிடைக்கப் போகிறாள் என்று எல்லோரும் சந்தேகப்பட்டார்கள். ஆனால் "அந்தப் பெண் நான் தான்!" என்று கூறுவதைப் போல, பார்வதியின் தாயார் அவரோடு குடும்பம் நடத்தினாள்.

பதினெட்டு மாதங்கள் அவரோடு வாழ்க்கை நடத்திய பிறகு 'போதும்!' என்று திருப்தி யடைந்தவள் போல, பார்வதியைப் பெற்று, பிள்ளையின் கையில் கொடுத்து விட்டு அவள் தான் "வந்த கதிக்கு, நல்ல கதி" தேடிக் கொண்டு போய் விட்டாள்.

2

பார்வதி தன் தாயாரை உரித்து வைத்தது போல இருந்தாள். இதனால் தணிகாசலம் பிள்ளைக்கு பார்வதி யின் பேரில் அளவு கடந்த பிரியம்.

பார்வதியைப் பார்த்துக் கொண்டே, தன் ஆயுள் பூராவையும் கடத்தி விடத்தான் பிள்ளை தீர்மானித்திருந் தார். ஆனால் அவருடைய உறவினர்கள் அவரை அம் மாதிரி இருப்பதற்கு விட்டு வைக்க வில்லை.

ஏனென்றால் என்ன இருந்தாலும், பார்வதி "இன் னொருவன்" வீட்டுக்குப் போக வேண்டியவள். அப்

பொழுது இந்தச் சொத்தைக் கட்டியாள ஆளில்லாமல் யாருக்கோ போய்ச் சேர்ந்து விடும்.

இதை உத்தேசித்தாவது அவர் மற்றொரு கல்யாணம் செய்து கொள்ள வேண்டு மென்று வற்புறுத்தினார்கள். ரொம்ப தூரம் தட்டிக் கழித்துப் பார்த்தும், பலிக்காத தினால் தணிகாசலம் பிள்ளை இரண்டாந்தாரம் கல்யாணம் செய்து கொள்ள வேண்டி நேர்ந்தது.

பிள்ளையவர்களின் இரண்டாந் தாரமாக வந்தவள் பெயர் லட்சுமி. பெயரளவில் வெறும் லட்சுமியாக இருந் தாலும் உண்மையில் அந்தப் புண்ணியவதி சந்தானலட்சுமி யாகவே விளங்கினாள்! கல்யாணமாகி ஒன்பது வருஷம் கழித்து, பிள்ளையவர்கள் தன் குடும்பத்தைப் பற்றி நினைத்த பொழுது ஒன்பது குழந்தைகள் (எல்லாம் ஆண் பிள்ளைகள்!) இருப்பது தெரிந்தது. அதோடு, "இன்னும் இரண்டு மாதத்தில் நானும் வந்து விடுகிறேன்!" என்று சொல்வதைப் போல, லட்சுமியின் வயிற்றில் இருந்து கொண்டு ஒரு குழந்தை பயமுறுத்தியது! அது ஆணோ பெண்ணோ ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்!

ஆண்குழந்தை வேண்டுமே, என்று நினைத்துக் கல் யாணம் செய்து கொண்ட தணிகாசலம் பிள்ளைக்கு இனி ஒரு சனியனும் பிறக்காமல் இருந்தால் போதும், என்று நினைக்கும் நிலைமை ஏற்பட்டு விட்டது.

* * * *

குடும்பம் வலுக்க வலுக்க தணிகாசலம் பிள்ளையின் ஏக்கமும் வலுத்துக் கொண்டே வந்தது. சொத்தைக் கட்டியாளப் பிள்ளைகள் வேண்டுமே என்று அவர் கவலைப் பட்டதுமாறி, இப்போது இருக்கும் பிள்ளைகளை வைத்துக் காப்பாற்றச் சொத்துத் தேடவேண்டுமே எனக் கவலைப் படும் நிலைமைக்கு வந்து விட்டார்!

தணிகாசலம் பிள்ளைக்கு செலவு இனங்கள் பெருகிக் கொண்டே வந்தன. அன்றாடச் செலவுக்கே, 'தொட் டுக்கோ தொடச்சிக்கோ' என்ற நிலையில் அவர் பொக்கிஷ நிலை மாறிவிட்டது. ஏதோ 'பெருங்காயம் இருந்த பாண்டம் என்று சொல்லுவார்களே, அந்தக் கதையில்

தன் பழயசெல்வாக்கை ஓரளவு பயன்படுத்திக் கொண்டு காலத்தை ஓட்டி வந்தார்.

இம்மாதிரி அவர் சித்திர வதைப்பட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில்தான், அவருடைய பெண் பார்வதி புஷ்பவதியானுள். இப்பொழுது அவருக்கு இன்னெரு புதிய கவலே வேறு ஏற்பட்டு விட்டது. எப்படியாவது ஒரு நல்ல இடம் பார்த்து அவளேக் கலியாணம் செய்து கொடுக்க வேண்டுமே என்ற எண்ணம் வேறு அவரை வதைக்க ஆரம்பித்தது.

எங்கெங்கோ வரன்கள் பார்த்தார். ஒன்றும் சரியாக வாய்க்க வில்லே. ஒன்றிருந்தால் ஒன்றிருக்காது. இம் மாதிரி நாட்கள் கழிந்து கொண்டிருந்தன.

ஆயிற்று: வருஷங்களும் மூன்று கழிந்துவிட்டன. தணிகாசலம் பிள்ளேக்கு விசாரம் பெருத்துப் போயிற்று என்பதை அவர் வீட்டு மாடங்களே எடுத்துக் காட்டின.

எப்படி யென்ருல் இவருக்குக் கவலே அதிகரிக்க, வீட்டில் ஒவ்வொரு மூலே முடுக்கிலும் ஒவ்வொரு பிரதிஷ்டை செய்து, வீட்டையே ஒரு பெரிய "க்ஷேத்திரமாக" மாற்றிவிட்டார்! இம் மாதிரி பகவாணே பல இடங்களில் வைத்து ஆராதித்தாலாவது, தனது கஷ்டம் நீங்காதா என்று கோட்டை கட்டினர்.

3

பார்வதி 'பெரிய மனுஷி'யாகி நான்காவது வருடம் கழிந்தது. அதற்கு மேலும், அவளே வீட்டில் வைத்திருக்க பிள்ளேக்கு விருப்பம் இல்லே.

எப்படியாவது அந்தவருடம் கலியாணத்தை முடித்தே தீருவது என்று சங்கற்பம் செய்து கொண்டார். அதன் விளேவாக, அவருக்கு அந்த வருடம் ரொம்ப அலேச்சல்.

கடைசியாக, அவர் இவ்வளவு காலம் சுற்றித் தேடி அலேந்த மாப்பிள்ளே, பன்னிரெண்டே, பனிரெண்டு மைல் தூரத்தில் தான் இருக்கிருன் என்று தெரிய வந்தது.

தணிகாசலம்பிள்ளேயின் கிராமத்திற்குப் பனிரெண்டாவது மைலில் மற்ெருரு கிராமம் இருக்கிறது. அந்த

ஊருக்குப் பெரிய பண்ணைப் பிள்ளைதான் சர்வாதிகாரி என்று சொல்லலாம்.

தன்னுடைய மூத்த மகன் செல்லத்துரைக்கும் அந்த வருடத்திலேயே எப்படியாவது கல்யாணம் செய்துவிடுவ தென்று பெரிய பண்ணைப் பிள்ளை பலமான முயற்சி செய்து கொண்டிருந்தார்.

தணிகாசலம் பிள்ளையின் மகள், 'சடங்காகி' வீட்டில் இருப்பதை அறிந்ததும், பெரிய பண்ணைப் பிள்ளைக்கு அந்தப் பெண்ணையே சம்பந்தம் போட்டுவிடலாம் என்ற எண்ணம் தோன்றியது.

ஒருவாறு பேச்சு வார்த்தைகள் முடிந்து நிச்சய தாம் பூலமும் நடந்தேறியது.

* * * *

பார்வதி தனக்குக் கணவனாக வரப்போகிறவன் யார் என்பதை அறிந்ததும் திடுக்கிட்டுப் போய்விட்டாள்.

ஏனென்றால் செல்லத்துரையைப் பற்றி, அவள் வேண் டியமட்டும் கேள்விப்பட்டிருக்கிறாள். செல்லத்துரை ஐந் தாவது வகுப்போடு படிப்புக்கு விடுதலை கொடுத்தவன். வீட்டுக்கு "அடங்காத" பிள்ளையாக, காலிகளோடு சேர்ந்துகொண்டு திரிவதுதான் அவனுக்கு வேலை.

இவற்றையெல்லாம்விட அவன் யாரோ ஒரு பெண் ணிடம் 'தொடர்பு' கொண்டிருப்பதாகவும், அதை ரத்து செய்யத்தான், அவனுக்கு மணம் செய்யப் போகிறார் களென்றும் யாரோ, பார்வதியிடம் சொல்லி விட்டார்கள். இதைக் கேள்விப் பட்டுத்தான் பார்வதி துடிதுடித்தாள்.

இவ்வளவெல்லாம் கேள்விப் பட்டுங்கூட அவள் அந்தக் கல்யாணத்திற்கு எவ்விதத் தடையும் சொல்ல வில்லை. அந்தக் கல்யாணம் தடைப்பட்டால் தன் தந்தைக்கு எவ்வளவு மனக் கஷ்டம் ஏற்படும் என்று அவளுக்குத் தெரியும்.

நிச்சய தாம்பூலத்தன்று எல்லாப் பெண்களும் கூடத் திலே நின்று கொண்டிருந்தார்கள்.

பார்வதிமட்டும் தனியே கொல்லைப் பக்கம் போய் நின்று தன் ஆத்திரம் தீருமட்டும் அழுதாள்.

கடைசியாக, "பகவானே! என் அப்பாவை, நான் பிறந்ததிலிருந்து, வதைத்து, வருகிறுய்! நான் போனபிற காவது, அவரை நல்ல கதியில் வையடா ஈஸ்வரா!" என்று மனமுருகிப் பிரார்த்தித்தாள்.

எவ்வளவு தூரம் அவள் தன்னைத் தேற்றிக்கொண்டாலும், தன் வாழ்க்கை ஒரு காலியின் கையில் ஒப்படைக் கப்படுவதை நினைத்ததும் அவளுக்கு 'புல புல' வென கண்ணீர் வந்துவிடும்!

இப்படி அவள் போராடிக் கொண்டிருக்கும் பொழுது அவளுக்குத் திடீரென மற்ருெரு நினைவும் வந்தது.

"அப்பா என்னிடம் எவ்வளவு உயிராக இருக்கிருர்! எனக்காக எவ்வளவு கஷ்டப்படுகிருர்! அவருக்காக நான் கொஞ்சம் கஷ்டப் பட்டால்தான் என்ன? ஏன்? அவர் மனம் சாந்தி அடைய வழிதேடுவதற்காக எனது வாழ்க்கையையே நரக வேதனையாக மாற்றிக் கொண்டால்தான் என்ன? என்று தன் மனதில் முடிவு செய்து கொண்டாள்.

4

கல்யாணமும் பெண் வீட்டிலேயே சிறப்பாக நடந்தேறியது. செல்லத்துரை பார்ப்பதற்கு வசீகரமாகத்தான் இருந்தான்.

அவன் கல்யாண சமயத்தில் நடந்து கொண்ட தோரணை மிகவும் பெரிய மனிதத்தன்மையாக இருந்தது.

கலியாணம் முடிந்த மூன்ரும் நாள் இரவு; "மறு முகூர்த்தம்" (சாந்திக் கல்யாணம்) செய்ய ஏற்பாடுகள் செய்தார்கள்.

கணவனைத் தனியே சந்திக்கப் போகும் பார்வதியின் நெஞ்சு பட பட வென்று அடித்துக் கொண்டது. அவள் சிறிய தாயார், எப்படியெல்லாம் கணவனிடம் நடந்து கொள்ள வேண்டுமென்று பார்வதிக்கு உபதேசம் செய்தாள். ஆனல் அவை யொன்றும் அவள் காதில் விழவே இல்லை........

...ஆயிற்று முகூர்த்த நேரமும் நெருங்கி விட்டது. முன்னால் நடக்க வேண்டிய சடங்குகளெல்லாம் நடந்தேறின.

பார்வதியின் கையில் பால் 'பல்லா'வைக் கொடுத்து சோபன அறைக்குள் அழைத்து விட்டனர். அவள் உடல் எக்காரணத்தாலோ நடுங்கிக் கொண்டிருந்தது.

அறைக்குள் பார்வதி அடியெடுத்து வைத்ததும் வெளியில் இருந்து யாரோ அறைக் கதவை இழுத்துச் சடக்கென்று சாத்தினர். அந்தச் சப்தத்தில் திடுக்கிட்டுப் போன பார்வதி கைதவறிப் பால்பல்லாவைக் கீழே போட்டு விட்டாள். பல்லா கவிழ்ந்து பாலெல்லாம் தரையில் ஓடியது.

அந்த நிகழ்ச்சி பார்வதியின் இதயத்தில் சம்மட்டியைக் கொண்டு அடித்ததைப் போல் இருந்தது.

முதல் முதலாகக் கணவனைச் சந்திக்கப் போகும் பொழுது பால் கவிழ்வது, என்ன தீவினைக்கோ என்று அவள் உள்ளம் அலறியது. பயத்தின் மிகுதியால் அவள் உடல் கிடுகிடுவென நடுங்கியது. கட்டிலில் உட்கார்ந்திருந்த செல்லத்துரை இந்த நிகழ்ச்சியைக் கண்டு ஸ்தம்பித்துப் போய் விட்டான்.

கொஞ்ச நேரம் வரையில் பிரமை தட்டிப் போய்ச் சிலைபோல நின்று கொண்டிருந்தாள் பார்வதி. அவள் கண்களிலிருந்து கடகடவெனக் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது; சிறிது நேரம் சென்றதும் விசித்து விசித்து அழ ஆரம்பித்து விட்டாள்.

கட்டிலில் உட்கார்ந்திருந்த செல்லத் துரைக்கு பார்வதியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. "அட பைத்தியமே! எதற்காக அழுகிறாய்?" என்று செல்லமாகக் கூறிக் கொண்டே கட்டிலை விட்டு இறங்கி அவளை நெருங்கினான்.

5

மறு நாள் காலையில் தன் சிறிய தாயிடம் பால் கவிழ்ந்து போன செய்தியைப் பார்வதி கூறினாள்.

அவளுடைய சிறிய தாய் லட்சுமி, "போடி" துப்புக்கெட்ட கழுதை! என்று திட்டினளே தவிர, பார்வதியின் மனம் ஆறுதலடையும்படி ஒன்றுமே சொல்லவில்லை. பார்வதியின் இதயம் "திக்திக்" கென்று அடித்துக்கொண்டேயிருந்தது. எதிர்காலத்தில் என்ன நேருமோ என்ற பயத்தினுல் அவள் நெஞ்சு அலறியது.

இம்மாதிரி அவள் மனதைக் குழப்பிக் கொண்டே அன்று பொழுது முழுவதையும் கடத்தினுள். விளக்கு வைத்து இரண்டு சாமமாகி இருக்கலாம். இரவு சாப்பாட்டிற்கு மாப்பிள்ளையைத் தேடினுர்கள்: அவனைக் காணவில்லை.

மாப்பிள்ளை எங்கோ போய் விட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் பார்வதி துடி துடித்துப் போனுள். ஒரு சமயம், 'அங்கே' போய்விட்டானே என்ற சந்தேகம் அவளைப் பிடித்து உலுக்கியது. அங்கே அந்தச் சண்டாளியைத் தேடிக் கொண்டு தான் அவன் போயிருக்க வேண்டும் என்று அவள் திடமாக நம்பினுள்.

பார்வதி நினைத்ததிலும் தவறில்லை, உள்ளபடியே, செல்லத்துரை தன் பழைய காதலியைப் பார்க்கத்தான் கிளம்பி விட்டான். அது தெரியாமல் தணிகாசலம்பிள்ளை வீட்டிற்கும் வாசலுக்குமாக புனுகுப் பூனைபோல அலைந்து கொண்டிருந்தார். கடைசியாக ஒரு பையன், "மாப்பிள்ளையைக் கூப்பிட யாரோ ஒருவர் சைக்கிளில் வந்தார். மாப்பிள்ளையும் அந்தச் சைக்கிளிலேறிப் போய்விட்டார். ஊருக்குப் போகிறதாக உங்களிடம் சொல்லச் சொன்னுர்" என்று தணிகாசலம் பிள்ளையிடம் கூறியதுந்தான், அவருக்கு விஷயம் விளங்கியது.

தணிகாசலம் பிள்ளைக்கு மாப்பிள்ளை ஏன் இப்படித் திடீரென்று கிளம்பி விட்டார் என்று விளங்கவில்லை. அவர் மனைவி லட்சுமிக்கு, பார்வதி ஒரு சமயம் ஏறுமாருக நடந்து கொண்டாளோ என்ற சந்தேகம். இல்லாவிட்டால், என்ன தலை போகிற காரியமாக இருந்தாலும் ஒரு வார்த்தை வீட்டில் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பி விடுவாரா என்று நினைத்தாள்.

ஆகவே பார்வதியிடம் போய், "ராத்திரி அந்தத் தம்பி, உன்னிடம் என்னடி பேசியது?" என்று கேட்டாள். பார்வதிக்கு வெட்கமாக இருந்தது. அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. 'என்ன பேசினாராம்! அவர் பேசியதை எல்லாம் அப்படியே சொன்னால் அவரை ஒரு பைத்தியம் என்றல்லவா கருதி விடுவார்கள்!' என்று நினைத்தாள் பார்வதி.

வாஸ்தவமாகவே செல்லத்துரை ஒரு பைத்தியம் போலத்தான் முதல் நாளிரவு பேசினான். பார்வதியைப் பார்த்து என்ன என்னவோ வர்ணித்தான். "உனக்கு இணையான அழகுள்ளவர்கள் இந்த உலகத்திலேயே இல்லை!" என்று கூடச் சொன்னான். "பார்வதி! பார்வதி!" என்று அவளை ஆயிரந்தடவை ஆசை தீர அழைத்தான்.

அப்படிச் செய்தவனா, இன்று அதுவும் மறுநாளே தன்னை விட்டு விட்டு இம்மாதிரி ஓடி விட்டான், என்று நினைத்ததும், பார்வதியின் இதயமே வெடித்து விடும் போலிருந்தது.

அவருக்கு யார் மீதும் ஆத்திரம் ஏற்படவில்லை. தன்னுடைய தலைவிதி தான் அப்படித் தன்னை வாதிக்கிறது என்று நினைத்தாள். 'ஒரு சமயம் என் சித்தி சொல்வது போல் நான் ஒரு துடை காலி தானா? அதனால் தான் பகவான் என்னை வதைக்கிறானா?' என்று எண்ணிக் கொள்வாள். அப்பொழு தெல்லாம் அவள் கண்களிலிருந்து புலபுல வெனக் கண்ணீர் வடியும்.

6

நாட்கள் சில ஓடின. இதற்கிடையில் தணிகாசலம் பிள்ளை சம்பந்தி வீட்டிற்குப் போய் விஷயங்களை யெல்லாம் சாங்கோபாங்கமாகப் பேசினார்.

சம்பந்தியாகிய பெரிய பண்ணைப் பிள்ளையின் நிலை தலைவலி போய்த் திருகுவலி வந்த கதையில் ஆகி விட்டது. கல்யாணம் செய்து விட்டால் பிள்ளையாண்டான் உருப்படுவான் என்று அவர் நினைத்திருந்ததற்கு மாறாக,

இப்பொழுது அவனும் உருப்படாமல் போனதோடு நில்லாமல் ஒரு பெண்ணின் வாழ்க்கையையும் சேர்த்துக் குட்டிச் சுவராக்கி விட்டான். இதை நினைக்க, பெரிய பண்ணைப் பிள்ளைக்கு சித்திரவதையாக இருந்தது.

கடைசியாக சம்பந்திகள் இருவரும் சேர்ந்து, ஒரு யோசனை செய்தார்கள். என்னவென்றால், பார்வதியை இங்கே (செல்லத்துரை வீட்டில்) கொண்டுவந்து விட்டா லாவது அவன் மனம் மாறுதா என்று நினைத்தார்கள்.

அந்த உத்தேசத்துடனே தணிகாசலம் பிள்ளை ஊருக்குத் திரும்பி வந்தார். பார்வதியைக் கூப்பிட்டு, புருஷன் வீட்டிற்குப் புறப்படத் தயார் செய்யும்படி கூறினர்.

பார்வதியின் உள்ளம் ஒரு நிலையில் இல்லை. ஒரு பக்கம் குதூகலமும், ஒரு புறம் கலவரமும் ஏற்பட்டு அவளை வதைத்தன.

கணவனைச் சந்திக்கப் போகிறோம் என்ற பெரு மகிழ்ச்சி ஒரு கணம் அவள் மனத்தில் தோன்ற, உடல் முழுவதும் ஒரு புத்துணர்ச்சி பரவும். மறு விநாடி அவர் எப்படி நடந்துகொள்வாரோ, என்னுடன் பேசுவாரோ... மாட்டாரரோ? ஒரு சமயம் நான் அங்கே போனதும் வீட்டிற்கு வருவதையே நிறுத்தி விட்டால்? என்று நினைத்ததும் அவள் உள்ளம் பகீரென்று அலறும். தன்னுடைய இஷ்டதேவதைகளை யெல்லாம் பிரார்த்தித்துக் கொண்டாள். அவளுக்கு பேசும் தெய்வம் போல இருந்தது, ஈஸ்வரன் கோவில்ல் இருந்த நந்திகேசுவரர். அங்கே போய் வெகு நேரம் பிரார்த்தனை செய்தாள்.

நந்தி பகவானே! என்னை நீ மறந்தாலும் உன்னை நான் மறக்கவில்லை! தேவா! இன்று என் கணவன் வீட்டிற்குப் போகிறேன். அங்கே நான் நிம்மதியாக வாழும்படி அருள்புரிய மாட்டாயா? நான் பிறந்தது முதல் இன்றுவரை என்னை வதைத்து வந்திருக்கிறாய். இனியாவது என்மீது கருணை காட்டப்பா, ஈசனே! என்று கண்ணீர் பெருக இறைஞ்சினள்.

கோவிலிலிருந்து வீடு திரும்பியதும் அவளுக்குத் திடீரென்று ஒரு ஞாபகம் தோன்றியது. அவள் தகப்பனர்

அடிக்கடி சொல்லுவார்; "யாராவது மனம் நொந்து நம்மைச் சபித்தால் நாம் வாழ மாட்டோம் அம்மா! யார் மனதுக்கும் கஷ்டம் கொடுக்கவே கூடாது" என்று தம் மகளிடம் அடிக்கடி கூறி இருக்கிறார். இதைநினைத்ததும் அவளுக்குச் சட்டென்று ஒரு விஷயம் மனதில்பட்டது. ஒரு சமயம் சித்தியின் மனம் நோகும்படி நான் ஏதாவது செய்து விட்டேனா? அதற்காக அவள் சபித்துக் கொண்டிருப்பாளோ? என்று எண்ணினாள்.

உடனே தன் சிற்றன்னை இருந்த இடத்திற்கு அவசரமாகப் போனாள். அப்பொழுது லட்சுமி அடுக்களையில் ஏதோ கைக் காரியமாக இருந்தாள்.

சித்தி! சித்தி! என்று பரபரப்போடு கூப்பிட்டாள். லக்ஷ்மி வேலையைப் போட்டு விட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

பார்வதி அவசர அவசரமாகப் போய் அவள் காலைப் பிடித்துக் கொண்டாள். "சித்தி! நான் தெரியாத்தனமாக உங்கள் மனம் கஷ்டப்படும்படி நடந்திருப்பேன்! அதை மன்னித்து விடுங்கள், சித்தி! சத்தியமாகச் சொல்கிறேன், அதை யெல்லாம் நான் தெரிந்து செய்திருக்கவே மாட்டேன்!........என்னை அதற்காகச் சபிக்காதீர்கள்...... மன்னித்தேன் என்று சொல்லுங்களேன், சித்தி!..... அப்பா அடிக்கடி யாராவது நம் மேல் வருத்தப்பட்டுச் சபித்தால், நாம் வாழ மாட்டோம், என்று சொல்லுவார்கள். நீங்கள் எனக்குச் சாபம் கொடுக்காதீர்கள், சித்தி!......நீங்கள் பெற்ற பெண் மாதிரி என்னை நினைத்துக் கொள்ளுங்கள். என் மீது முழு ஆசை வைத்து மனப்பூர்வமாக ஆசீர்வாதம் செய்யுங்கள்......சித்தி! நான் வாழ வேண்டாமா?" என்று உணர்ச்சி வேகத்தில் கோவென்று கதறிக் கொண்டு லட்சுமியின் பாதத்தில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

சட்டென்று லட்சுமி குனிந்து அவளை வாரியெடுத்து அணைத்துக்கொண்டாள். "பார்வதி என்னடி சுத்தப் பைத்தியமாகஇருக்கிறாய்? உன்மீது எனக்கு என்ன கோபம்? ஒன்றும் இல்லையடி கண்ணே! உன் வெள்ளை

மனத்துக்கு, கடவுள் உன்னை எவ்வளவோ நல்ல நிலையில் வைப்பார். கவலைப்படாதே" என்று கூறும்போதே லக்ஷ்மியின் குரல் கம்மியது. கண்கள் கடகடவென நீரைக் கக்கின.

இந்தக் காட்சியை யெல்லாம் கூடத்தில் நின்று கொண்டிருந்த தணிகாசலம் பிள்ளை பார்த்து விட்டார். அவர் உடல் துடித்தது. இவ்வளவு பயங்கரமான சோதனையில் ஆண்டவன் தன்னை ஈடுபடுத்தி அலைக் கழிப்பதை எண்ணிக் கற்சிலைபோல் நின்று விட்டார்.

7

பார்வதி கணவன் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள். அவள் அங்கே போன அன்று இரவுதான் எங்கோ சுற்றி விட்டுச் செல்லத்துரை வீட்டிற்கு வந்தான். வந்தவன் பார்வதியிடம் ஒன்றுமே பேசவில்லை.

அன்று இரவு பார்வதி தான் அவனுக்குச் சாப்பாடு பரிமாறினள். அவன் சாப்பிட்டு விட்டுக் கை கழுவ இரண்டாங் கட்டு முற்றத்திற்கு வந்தபொழுது ஜலத்தை எடுத்துக் கொண்டு பார்வதியும் அவன் பின்னலேயே வந்தாள். தண்ணீர்ச் செம்பை வாங்குவதற்குச் செல்லத்துரை கையை நீட்டினன்.

செம்பை அவன் கையில் கொடுக்காமல், என்னை மறந்து விட்டுத்தானே இவ்வளவு நாட்களாக இருந்தீர்கள்? என்று கொஞ்சலாகக் கேட்டாள்.

"சரி சரி! செம்பைக்கொடு!" என்று சீறினன் செல்லத்துரை.

பார்வதியின் கண்களில் நீர் தளும்பியது. ஒன்றும் பதில் பேசாமல் செம்பை அவனிடம் கொடுத்துவிட்டு விருவிருவென்று உள்ளே போய் விட்டாள்.

அன்று இரவு பார்வதி சாப்பிடவே இல்லை. மாமியார் கேட்டதற்கு 'பசி இல்லை,' என்று சொல்லிவிட்டாள். இரவு முழுவதும் படுக்கையில் படுத்து விம்மிக்கொண்டே இருந்தாள். செல்லத்துரை சாப்பிட்டுவிட்டு வெளியே போனவன் போனவன்தான்.

பார்வதி கணவன் வீட்டிற்கு வந்து இரண்டு தினங்கள் ஆயின. இந்த இடை நாட்களில் செல்லத்துரை சாப்பாட்டு நேரத்திற்கு வருவான். சாப்பிட்டு முடிந்ததும் வெளியே கிளம்பி விடுவான். பார்வதியோடு அவன் ஒரு வார்த்தை கூடப் பேசுவது இல்லை. அவள் எதிரே வந்தால், தலையைக் குனிந்துகொண்டு போய் விடுவான்.

மூன்றும் நாள் காலை தணிகாசலம் பிள்ளை ஊருக்குப் புறப்படத் தயாரானர். மகளைக்கூப்பிட்டு எவ்வளவோ புத்திமதிகள் கூறினர். ஆண்டவன் வாழ் நாள் முழுவதும் அவளை இப்படியே வைத்துவிட மாட்டார் என்று தேற்றினர்.

பார்வதி எதுவுமே பதில் பேசவில்லை. மௌனமாகக் கண்ணீர் வடித்துக்கொண்டு நின்ருள். கடைசியாக தணிகாசலம் பிள்ளை ஊருக்குப் பயணத்துடன் கிளம்பியதும், ஆத்திரத்தை அடக்க முடியாமல் ஓ வென்று அழுது விட்டாள்.

8

பார்வதி புருஷன் வீட்டிற்கு வந்து ஒன்பது மாதங்களாகி விட்டன, இந்த ஒன்பது மாதத்திற்குள் அவள் அனுபவிக்க வேண்டியதை யெல்லாம் அனுபவித்து விட்டாள்.

செல்லத்துரை ஒரு நாளாவது அவளோடு சந்தோஷமாகப் பேசியதில்லை. ஆனல் ஏதாவது சில தவறுகள் செய்து விட்டாளானலும் அவளுக்கு அடி உதைகள் கட்டாயம் அவனிடமிருந்து கிடைக்கும்.

இப்படிக் கணவனல் நிராகரிக்கப்பட்ட பார்வதிக்கு மாமியின் கொடுமையும் சகிக்க முடியாமல் இருந்தது. அவள் மாமியார் எதற்கெடுத்தாலும், "என் பிள்ளை, இந்த துக்கிரி அடி எடுத்து வைத்த நேர விசேஷத்தினல் வீட்டைக்கூடத் திரும்பிப் பார்ப்பதில்லை. இருந்திருந்தும் ஒரு துடைகாலியைப் பார்த்துத் தேடிக்கொண்டு வந்தேனே!" என்று முகத்தைத் திருப்பிக்கொள்வாள்.

அனுதினமும் புருஷன் வீட்டில் பார்வதிக்குக் கஷ்டங்கள் வளர்ந்து கொண்டே வந்தன. கடைசியில் ஒரு நாள்

தாங்க முடியாதபடி செல்லத்துரை அவளை அடித்து விட்டான். அவளுக்கு உடல் முகம் எல்லாம் வீங்கிப்போய் விட்டன. இனிப் பொறுக்க இயலாது என்ற நிலைமை ஏற்பட்டதும் தன் தந்தைக்குச் சொல்லி அனுப்பினுள்.

தணிகாசலம் பிள்ளையும் வந்து சேர்ந்தார். தம் மகள் இருக்கும் நிலையைப் பார்த்ததும், அவருக்கு என்னசெய்வதென்றே தெரியவில்லை. ஒன்றும் பேசாமல் மௌனமாகத் தன் மகளை அழைத்துக்கொண்டு ஊர் திரும்பினுர்.

9

ஊருக்கு வந்த பிறகு பார்வதியின் மனம் ஒரு நிலையில் இல்லை. தன் கணவன் என்ருவது ஒரு நாள் தன்னிடம் வந்து சேரமாட்டான என்று ஏங்கிக்கொண்டிருந்தாள். தன் இஷ்ட தெய்வமான நந்தி கேசுவரர் முன் தினமும் போய் நின்றுகொண்டு கண்ணீர் விடுவாள்.

"நந்தி பகவானே! எப்படியாவது என் கணவரை, என்னிடம் நீதான் சேர்ப்பிக்க வேண்டும்........ஈஸ்வரா! கடவுளை நம்பினுல், எந்தக்கஷ்டமும் வராது என்று அப்பா சொல்லுவாரே! அப்படியிருக்க, உன்னையே நம்பி இருக்கும் எனக்கு, நீ ஏன் நல்ல கதிவிட மாட்டேனென்கிருய்? உனக்கு என்ன அபசாரம் செய்தேன்? என்று உருக்கமாகக் கண்ணீர் விடுவாள்.

பார்வதி தாய் வீட்டிற்கு வந்து கொஞ்ச நாட்கள் வரையில் அவளுடைய சிறிய தாயார் லட்சுமி பிரியமாக இருந்தாள். நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாக அவளிடம் விரோதம் பாராட்ட ஆரம்பித்து விட்டாள். எடுத்ததெற்கெல்லாம் சீறி விழுவாள். பெயரைப்பார் பார்வதியாம், பார்வதி! போன இடமெல்லாம் துடைத்துவிட்டு வரும் மூதேவிக்குப் பெயர் பார்வதி! என்று இடித்துப் பேசுவாள்.

இவற்றையெல்லாம் கூடப் பார்வதி ஓரளவு பொறுத்துக்கொண்டாள். ஆனுல், "இவள் எண்ணத்திற்கேற்றபடிதான் ஒரு காலி இவளுக்குப் புருஷனுக வாய்த்தான்!" என்று லட்சுமி சொல்லுவதைச் சகித்துக்கொள்ளத்தான் அவளால் முடியாது. என்ன இருந்தாலும்

செல்லத்துரை அவளுடைய கணவன். அவன் என்ன தான் காலியாக இருந்தாலும், அதை பிறர் எடுத்துச் சொல்வதைக் கேட்க பார்வதி சகிக்கவில்லை.

பார்வதிக்கு வாஸ்தவமாகவே செல்லத்துரையின் மீது கோபமே இல்லை. தன்னுடைய வாழ்வினை இப்படி வதைக்கும் போது, செல்லத்துரை என்ன செய்வானென்று மனதைத் தேற்றிக் கொள்வாள்.

ஆனால் செல்லத்துரையைப் பற்றிலட்சுமி ஏதாவது பேச ஆரம்பித்தால் "சித்தி! என்னை எப்படி வேண்டுமானாலும் திட்டிக் கொள்ளுங்கள்! ஆனால் அதை (கணவனை) மாத்திரம் ஒன்றும் சொல்லாதீர்கள்! என் வினை என்னை இப்படி வாட்டுவதற்கு, அது என்ன செய்யும்!" என்று கணவனுக்காகப் பரிந்து பேசுவாள்.

பிறந்த வீட்டிலும் பார்வதிக்குத் தொல்லை மேல் தொல்லையாகத் தான் இருந்து கொண்டிருந்தது. லட்சுமி சதா ஏதாவது நோட்டம் சொல்லிக் கொண்டே இருப்பாள். அந்தப் பிள்ளைகளோ, எல்லாம் ராக்ஷஸப்பசங்கள்! அவைகளிடம் வாயைக் கொடுத்து விட்டு யாராலும் மீள முடியாது. பார்வதிக்கு வாழ்க்கையே, "சீ" என்று வெறுத்துப் போயிற்று. சிலசமயங்களில் அவள் தந்தை பார்வதியைக் கூப்பிட்டு உட்கார வைத்து ஆறுதலாகப் பேசிக்கொண்டிருப்பார். அப்பொழுதெல்லாம், ஒரு குடும்பம் என்றால் எவ்வளவோ இருக்கும். எல்லாவற்றையும் அனுசரித்துக் கொண்டுதானம்மா, போகவேண்டும். என்று சொல்லுவார்.

உள்ளபடியே, பார்வதி எல்லாவற்றையும் அனுசரித்துக் கொண்டு தான் போனாள். அப்படிப் போனாலும் கூட அவளால் நிலைமையை சமாளிக்க முடிய வில்லை. தொல்லை அதிகமாக ஆக, அவளுக்கு இந்த உலகமே பிடிக்க வில்லை, "இந்தப் பாழாய்ப் போன உலகத்தில் எதற்காகப் பிறந்தோம்!" என்று ஏங்குவாள். ஆனால் பிறந்ததைப் பற்றி இனிக் கவலைப்பட்டும் பிரயோசனமில்லை. இந்த பாபபூமியை விட்டுப் போய்விட ஏதாவது

மார்க்கம் தேடிக் கொண்டால் என்ன!......பிராணத்தியாகம்!....இப்படிப்பட்ட விபரீத தீர்மானத்திற்கு வந்த பிறகு தான் ஓர் எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது.

10

ஒரு நாள் அவள் சித்திக்கும் அவளுக்கும் பெரிய சண்டை வந்து விட்டது. லட்சுமி வழக்கத்தைவிட அன்று அதிகமாகவே பேசி விட்டாள். பார்வதிக்கு ஆத்திரம் தாளவில்லை, தன் அறைக்குப் போய்ப் படுக்கையில் படுத்துக் கொண்டு வெகு நேரம் வரையில் தேம்பிக் கொண்டிருந்தாள். "பகவானே! என் கணவரை என்னிடம் சேர்த்துவிடு என்று கல்லும் உருகும்படி பிரார்த்தித்தேனே! இவ்வளவு காலமாக நான், உன் காலடியில் இறைஞ்சி நின்றும் உன் இதயம் இறங்க வில்லையா!" என்று துடிதுடித்தாள். நெடுநேரம் வரையில் பார்வதி படுக்கையிலேயே படுத்து அழுது கொண்டு இருந்தாள். பலவாறாக யோசித்துக் கொண்டே உணர்ச்சி வேகத்தினால் உடலும் மனமும் ஒருங்கே தளர்ந்து போய் அயர்ந்து விட்டாள்.

நல்ல நித்திரையிலிருக்கும் பொழுது, யாரோ தன் மீது கையை வைத்து, "பார்வதி! பார்வதி!" என்று வாஞ்சையாக அழைப்பதை உணர்ந்தாள். திடுக்கிட்டுப் போய் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள்.

அவள் எதிர்பாராத நிலையில் செல்லத்துரையே அங்கே உட்கார்ந்திருந்தான். "யார்! நீங்களா!.........நீங்கள்தானா!" என்று நாக் குழறிக்கொண்டே கேட்டாள் பார்வதி.

செல்லத்துரை ஒன்றும் பேசவில்லை. அவள் முகத்தை பரிதாபகரமாகப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அவன் கையை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள் பார்வதி. பிறகு தன் இதயத்தில் வைத்து அழுத்திப் பிடித்துக் கொண்டாள். "நீங்கள் வந்துவிட்டீர்களா!.......பகவான் என் பிரார்த்தனைக்கு இணங்கி

உங்களை அனுப்பிவிட்டான்!....எங்கே, என்னைப் பாருங்கள்!........என்னைவிட்டு இனிப் போக மாட்டீர்களே!........என்னைத் தவிக்கவிட்டுப் போகமாட்டீர்களே! ....சொல்லுங்களேன்'' என்று உணர்ச்சி வேகத்தில் அவன் முகத்தைப் பற்றிக்கொண்டு கெஞ்சினுள்.

செல்லத்துரை அதற்கும் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவன் முகம் பயங்கர விகாரம் அடைந்திருந்தது. உடல் 'கிடு கிடு' வென நடுங்கிக் கொண்டிருந்தது.

பார்வதிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. "ஏன், என்னவோபோல் இருக்கிறீர்கள்? உங்கள் உடம்பு ஏன் இப்படி நடுங்குகிறது? சொல்லமாட்டீர்களா? என்னை விட்டுப் போக மாட்டீர்களே? அவள் அந்தச் சண்டாளி எங்கே?'' என்று பரபரப்போடு கேட்டாள்.

செல்லத்துரை கடகடவென்று ஒரு சிரிப்புச் சிரித்தான். அந்தச் சிரிப்பிலே உணர்ச்சி இல்லை........ஜீவன் இல்லை. வெறிச்சென்று வறண்ட பேய்ச் சிரிப்பாக இருந்தது அது. "அவளைக் கொன்று விட்டேன், பார்வதி! உன்னையும் என்னையும் பிரித்து வைத்த அந்தச் சண்டாளி எனக்கு துரோகம் செய்து விட்டாள். அவளை இந்த பிச்சுவாவினுல் ஒரே குத்தாக் குத்தி கொன்று விட்டேன். "பார்வதி!'' என்று கூறிக்கொண்டே மடியிலிருந்த ரத்தம் தோய்ந்த பிச்சுவாவை எடுத்துக் கீழே போட்டான். பார்வதி நடுநடுங்கிப் போய் விட்டாள். அவள் உடல் கட்டு மீறித் துடித்தது.

"கொன்று விட்டீர்களா? கொலை செய்துவிட்டீர்களா? நீங்கள் சொல்லுவது நிஜந்தானு?....பொய் சொல்லுகிறீர்கள்—விளையாட்டுக்குச் சொல்லுகிறீர்கள்!—'விளையாட்டுக்குச் சொல்லுகிறேன்' என்று சொல்லுங்களேன்! மாட்டீர்களா?...." என்று அவன் தோள்களைப் பிடித்து உலுக்கினுள்.

செல்லத்துரை ஒன்றும் பேசவில்லை. அவன் கண்களிலிருந்து 'புல புல' வெனக் கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது.

"பகவானே! என் பர்த்தாவைக் கொண்டுவந்து சேர்க்கச் சொல்லியதற்கா இம்மாதிரி செய்தாய்? அட பழிகாரா! அதைவிட அவர் அங்கேயே சுகமாக இருந்திருக்கலாமே! என் பிரார்த்தனைக்கு இணங்கி அவர் உயிரையே பலிகொண்டு விட்டாயே!" என்று அலறினள்.

"ஐயோ! உங்களைக் கைது செய்து விடுவார்களே! ராஜ தண்டனைக்குத் தப்ப முடியாதே! எங்காவது ஓடிப் போவோமா? எங்கே ஓடலாம்?....எப்படி ஓடலாம்? ....என் இன்பமே!....எங்கே என்னைப் பாருங்கள்! என்னோடு பேசுங்கள்!......என்னைப் பார்வதி என்று வாய் நிறையச் சொல்லிக் கூப்பிடுங்கள்! மாட்டீர்களா?........ அதற்குக்கூட நான் கொடுத்துவைக்க வில்லையா? அவ்வளவு பாபியா நான்?" என்று கூறிக்கொண்டே அவன் காலடியில் விழுந்து கோவென்று கதறினள்.

செல்லத்துரை பார்வதியோடு பேசவில்லை. அவளைப் "பார்வதி" என்று வாய் நிறையச்சொல்லிக் கூப்பிட வில்லை. அது ஆண்டவனுக்கே விருப்பமில்லை போல் இருக்கிறது.


இதற்குள் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஏழெட்டு ஜவான்களுடன் திடுதிடுவென்று வீட்டிற்குள் நுழைந்துவிட்டார்.

"அதோ, செல்லத்துரை அவனைக் கைது செய்யுங்கள்" என்று உத்திரவிட்டார் இன்ஸ்பெக்டர்.

"ஐயோ!" என்று அலறிக்கொண்டே மூர்ச்சையானள் பார்வதி.



பக்தி



கோயில் வாசலிலே ஏகக்கூட்டம். உள்ளே, களேபரமான மேளச்சப்தம். பக்தர்களெல்லாம் ஒருங்கே திரண்டு, பகவானின் அருளுக்காக அஞ்சலி செய்து நின்றனர். ஆலாட்சி மணி 'ஓம் ஓம்' என்று, முழங்கியது. ஒரு பக்கத்தில், பெண்கள் கூட்டம், பகவானை மயக்க வந்த மோஹினிகளைப் போல், பல்வேறு அலங்காரங்களுடன் காட்சியளித்தது.

வெகு நேரம் வரையில் பூஜை நடந்தது. வீசைக் கணக்கில் சூடம் கொளுத்தப்பட்டது. சாம்பிராணிப் புகையின் சுழல்கள் கோயிலின் கர்ப்பக்கிரஹத்தை உறை பனி போல் கவ்விக்கொண்டன. ஆனால், பகவான் அருள் புரியவில்லை; அந்த பக்தர் கூட்டத்தின் காணிக்கைகளில் மயங்கி அவர் கண் திறக்கவில்லை.

கோயிலை விட்டுக் கூட்டமாக பக்தர்கள் வெளியேறினர். அவர்கள் கையிலே, கோயில் பிரசாதங்கள் இருந்தன. ஆனால் அவர்கள் முகத்திலே அருள் இல்லை.

ரொம்ப நேரம் கழித்து ஒருவன் வந்தான். அவன் ஏன் அவ்வளவு ஆவேசத்துடன் ஓடிவருகிறான்? பக்தி வெறியிலா?

அவன் கண்கள் இரண்டும் கோவைப்பழம் போல் சிவந்திருந்தன. அவன் கால்கள் தள்ளாடின. குடி வெறியின் கூத்தா அது? அல்லது பழி வாங்கும் உணர்ச்சியின் நேரமா?

சாவதானமாகக் கோயிலுக்குள் நுழைந்தான். கர்ப்பக்கிரகம் வரையில் வெகு வேகமாகச் சென்றான்.

தனியாகப் போய் ஆண்டவனிடத்தில் மன்றாடப் போகிறானா? ஆயிரக்கணக்கான ரூபாய்கள் காணிக்கை செலுத்தியும், நேரில் பிரசன்னமாகாத ஆண்டவன், வெறுங் கையை வீசிக்கொண்டு போகும் இவனுக்கா காட்சியளிக்கப் போகிறான்?

ஆனால் அங்கு போனவன் அந்தச் சிலை உருவைக் கை எடுத்துக் கும்பிடவில்லை. அதற்குப் பதிலாக அந்தச் சிலையைக் கீழே தள்ளி அதன்மேல் ஏறிநின்று கொண்டான். அவன் காலடியில் கிடந்தது அந்த தெய்வீக பிம்பம்.

ஆத்திரத்தோடு அவன் பேசலானான்: "கொள்ளைக் காரர்களும், ஏழைகளை வஞ்சித்து வதைக்கும் கயவர்களும், தங்கள் பாதுகாப்புக்காக ஒரு அயோக்கிய அராஜகனை நியமித்துக்கொண்டு, அவனைக் இக்கல்லினுள் அடக்கி, தெய்வமெனக் கொண்டாடுகிறார்களே, அவன் வரட்டும் என் முன்!"

'கலீரெ'ன்ற ஒரு சிரிப்புச் சப்தம் கேட்டது. ஆண்டவன் அவன் முன் காட்சியளித்தான். அவன் பிரமித்து விட்டான்.

"நான் ஒரு நாஸ்திகன், உன்னை ஒழித்துவிட வேண்டுமென்று ஆசைப்படுகிறவன். உன் பக்த கோடிகளுக்கு உன் தரிசனத்தை அளிக்காமல், எனக்கு அளிக்கிறாயே" என்று திகைப்புடன் கூறினான்.

ஆண்டவன் இலேசாகச் சிரித்தான்.

"நீ என்னை மிதித்தாய். என்னைத்தான் உதாசீனம் செய்தாய். ஆனால் நான் எவற்றை உண்மை என்று கருதுகிறேனோ, அந்த நியமங்களை நீ சிதைக்கவில்லை. நீ உதாசீனம் செய்யவில்லை. ஆகவே, நீதான் என் பக்தன். நீயே என் அருளுக்குப் பாத்திரமானவன்." என்று தண்ணளியுடன் கூறினான்.

நாஸ்திகனின் உடல் சிலிர்த்தது.

"என் தேவே!" என்று ஆண்டவன் முன் மண்டியிட்டு அஞ்சலி செய்தான்.

குரூபி



கலியாணம் ஆவதற்குமுன் நமது வருங்கால மனைவியைப்பற்றி, என்னென்னவோ கனவுகள் காண்கிறோம். உலகத்திலேயே தலைசிறந்த அழகியாக, நம் மனைவி இருக்கவேண்டுமென்றெல்லாம் ஆசைப்படுகிறோம். நாம், மன்மதனாக இருந்தாலும் சரி; அல்லது வால் முளைக்காத 'மேதாவி'யாக இருந்தாலும் சரி; நமது மனைவிமட்டும் பிரமாத அழகியாக இருக்க வேண்டும் என்பதே நமது விருப்பம். ஆனால் நம் அநேகருடைய விருப்பம் நிறைவேறுவதே இல்லை. நாம் எதிர்பார்த்ததற்கு மாறாகத் தான். நமக்குத் துணைவிகள் வாய்க்கின்றார்கள். இதே அனுபவம்தான் ராமகிருஷ்ணன் வாழ்க்கையிலும் ஏற்பட்டது.

ராமகிருஷ்ணன் காலேஜுக்குப் போவதற்கு முன்பெல்லாம், தன்னுடன் ஹைஸ்கூல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பார்வதியைப் போல ஒரு பெண் கிடைத்தால், அதுவே பெரும் பாக்யம் என்று நினைத்துக்கொண்டிருந்தான். ஆனால் காலேஜில் போய் சேர்ந்த பிறகு அவன் அபிப்பிராயம் அடியோடு மாறிப்போய்விட்டது. காலேஜில் தன் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த மிஸ். மேரி ஞானப் பிரகாசத்தின் அழகுக்கு முன்பு பார்வதியின் அழகு எந்த மூலை என்று நினைத்தான். அந்தச் சமயத்தில், அவனுக்கு எந்தப் பக்கம் திரும்பினாலும், மேரி ஞானப் பிரகாசத்தின் உருவமே காட்சியளித்தது.

நான்கு வருட காலம் மேரியின் நினைவிலேயே உழன்றுகொண்டு கிடந்தான். நான்காவது வருட முடிவிலே, ஒருவாருக தனது பி. ஏ. பரீட்சையையும் எழுதினுன். அப்பொழுதுதான் அவன் எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

மேரியை எங்கோ ஒரு மூலையில் கிடந்த, ஜேசுதாசன் எம். ஏ. கல்யாணம் செய்துகொண்டு போய்விட்டான். இந்தச் செய்தியைக் கேட்டதும் ராமகிருஷ்ணனுக்கு நெஞ்சு வெடித்து விடுவதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

ஆனுல் அந்த உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டிருக்க வேண்டியதில்லை. ஏனென்ருல், மேரியைக் கலியாணம் செய்து கொள்வதைப்பற்றி அவன் திட்டமே போட்ட தில்லை. சொல்லப்போனுல், அந்த நான்கு வருட இடைக் காலத்திலே, மேரியோடு ஒரு வார்த்தைகூட அவன் பேசியதில்லை. அவள் எதிரே வரும்பொழுதெல்லாம் சட்டைக் "காலரை" மேலே தூக்கிவிட்டுக் கொள்வான். கைக்குட்டையை எடுத்து முகத்திலே ஒற்றிக்கொண்டு, ஒரு சர்வாதிகாரி நடை நடந்து அவளைத் தாண்டிச் செல்வான்.

இப்படி யெல்லாம் நடப்பதுதான், ஒரு உண்மைக் காதலன், தன் காதலை வெளிப்படுத்தக் கையாளவேண் டியமுறைகள் என்று அந்த அப்பாவி ராமகிருஷ்ணன் நினைத்துக் கொண்டிருந்தான். ஆனுல் மிஸ் மேரி ஞானப் பிரகாசத்தின் பி. ஏ. தேறிய மூளையில் இந்த சூட்சும ஜாலங்கள் விளங்காமல் போய்விட்டன. அதனுல்தான் மிஸ். ஞானப்பிரகாசமாக இருந்த மேரி மிஸஸ் ஜேசு தாசாக மாறியதோடு இருக்காமல் (ராமகிருஷ்ணனின் இதயத்தைத் துடிதுடிக்க விட்டுவிட்டு) காலேஜை விட்டே விலகிவிட்டாள்.

இந்தப் பிரமாதமான ஏமாற்றத்திற்குப் பின், ராம கிருஷ்ணன் மேலே படிக்க விரும்பவில்லை. மேரி ஞானப் பிரகாசம் இல்லாத இடம், ஒரே சூனியமாகத் தோன்றி யது அவனுக்கு. ஆகவே பி. ஏ. யோடு தன் படிப்பை முடித்துக்கொண்டு கிராமத்திற்குத் திரும்பிவிட்டான்.

ராமகிருஷ்ணனின் தந்தை ஒரு பெரிய மிராசுதார். தன் மகன் சர்வகலாசாலைப் பட்டம் பெற்றிருப்பதைக் கண்டு தனக்கே "ராவ்பகதூர்" பட்டம் கிடைத்தது போல பெரு மகிழ்ச்சி அடைந்தார். உலகத்திலே எல்லாப் பணக்காரத் தந்தைகளும் செய்வதைப்போல, அவரும், தன் பிள்ளைக்கு மணம் செய்து வைக்க முயற்சி எடுத்துக் கொண்டார்.

தன் அந்தஸ்துக்கும் தகுதிக்கும் ஏற்ப ஒரு பெரிய இடத்திலே நிச்சியதாம்பூலம் செய்து, கல்யாண தேதியும் குறிப்பிட்டுவிட்டார்.

கல்யாணம் நெருங்க நெருங்க, ராமகிருஷ்ணன் மனது வெகு தீவிரமாக அலை பாய்ந்தது. தனக்கு வரப்போகும் வாழ்க்கைத் துணைவி எப்படி இருப்பாளோ, என்ற கவலை வேறு அவனை வாட்டியது. மேரியைப் போல, வருகிறவளும் அழகாக இருக்கமாட்டாளா, என்று ரொம்பவும் ஏங்கினான். அவன் தங்கை பங்கஜமும் பெண் வீடு பார்க்கப் போயிருந்தாள். அவளை அழைத்து, ரகசியமாக, "உன் மன்னி எப்படி இருக்கிறாள்?" என்று கெஞ்சலாகக் கேட்டான்.

"பெண் நல்ல எடுப்பாக இருக்கிறது அண்ணா!" என்று தைரியம் அளித்தாள்.

கல்யாண தினம் மிக விரைவாக நெருங்கிக்கொண்டே வந்து விட்டது. கடைசியாக திங்கட்கிழமையன்று இரவு, பெண்ணைப் "பரிசம் போட்டு" பிள்ளை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டார்கள்.

வாயிற்படியிலே பெண் வந்து ஏறும் பொழுது, ஹால் ஜன்னல் வழியாகப் பெண்ணை ஆவலோடு பார்த்தான் ராமகிருஷ்ணன். அவளைப் பார்த்ததும் அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஏனென்றால், அவன் தங்கை பங்கஜம் சொல்லியதைப்போல, பெண் அவ்வளவு எடுப்பாக இல்லாவிட்டாலும் அவள் பல் வரிசை மட்டும் எடுப்பாகவேதான் இருந்தது. அத்துடன், பெண் ஒரு அழகி என்றும் சொல்ல முடியாது. மாநிறம்தான். வயது 17 அல்லது 18 இருக்கும். பெயர் மட்டும் வனஜா!

ராமகிருஷ்ணனுக்கு அழுகையும், ஆத்திரமுமாக வந்தது. இருந்திருந்தும், இந்தக் கஷ்டகாலத்தைப் பிடித்துக் கொண்டு வந்து, தன் தலையில் கட்டினார்களே, என்று தன் பெற்றோர்கள் மீது அபார கோபம் கொண்டான்.

ஒன்றும் பேசாமல் தன் அறையில் படுத்துக்கொண்டு பொருமினான்.

ஆயிற்று: தாலி கட்டும் நேரம் வந்தது. எப்படியோ தன் உணர்வு இல்லாமல் போய் மணையில் உட்கார்ந்தான். அவன் முகத்திலே 'களை' என்பதே கொஞ்சங்கூட இல்லை.

கல்யாணம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. ராம கிருஷ்ணனைத் தவிர, மற்ற எல்லோருமே, ஆனந்தத்தில் மூழ்கி இருந்தார்கள். முகூர்த்தம் முடிந்ததும், இரவு ஊர் வலம் விடவேண்டுமென்று ராமகிருஷ்ணனின் தந்தை ஏற்பாடு செய்தார்.

ராமகிருஷ்ணனுக்குக் கோபம் அவனை மீறிக்கொண்டு வந்தது. "நீங்கள் பெண் பார்த்துக்கொண்டு வந்திருக்கும் அழகில் ஊர்வலம் வேறு நடத்தவேண்டுமா?" என்று சீறி விழுந்தான். அவன் பெற்றோர்கள் எவ்வளவோ சமாதானப்படுத்தினர். ராமகிருஷ்ணன் கொஞ்சங்கூட அசைந்து கொடுக்கவில்லை.

ராமகிருஷ்ணன் தந்தைக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. அவன் தாயார் சகோதரிகள் எல்லாம் ஏதோ துக்கம் கொடுத்தவர்கள் போல் உட்கார்ந்திருந் தனர். இந்த விஷயம், மணப்பெண் வனஜாவின் காதி லும் விழுந்தது. அதைக்கேட்டு அவள் அடைந்த உணர்ச் சியை வர்ணிக்க வார்த்தை கிடையாது.

* * * *

கல்யாணம் நடந்து 'மறு உண்க,' தம்பதிகளை அழைத்துக்கொண்டு போனார்கள். ராமகிருஷ்ணன் கொஞ்சங்கூடக் குதூகலமில்லாமல் மாமனார் வீடுபோய்ச் சேர்ந்தான். சாந்திக் கல்யாணத்தையும் அப்பொழுதே முடித்துவிடலா மென்று தீர்மானித்தனர். அதன்படியே ஏற்பாடுகளும் நடந்தேறின.

* * * *

படுக்கை அறையின் ஜன்னல் வழியாகக் குளிர்ந்த நிலா, வீசிக் கொண்டிருந்தது. ஒரு மூலையில் வைக்கப் பட்டிருந்த குத்து விளக்கின் சுவாலை காற்றுடன் கொஞ்சியவண்ணம் இலேசாக அசைந்து கொண்டிருந்தது. ஊதுவர்த்திகளின் வாசனை 'கம்' மென்று மணம் பரப்பியது. கட்டிலின் மீது படுத்திருந்தான் ராமகிருஷ்ணன். அவன் மனம் தாங்க முடியாத உபாதைகளால் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தது. சிகரெட்டின் மேல் சிகரெட்டாக புகைத்துக் கொண்டிருந்தான். ஜன்னலோரமாக நின்று கொண்டிருந்தாள் வனஜா. அவளுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. முதன் முதலாக சயன அறையில் தன் கணவனை சந்திக்கப்போகும் அவள் உள்ளம்—அதிலும் தன்னை விரும்பாத நாயகனைச் சந்திக்கப்போகும் அவள் உள்ளம்—கட்டு மீறிய உணர்ச்சிகளால் துடித்துக் கொண்டிருந்தது. ராமகிருஷ்ணன் அவளை அழைக்கவில்லை. அவள் இருந்த இடத்தை நெருங்கக்கூட இல்லை. ஆனால் அவள்....? அவள் என்ன செய்ய முடியும்?......

ராமகிருஷ்ணனின் மனம் எங்கெங்கோ அலை பாய்ந்தது. வாழ்க்கையில் தான் போட்டிருந்த திட்டமெல்லாம் தலைகீழாகக் கவிழ்ந்து போனதை எண்ணி மனம் குமுறினான்.

வனஜா ஜன்னலோரத்திலேயே நின்றுகொண்டிருந்தாள். ஒரு காலத்தில் அந்த இரவை நினைத்து எவ்வளவோ கனவுகள் கண்டிருக்கிறாள்! எப்படி எப்படியெல்லாமோ தன் கணவனோடு அந்த முதல் இரவிலே, பேச வேண்டும் கேலி செய்ய வேண்டும்! என்று நினைத்திருந்தாளே! அவையெல்லாம், இன்று தேய்ந்த கனவாக மாறிவிட்டனவே! இதையெல்லாம் நினைத்து வனஜாவின் உள்ளம் துடிதுடித்தது.

அழகாகப் பிறக்காதது அவள் குற்றமா? ஆண்டவன் சிருஷ்டிக் கோளாறுக்கு, அவள் தண்டனை அனுபவிக்க வேண்டுமா?

வனஜாவிற்கு இந்த அக்கிரம நியதியின் தத்துவம் விளங்கவில்லை.

திடீரென்று அவளுக்குத் தன் தோழி மங்களத்தின் ஞாபகம் வந்தது. மங்களம் மகா குரூபி. அவள் முகத்திலே அழகோ, தேஜஸோ, கிடையாது. அப்படியிருந்தும் மங்களத்தின் கணவன் அவளிடம் எவ்வளவு பிரியமாக இருக்கிறன்!

அவளைவிட நான் அழகற்றவளா? அவள் முகத்தைவிட என் முகம் கோரமாக இருக்கிறதா? என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டாள்.

ஊர்வலத்தில் வந்து உட்கார ராமகிருஷ்ணன் மறுத்த போதே, வனஜாவிற்குத் தன் பயங்கர எதிர்காலத்தைப் பற்றி ஓரளவு விளங்கியது. எதிர்காலத்திலே தன் வாழ்வு எப்படிப்பட்ட நரக வேதனையாக மாறும் என்றும் யூகித்திருந்தாள்.

அவ்வளவு தூரம் அவள் தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தும், இன்று சோபன அறையிலே தனக்குக் கிடைத்த புறக்கணிப்பை அவளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை........

* * * *

படுக்கை அறைக்கு வெளியிலே பெண்களெல்லாம் 'கொம்மாளம்' அடித்துக்கொண்டு கிடந்தனர். காதல் வெறி ததும்பும் சிருங்காரப் பாட்டுக்களைப் பாடிய வண்ணம் ஒரே 'ரகளை' செய்து கொண்டிருந்தனர். அறைக்குள் தனித்திருக்கும் இரு ஜீவன்களின் உள்ளுணர்ச்சியை எழுப்பும் நோக்கத்தோடு அவர்கள் பாடிய பாட்டுக்கள் புதுத் தம்பதிகளின் இதயத்தைச் சித்திரவதை செய்தன.

நேரம் ஆக ஆக வெளியிலே கீதம்பாடிய பெண்களெல்லாம் ஒவ்வொருவராக ஒடுங்கிவிட்டனர். நடுநிசியாகிக் கொஞ்சநேரம் ஆவதற்குள் எல்லாப் பெண்களும் படுத்துவிட்டனர்.

எங்கு பார்த்தாலும் ஒரே நிசப்தமாக இருந்தது. மௌனத்தின் மத்தியிலே அந்த இரு புது மணத் தம்பதிகளும் அமிழ்ந்து கிடந்தனர்.

* * * *

நேரம் கழிந்து கொண்டே சென்றது. விடியும் நேரமும் ஆகி விட்டது. ராமகிருஷ்ணன் இன்னும் தீவிர ஆலோசனையிலேயே இருந்தான்.

வனஜா கண்களில் நீர்வடிய கந்திரனைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

சாமக் கோழி ஒன்று எங்கிருந்தோ கூவியது. திடுக்கிட்டு உணர்வடைந்தான் ராமகிருஷ்ணன். அவ்வளவு சீக்கிரமாகப் பொழுது விடிந்து விடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்து, இலேசாக வனஜாவின் பக்கம் திரும்பிப் பார்த்தான். தற்செயலாக வனஜாவும் அவனைப் பார்த்தாள். இருவர் பார்வைகளும் சந்தித்தன. வனஜாவின் கண்களில் நீர் தோய்ந்திருந்தது. ஏக்கமும் ஏமாற்றமும் கலந்த அவளுடைய பார்வை அவன் மனதை என்னவோ செய்தது.

அவளையே சிறிது நேரம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் ராமகிருஷ்ணன். அவளைப் பார்க்கப் பார்க்க அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. அவன் சிந்தனைகள் அலைபாய்ந்தன.

பாவம்! ஒரு இரவு முழுவதும் நம்மையே எண்ணி ஏங்கிக் கொண்டு நின்றிருந்தாளே! என்று எண்ணியதும் அவன் நெஞ்சு 'பகீ'ரென்று அலறியது.

உன்னைத் தவிர இவளுக்கு வேறு யார் இருக்கிறார்கள்? உனக்காகவே படைக்கப்பட்ட ஒரு ஜீவன் அவள்! அவள் தன் வாழ்நாள் முழுவதும் உனக்குத்தான் சொந்தம். உன்னையே நம்பித்தான் அவள் காலந் தள்ள வேண்டும். அவளை இப்படி உதாசீனம் செய்வது நியாயமா? என்று அவன் மனம் இடித்துக் காட்டியது

அழகாகப் பிறக்கவில்லையென்றால், அவளை எதற்காக நீ மணம் செய்து கொள்ள வேண்டும்? உன் பெற்றோர்கள் அம்மாதிரி தவறு செய்தார்களானால் அதற்கு பாவம்; இந்தப் பெண் என்ன செய்வாள்? என்று அறிவு குறுக்குக் கேள்விகள் கேட்டது.

அவன் நெஞ்சம் குழம்பிப் போய் விட்டது. ஒரு இரவு முழுவதும் தன்னை நினைத்து ஏங்கி ஒரு அபலை கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் பொழுது அவள் இருதயம் இடிந்து போகும்படி செய்து விட்டோமே என்று நொந்து கொண்டான். வனஜாவின் மேல் அவனுக்கிருந்த ஆத்திரம் கலந்த வெறுப்பு மாறி விட்டது.

மெதுவாகப் படுக்கையை விட்டு எழுந்து அவளை நெருங்கினான். வனஜா! என்று ஆர்வத்தோடு அழைத்துக் கொண்டே அவள் கரங்களைப் பிடிக்கப் போனான். அந்தச் சமயத்தில் படுக்கை அறையின் கதவு தட்டப் பட்டது. "வனஜா" என்று அவள் தாயார் கூப்பிட்டாள். சட்டென்று தான் நின்ற இடத்தை விட்டு வாயிற் பக்கம் ஓடினாள் வனஜா. அவசர அவசரமாய்க் கதவைத் திறந்து கொண்டு வெளியே போய் விட்டாள். ராமகிருஷ்ணனுக்கு அது பெரும் ஏமாற்றமாக இருந்தது.

* * * *

அன்று காலை எழுந்ததிலிருந்து ராமகிருஷ்ணனின் மனது ரொம்பவும் குழம்பி இருந்தது. நேற்றிரவு வனஜாவிடம் தான் நடந்துகொண்ட முறையும், கடைசியில் அவள் தன்னை அலட்சியம் செய்து விட்டுப் போனதும் அவனுக்கு நினைக்க நினைக்க வெட்கத்தையும் ஆத்திரத்தையும் கிளப்பி விட்டுக்கொண்டே யிருந்தது.

அன்று காலையில் காப்பி சாப்பிடும்பொழுது ராமகிருஷ்ணனின் மைத்துனன் மனைவிதான் பரிமாறினாள். ராமகிருஷ்ணனின் மைத்துனன் (வனஜாவின் அண்ணன்) அவ்வளவு அழகானவனல்ல. அவன் வகையராவுக்கு அளித்திருந்த பிரத்தியேக சலுகையை, அவன் விஷயத்திலும் ஆண்டவன் அளித்திருந்தான். அதாவது அவன் பல்லும் உலகத்திற்குக் கொஞ்சங்கூட அஞ்சாமல்—ஏன்: அவனுக்கே அஞ்சாமல்—ஒரு அங்குலம் உயர்ந்து கொஞ்சம், 'கிதாப்' பாகவே நின்றது! இந்த மன்மத சொரூபனுக்கு வாய்த்த மனைவி கிளி மாதிரி இருந்தாள்.

அவளைப்பார்க்கும் பொழுதெல்லாம் ராமகிருஷ்ணனுக்கு சித்திரவதையாக இருந்தது. "நான் என்ன, அழகற்றவனா? நான் பி. ஏ. படிக்கவில்லையா? சொத்துத் தான் இல்லையா? பின் எதற்காக இந்தக் குரூபியைக்

கல்யாணம் செய்துகொண்டு அழவேண்டும்? என்று நினைத்தான்.

மூளையின் சம்பந்தம் அறவே அற்றவனும், மகா அவலட்சண சிகாமணியுமான தன் மைத்துனன் உலகில் சிறந்த அழகி ஒருத்தியோடு வாழ்க்கை நடத்தும்பொழுது தனக்கு மட்டும் ஒரு கோரரூபிணியா? இதை நினைக்கும் பொழுதெல்லாம் தன் மைத்துனன் மீது அவனுக்கு அபார ஆத்திரம் வந்தது!

வேண்டுமென்றே, தன்னை அவமானப்படுத்த, வனஜாவை எல்லோரும் தன் தலையில் கட்டி விட்டார்கள் என்று தீவிரமாக நம்பினான். அதை நினைக்கும்போது அவன் கண்களில் நீர் தளும்பியது.

காலை சாப்பாட்டிற்குப் பிறகு அவனுக்கு அங்கே தங்கி இருக்கவே மனம் இல்லை. இன்னும் கொஞ்சநேரம் அங்கே இருந்தால் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. ஆகவே ஆத்திரத்தோடு யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல், தன் ஊருக்குக் கிளம்பி வந்து விட்டான்.

* * * *

ஊருக்கு வந்த பிறகு அவனுக்கு வனஜாவிடமிருந்து பல கடிதங்கள் வந்தன. அவற்றில் அநேக கடிதங்கள் பிரிக்கப்படாமலே அவன் அறையில் கிடந்தன. வனஜா சம்பந்தப்பட்ட எந்த விஷயமாக இருந்தாலும் அது அவனுக்கு நஞ்சாக இருந்தது.

அவனுடைய பெற்றோர்கள் ரொம்பவும் கவலைப்பட்டார்கள். 'இருந்திருந்தும் ஒரே பிள்ளைக்குக் கல்யாணம் செய்தோம். அது சுக வாழ்வு நடத்துவதைப் பார்க்க முடிய வில்லையே!" என்று ஏங்கினார்கள்.

* * * *

நாட்கள் ஓடிக்கொண்டே இருந்தன. கிட்டத்தட்ட வருடம் ஒன்று நெருங்கி விட்டது. அது வரையில் வனஜாவிற்கு அவன் ஒரு கடிதம்கூட எழுதவில்லை. அந்த ஊரின் பக்கம் தலை காட்டக்கூட இல்லை.

இந்தச் சமயத்திலே ஒரு நெருக்கடியான சம்பவம் நேர்ந்து விட்டது.

ராமகிருஷ்ணனுக்கு தந்தையோடு பிறந்த சிற்றப்பா ஒருவர் உண்டு. அவருடைய பெருமுயற்சியின் காரணத்தால்தான் வனஜாவிற்கும் அவனுக்கும் கல்யாணம் நடந்தது.

தான் போட்ட சம்பந்தம் இப்படி விபரீதமாய் முடிந்ததைக் கண்டு அவருக்கு ரொம்பவும் ஏக்கமாகவே இருந்தது. ஆகவே இதை ஈடுசெய்ய அதே வீட்டில் இன்னொரு சம்பந்தம் போட ஆசைப்பட்டார்.

அதன் விளைவாகத் தனது பையனுக்கு, வனஜாவின் ஒன்றுவிட்ட சகோதரியை மணம் முடிக்கத் திட்டம் போட்டார்.

அந்தப் பெண்ணுக்குத் தாயாரில்லை. அதன்படியே கல்யாண ஏற்பாடுகளெல்லாம் முடிந்தன. திருமணம், பெண் வீட்டிலே நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது.

தன் சிற்றப்பா மகனின் கல்யாணத்திற்கு ராமகிருஷ்ணனும் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. எவ்வளவோ தூரம் தட்டிக்கழிக்கப் பார்த்தும் முடியவில்லை. அதுவும்தவிர தன் சிற்றப்பா பேச்சைத் தட்டிப் பேசும் தைரியம் அவனுக்கு எந்தக் காலத்திலும் இருந்ததில்லை.

ஆகவே, வேண்டா வெறுப்புடனுவது கல்யாண வீட்டிற்கு அவன் கிளம்பிப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

கல்யாண வீட்டிலே, ஒரு மணப்பெண்ணைப் போல தலையைக் குனிந்துகொண்டே உட்கார்ந்திருந்தான்.

முகூர்த்தம் முடியும் மட்டும் பெண்கள் கூட்டத்திலிருந்து வனஜா அவனைப் பார்த்ததாகத் தெரியவில்லை. அதுவரை அவனுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. அந்தச் 'சனியனை' சந்திக்காமல் எப்படியாவது தப்பித்துக்கொண்டு ஊருக்குப் போய்விட வேண்டுமென்று திட்டம் போட்டான். இரண்டாவது 'ஹாலில்' இருந்த ஒரு அறைக்குப் போய் பேசாமல் படுத்து விட்டால் வனஜா அங்கே வரமாட்டாள் என்று நினைத்தான்.

ஆகவே அவசர அவசரமாக அந்த அறையை நோக்கிப் போனான்.

ஆனால் இவன் எதிர்பார்த்ததைப் போல அந்த அறை காலியாக இருந்து இவனை வரவேற்கவில்லை. அதற்கு நேர்மாறாக, வனஜாவே அங்கே இருந்தாள்!

வனஜா ஒரு நாற்காலியில் உட்கார்ந்து, மேஜையில் தலையைச் சாய்த்துப் படுத்திருந்தாள். மேஜையிலே ராமகிருஷ்ணனின் போட்டோ கிடந்தது. தாங்க முடியாத துக்கத்தினால் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

ராமகிருஷ்ணனின் கால்கள் அப்புறம் இப்புறம் நகர மறுத்துவிட்டன. வாயிற்படியிலேயே சாய்ந்து கொண்டு கொஞ்ச நேரம் நின்றான். அவன் மனம் அதி தீவிரமாக வேலை செய்தது.

எல்லாப் பெண்களும் சந்தோஷமாக இருக்கும் பொழுது வனஜா மாத்திரம், ஏன் இப்படித் தேம்பிக் கொண்டு கிடக்கவேண்டும்? தன் ஒருவனுடைய புறக்கணிப்பால் அவள் வாழ்வே நிம்மதியற்றுப் போய்விட்டதே! என்று நினைத்ததும் அவனுக்கு என்னவோ போலிருந்தது.

வனஜா அழகில்லாமல் இருப்பதற்கு, கொஞ்சங்கூட அவள் ஜவாப்தாரியல்ல என்று அவனுக்குத் தெரியும். அத்துடன், தான் ஒரு மன்மதனல்ல என்பதும் அவனுக்குத் தெரியும். அப்படி இருக்கும் பொழுது தான் எதற்காக இவ்வளவு நாட்கள் அவளைப் புறக்கணித்திருக்க வேண்டும்?....

வனஜாவிற்குத் தான் எவ்வளவு துரோகம் செய்தாலும் அவளுக்குத் தன் மீதுள்ள எல்லையற்ற அன்பை இன்று தான் தெரிந்து கொண்டான்.

இவன் படத்தை வைத்து எதற்காக அவள் ஏங்க வேண்டும்? தன் வாழ்வைப் பாழாக்கிய துரோகியிடம் அவள் ஏன் அன்பு செலுத்த வேண்டும்? இது ராமகிருஷ்ணனுக்குப் பெரிய புதிராக இருந்தது.

கடைசியாக அவனுக்கு ஒரு உண்மை நிதர்சனமாகத் தெரிந்தது. வனஜாவிடம் அழகுதான் இல்லை. ஆனால்

இருதயம் இருக்கிறது. மனித சக்திக்கு அப்பாற்பட்ட பரிசுத்த அன்பு அவள் இருதயத்தில் இருக்கிறது.

இதை அறிந்ததும் ராமகிருஷ்ணன் உடல் துடித்தது. தன்மீது அத்தியந்த அன்பு செலுத்திய ஒரு ஆன்மாவை, அகாரணமாகச் சித்திரவதைப் படுத்தியதற்கு அவள் காலைப் பிடித்துக் கொண்டாவது மன்னிப்புக் கேட்க வேண்டும் போலிருந்தது. சட்டென்று வனஜா இருந்த நாற்காலியிடம் போனான்.

அவள் தோள்பட்டையில் கையை வைத்து "வனஜா!" என்று மெதுவாக அழைத்தான்.

திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தாள் வனஜா. அவன் அவ்விடம் வருவானென்று அவள் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை.

"நீங்களா? நீங்கள்தானா!" என்று நாக்குழறக் கேட்டுக்கொண்டே நாற்காலியை விட்டு எழுந்திருக்க முயற்சி செய்தாள்.

அவளை நாற்காலியிலேயே இறுத்தி உட்கார வைத்தான் ராமகிருஷ்ணன். அவள் முகத்தையே கொஞ்ச நேரம் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான். அவள் முகம் அழுது அழுது வீங்கிப்போய் இருந்தது. அவள் கண்கள் செக்கச் செவேலென்று சிவந்து கிடந்தன அவன் உடல் துடித்தது.

"வனஜா! வனஜா! எனக்கு அழகு வேண்டாம்! அழகி வேண்டாம்! நீதான் வேண்டும் வனஜா! உன் இதயந்தான் வேண்டும்!" என்று ஆர்வத்தோடு கூறிக்கொண்டே அவள் கரங்களை எடுத்துத் தன் மார்பின்மீது வைத்துக் கொண்டான்.

வனஜா ஒன்றுமே பேசவில்லை. நாணத்தினால் அவள் தலை கவிழ்ந்திருந்தது. அவளுடைய முகத்திலே மகிழ்ச்சிகளை அபாரமாய் நிலவி இருந்தது.

"என்னை மன்னிக்க மாட்டாயா, வனஜா? வனஜா! மன்னித்தேன் என்று சொல்லேன்!" என்று உணர்ச்சி

வேகத்தோடு அவளைப் பிடித்து உலுக்கினான் ராம கிருஷ்ணன்.


அவள் முகம் திடீரென்று பிரகாசமடைந்தது.

என்னவோ சொல்ல வாயெடுத்தாள். ஆனால் வார்த்தைகள் தொண்டையிலேயே நின்று விட்டன.

மெலிந்த குரலில், "அப்படி எல்லாம் சொல்லாதீர்கள்!" என்று முணுமுணுக்கத்தான் அவளால் முடிந்தது.



ஏழை



எதிர்பாராத அந்த நிகழ்ச்சியைக்கண்டதும் திடுக் கிட்டுத் திகைத்து நின்றான் வேலாயுதம்.

போலீஸ் கான்ஸ்டபிள் புண்ணியகோடி அவன் மனைவியைப் பலவந்தம் செய்ய முயன்று கொண்டிருந் தான்.

பொங்கி எழுந்த கோபா வேசத்துடன் ஓடிப்போய் தன் கையிலிருந்த குதிரைச் சவுக்கால் "வெளு வெளு" என்று வெளுத்து விட்டான் அந்தப் போலீஸ்காரனை.

உதைபட்ட புண்ணியகோடி தலை தப்பியது தம் பிரான் புண்ணிய மென்று ஒரே ஓட்டமாக வெளியே ஓடி மறைந்து விட்டான்.

அப்பொழுது மணி ஏழிருக்கலாம். அமாவாசை தின மானதால் வெளியே ஒரே கும்பிருட்டு.

காவேரி அழுது கொண்டு ஒருமூலையில் நின்றாள். வேலாயுதத்தின் இதயம் துடி துடித்தது.

"காவேரி! அந்தப் பயலைத்தான் உதைத்துத் துரத்தி விட்டேனே! இனிமேல் என்ன! இதற்காக ஏன் அழு கிறாய்?" என்று அவளைத் தேற்றினான்.

வேலாயுதம் ஒரு ஜட்கா வண்டிக்காரன். தினம் பத் தணா பன்னிரெண்டணா சம்பாதித்துக் கொண்டு வீட்டிற்கு வருவான். குடி முதலிய துரப்பியாசங்கள் இல்லாததால், தன் வாழ்க்கையை மானமாக நடத்தி வந்தான்.

அவன் மனைவி காவேரி தங்கமான குணம் படைத் தவள். இயற்கையழகை பிரமன் அவளிடம் அள்ளிக்

கொட்டியிருந்தான். அவ்வனைப்புத்தான் அவளுக்குப் பரம சத்துருவாக இருந்தது.

இந்தப் பணக்கார பிரபஞ்சத்திலே ஒரு ஏழை அழகியாக இருந்தால், அவள் மானத்துடன் வாழமுடியுமா? வீசியெறியப் படும் தங்கள் காசுக்கு அவள் தன் கற்பையும் அழகையும் சன்மானிக்கத்தான் வேண்டும் என்று பணபலமும், அதிகார பலமும் படைத்த கயவர்கள் நினைக்கும் காலமல்லவா இது!

காமாந்தகாரம் பிடித்த அந்தப் பேய் புண்ணியகோடி பலதடவைகள் வேலாயுதத்தைத் தேடிவருபவன் போல் வீட்டிற்கு வந்து காவேரியிடம் தனக்குள்ள அபிமானத்தை ஜாடையாகக் காண்பித்து வந்தான். ஆனால் காவேரி அதைச் சட்டை செய்யவில்லை.

அன்று அந்தப் பேயின் காமவெறி கட்டுமீறி விட்டது. வேலாயுதம் வீட்டிலில்லாததை அறிந்து அவளைப் பலாத்காரம் செய்ய முனைந்து விட்டான்...........

....அழுது கொண்டே வேலாயுதத்திற்குச் சாப்பாடு போட்டாள் காவேரி. மன நிம்மதியின்றி, ஒப்புக்காகக் கொஞ்சம் சாப்பிட்டு வைத்தான் வேலாயுதம்.

இரவு படுக்கப்போகும் பொழுது அவன்மேல் சாய்ந்து கொண்டு விம்மி விம்மியழுதாள் காவேரி.

வேலாயுதத்தின் இதயமே வெடித்துவிடும் போலிருந்தது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "காவேரி! நீ என்ன பைத்தியமாக இருக்கிறாய்! நடந்துபோனதைப் பற்றி இன்னும் நினைத்து நினைத்து அழுது என்ன ஆகப் போகிறது!" என்று அவளைச் சமாதானப் படுத்தினான்.

காவேரியின் அழுகை அப்பொழுதும் ஓயவில்லை. "உங்களுக்கு......உங்களுக்கு.......ஏதாவது இடஞ்சல் செய்தானானால்......என் கதி என்ன?" என்று தேம்பிக் கொண்டே கூறினாள்.

வேலாயுதம் ஒரு ஏளனச் சிரிப்புச் சிரித்தான். "அதை நினைத்து என்ன செய்வது காவேரி? ஆண்டவன் இருக்கிறான். அவன் நம்மைக் காப்பாற்றுவான்" என்று கூறிய வண்ணம் அவளைச் செல்லமாக அணைத்துக் கொண்டான்.

காவேரியின் மனம் அப்பொழுதும் சாந்தமடைய வில்லை. வருங்காலத்தில் ஏதோ ஒரு பெரிய ஆபத்து நிகழுமென்று அவள் உள்ளத்திலிருந்து கொண்டு யாரோ கூறுவது போலிருந்தது.

2

"புத்தூருக்குப் போக, எவ்வளவு வாடகையப்பா, கேட்கிறாய்?" என்று கேட்டாள் அந்தப் பெண்மணி. அவளுக்கு வயது பதினெட்டு இருக்கலாம். உடம்பெல் லாம் காய்த்துத் தொங்குவதைப்போல் நகைகள் போட்டி ருந்தாள்.

அப்பொழுது மணி ஆறரை இருக்கலாம். புத்தூர் ஐந்து மைல் தூரத்திலிருக்கிறது. வேலாயுதம் சிறிது யோசித்தான்.

"அம்மா! இரவு நேரம் எட்டணுக் கொடுங்கள்" என்றான்.

"ஆறணுவிற்கு வருவாயா?" என்று அதட்டினுள் அவள். "நான் பேரம் பேசும் வழக்கமில்லையம்மா!" என்று பணிவாகக் கூறினுன் வேலாயுதம்.

"சரி! சரி! தொலைந்து போ! ஏழணு வாங்கிக்கொள்!" என்று கூறிக்கொண்டே வண்டியிலேறினுள்.

வண்டியும் புறப்பட்டது. ஆதனூரை வண்டி தாண்டும் பொழுது இருட்ட ஆரம்பித்தது. வழியில் இரண்டு மைல் தூரத்தில் வேறு ஊர் கிடையாது.

வண்டி பாதி வழி போய்க் கொண்டிருக்கும் பொழுதே நன்ருக இருட்டி விட்டது. எங்கிருந்தோ ஒரு "விசில்" கேட்டது.

வண்டிக்குள்ளிருந்து அந்தப் பெண்மணி திடீரென்று "ஐயையோ! பாவி! நகையை வேண்டுமானுல் எடுத்துக் கொள் என்னை ஒன்றும் செய்யாதே!" என்று பலத்த கூச்சலிட்டு அலறினுள்.

சட்டென்று வண்டியை நிறுத்திக்கொண்டு "என் னம்மா? என்னம்மா?" என்று வேலாயுதம் பட படப்பு டன் கேட்டான்.

இதற்குள் அவள் தன் மேலிருந்த நகைகளை எல்லாம் கழற்றி வண்டியில் சின்ன பின்னமாக இறைத்து விட்டாள். வேலாயுதத்திற்கு அதன் அர்த்தமே ஒன்றும் புரியவில்லை.

இடையில் யாரோ நாலைந்து பேர் ஓடிவரும் காலடிச் சப்தம் கேட்டது. அவர்களெல்லாம் ஓடிவந்து அவளைச் சூழ்ந்து கொண்டனர்.

அவர்களைக் கண்டதும் அந்தப் பெண்மணி "ஓ" வென்று கதறிக்கொண்டே, "இந்தப் பாவி என்னை வண்டியிலேற்றிக்கொண்டு வந்து, இந்த நிர்மானுஷ்யமான இடத்தில் நகையைக் கொடுக்கிறாயா; உன்னைக் கொலை செய்யவா? என்று இந்தக் கத்தியை காண்பித்து மிரட்டினன்" என்று ஒரு பிச்சுவாவை அவர்களிடம் கொடுத்தாள்.

வேலாயுதம் நடுநடுங்கி விட்டான். அம்மாதிரிப் பிச்சுவாவை அவன் ஆயுட் காலத்திலேயே வைத்திருந்தது கிடையாது. "அம்மா! இது ஆண்டவனுக்கு அடுக்காது, அம்மா!" என்று அலறினன்.

"பரம யோக்கியன் தான்! திருட்டு ராஸ்கல்!" என்று கூறிக்கொண்டே அவன் பிடரியில் ஓங்கி அறைந்தான் ஒருவன்.

சட்டென்று வேலாயுதம் திரும்பிப் பார்த்தான். போலீஸ்கார புண்ணிய கோடிதான் நின்றுகொண்டிருந்தான். வேலாயுதத்திற்கு ஒரு நொடியில் உண்மை விளங்கி விட்டது. அந்தக் கள்ளி புண்ணிய கோடியின் கையாள்! இந்த ஏற்பாடுகளெல்லாம் அவன் செய்தது தான்! மற்ற ஆட்களைஎல்லாம் சாட்சிக்காக முன் கூட்டியே அவன் தயார் செய்து வைத்திருக்கிறன்.

வேலாயுதம் போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் செல்லப்பட்டான். அங்கே அவனுக்குப் பலமான அடி, அடியின் கொடுமையைத் தாங்க முடியாமல் தான் திருட முனைந்ததாக வாக்குமூலம் எழுதி வைத்தான் அந்த ஏழை ஜட்காவாலா.

அன்று சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலே அவனுடைய கேஸ் விசாரணை. காவேரி கோர்ட்டின் ஒரு மூலையிலே கண்ணீர் சிந்தியபடி நின்றுகொண்டிருந்தாள்.

பிராஸிக்யூஷன் தரப்பு சாட்சியாக புண்ணிய கோடி கூண்டில் ஏறினன். வேலாயுதம் "குற்றம் புரிந்த" அன்றைய தினம் தனக்குப் புத்தூரில் "பீட்" என்றும் அதற்காகத்தான் நடந்து போய்க் கொண்டிருக்கையில் சப்தம் கேட்டுத் தான் ஓடிப் போய்ப் பார்த்ததாகவும் அப்பொழுது பக்கத்தில் வயற்கரையில் மதகு அடைத்துக் கொண்டிருந்த சாட்சிகளும் வந்ததாகவும் மிகப் பொருத்தமாக ஜோடித்துக் கூறினன்.

சாட்சிகளெல்லாம் வேலாயுதத்திற் கெதிராக மிகப் பலமாய்ச் சொல்லிவிட்டனர்.

கடைசியாக மாஜிஸ்டிரேட் வேலாயுதத்தின் பக்கம் திரும்பி "நீ என்னப்பா சொல்கிருய்?" என்று அமரிக்கையாகக் கேட்டார்.

"சாமி! நான் நிரபராதி சாமி! ஆண்டவனுக்குத் தெரியும் நான் நிரபராதி என்று!" எனக் கண்ணீர் சிந்தியபடி கூறினன்.

மாஜிஸ்டிரேட் இலேசாகச் சிரித்தார்.

"ஆண்டவனுக்கு மட்டும் தெரிந்தால் போதாது! யாராவது மனிதனுக்கும் தெரிந்திருக்க வேண்டுமப்பா! சட்டம் அப்படிச் சொல்லுகிறதே!" என்று உணர்ச்சியற்ற குரலில் கூறினர்.

மனிதன் வகுத்திட்ட சட்டதிட்டங்களினிடையே ஆண்டவன் குறுக்கிட முடியுமா? புனைந்துரைக்கப்பட்ட செய்திகளும் அதிகாரத்தின் ஆணவத்தால் உண்மையாக மாறிவிடுவது சகஜந்தானே!

'சாமி எனக்கு ஒருவரும் இல்லீங்க! ஆண்டவன் விட்ட வழி விடட்டும்!' என்று மெதுவாகக் கூறினன் வேலாயுதம். பாவம்! அப்பொழுதுதான் சர்வகலாசாலையை விட்டு வெளிவந்த அந்தப் பாலிய மாஜிஸ்டிரேட்டிற்கு, உலக நடப்பின் சூதுகள் என்ன தெரியும்? அவருக்குத் தெரிந்ததெல்லாம், சட்டம்! கோர்ட்டு! பேனு! தீர்ப்பு இவை தானே.


"ஆறு மாதம் கடுங்காவல்!" என்று கூறினர் மாஜிஸ்டிரேட்.

'ஐயோ' என்று அலறினள் காவேரி. "சாமி உங்களுக்கு இரக்கமில்லையா?...." என்று கெஞ்சினன் வேலாயுதம்.' "ஸைலான்... ஸ்..." என்று ஆங்கில வார்த்தையைக் கொலைசெய்தான் ஆர்டர்லி.

இரண்டு போலீஸ்காரர்கள் அவனை விலங்கு பூட்டி இழுத்துச் சென்றனர்.

சிறைக்குள் நுழையும் பொழுது பரிதாபமாகக் காவேரியைப் பார்த்தான் வேலாயுதம்.

"என்கதி என்ன?" என்று அலறினள் காவேரி. "ஆண்டவன் இருக்கிறார்" என்று முணு முணுத்தான் வேலாயுதம்.



தாய்



உலகத்திலே காதல் ஒன்றுதான் மகத்தான சக்தி படைத்தது. அதற்காக எதையும் தியாகம் செய்ய மனித குலம் பின்வாங்காது, என்று சொல்கிறார்கள். நான் கூட இது உண்மையாக இருக்கலாம் என்று நினைத்தேன்.

ஆனால் கல்யாணியின் செய்கை அந்தத் தத்துவத்தை நிர்மூலமாக்கி விட்டது. காதல அன்பைவிட உலகத்திலே உன்னதமான சக்தி ஒன்றிருக்கிறது: அதை மாற்ற நம்மைப் படைத்த ஆண்டவனாலும் முடியாது என்று கூறுவதைப் போல் அவள் நடைமுறையில் செய்து காட்டி விட்டாள்.

2

கல்யாணியைப் பற்றி நாங்கள் அதற்குமுன் அவ்வளவாகப் பேசுவது கிடையாது. காரணம், அவள் ஒரு பெரிய இடத்துப் பெண்ணாயிற்றே என்பதனால் அல்ல. அநேகமாக பெரியஇடத்துப் பெண்களைப் பற்றித்தான் விஷயங்கள் வண்டி வண்டியாக அகப்படும். பின் ஏன் அதைப்பற்றி நாங்கள் பேசவில்லை என்றால், கல்யாணி என்று ஒரு பெண் இருக்கிறாள் என்று, தெரியுமே தவிர, அவள் கருப்பா, சிகப்பா என்பதுகூட எங்களுக்குத் தெரியாது. அப்படி அடக்க ஒடுக்கமாக வளர்ந்தபெண்.

அவர்கள் குடும்பத்தார், தங்கள் குடும்ப கௌரவத்தை உயர்த்திக்கொள்ளநினைத்து அவளை வீட்டிற் குள்ளேயே வைத்து வளர்த்தார்கள்.......

இந்த சமாச்சாரமெல்லாம் ஏழுவருடங்களுக்கு முன் நடந்தது. அப்பொழுது பிற குடும்பங்களைப் பற்றி விமர்சனம் செய்வதுதான் எங்கள் தொழில். எங்கள் கோஷ்டியிலே ஒருவைர மணியாக ஜொலித்தான் சோமு.

சோமு பெண்களைப் பற்றி விமர்சனம் கூறும்பொழுது, மனித உணர்ச்சி படைத்தவர்கள் அவன் பக்கத்தில் இருக்க முடியாது என்பதை வெட்கத்துடன் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

ஆனல் அதே சோமு, நடுவில் கொஞ்ச காலம் கல்யாணியைப் பற்றி சதா வானளாவப் புகழ்ந்து கொண்டிருந்ததைப் பார்த்து பிரமித்துப் போய்விட்டேன். பிறகு நாளடைவில் விஷயங்கள் வெளியானதும்தான், என்னுடைய ஆச்சரியம் ஒருவாறு நீங்கிற்று.

3

என்ன சொன்னேன்?—ஏழு வருடங்களுக்கு முன் கல்யாணி மிகவும் அடக்க ஒடுக்கமாக இருந்தாள் என்று?—ஆம்! அப்பொழுது அப்படித்தான் இருந்தாள். இப்பொழுது அவள் அம்மாதிரி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றல் அவளுக்கு மணமாகி ஆறு வருடங்களாகி விட்டன. அதோடு அவளுக்கு ஒரு குழந்தையும் இருக்கிறது.

கல்யாணியின் திருமணம் அப்படி ஒன்றும் திருப்திகரமானதாக இல்லை. ஏதோ பணக்கார மாப்பிள்ளை என்பதற்காக, ஒருவனுக்கு அவளை மணம் செய்து கொடுத்தார்கள். 'சீர் செனத்தி' வகைகளில், சம்பந்தி வீட்டார் கேட்டதற்கு மேலாகவேதான் செய்தார்கள்.

ஆனல் கல்யாணியின் புருஷன் ஒரு முரட்டுக் குணம் படைத்தவன். அவன் மனதைத் திருப்தி செய்யும் சாகஸ குணம், இந்த உலகத்திலுள்ள பெண்களில் ஒருவருக்காவது இருக்குமா என்பது பெரிய சந்தேகம். ஆகவே

உலகம் அறியாமல் வீட்டிற்குள்ளேயே வளர்ந்த கல்யாணி, அவனோடு நீண்டநாள் குடும்பம் நடத்த முடியவில்லை.

ஏதோ வாழ்ந்தோம்; என்ற பெயருக்கு கொஞ்ச காலம் கணவன் வீட்டிலிருந்தாள். ஒரு குழந்தையும் பிறந்தது. அதன் பிறகு தான் "மஞ்சள் குங்குமத்தை" தனக்கு குறைவில்லாமல் அளித்த ஆண்டவன் மகிழ்ச்சியை அளிக்க மறந்துவிட்டான் என்று அவளுக்கு தெரிந்தது.

கல்யாணியைப் பிடிக்காமல் அவள் கணவன் அவளைப் பிறந்த வீட்டிற்கு அனுப்பிவிட்டான். தாய் வீடு வந்த பிறகு கல்யாணியின் வாழ்க்கையே ஒரு தனி ரீதியில் இருந்தது. யாரோடும் அதிகம் பேசமாட்டாள். சதா சர்வகாலமும் தான் உண்டு; தன் குழந்தை உண்டு என்று தான் இருப்பாள். வீட்டு வேலைகள் முடிந்து ஒழிந்திருக்கும்போது தன்னுடைய பாழ்பட்டுப் போன வாழ்க்கையை எண்ணியே ஏங்கிக்கொண்டிருப்பாள்.

இப்பொழுதெல்லாம் அவள் முன் போல் வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பது கிடையாது. தாராளமாக வெளியே நடமாடிக்கொண்டுதான் இருந்தாள். ஆனல் கணவன் வீட்டை விட்டு அவள் வந்த பிறகு ஒருநாளாவது அவள் கலகலப்பாக சிரித்ததை யாரும் பார்த்தது கிடையாது.

இம்மாதிரி நான்கு வருஷ காலம், கல்யாணி சன்யாஸினி வாழ்க்கை நடத்தி வந்தாள். இம்மாதிரி தனிமை வாழ்க்கை நடத்தும்போது, அவள் நெஞ்சு தூண்டிற் புழுவைப் போல் துடி துடித்த சமயங்கள் பல. அப்படிப் பட்ட சமயங்களிலெல்லாம் "பகவானே! பெண் ஜென்மமாக என்னைப் படைத்துவிட்டு, எல்லாப் பெண்களுக்கும் அள்ளி அள்ளிக்கொடுக்கும் இன்ப வாழ்வில் ஒரு அணுவத்தனைகூட கொடுக்க மறுக்கிருயே" என்று ஆண்டவனை நொந்து கொள்வாள்.

அம்மாதிரி அவள் நினைக்கும்படியான சந்தர்ப்பங்கள் பல தடவைகள் அவள் வீட்டிலேயே நிகழ்ந்திருக்கின்றன. அவளுடைய மூத்த சகோதரி ஒருத்தி இருக்கிருள். அவள் கணவர் ஒரு 'குஷால்' பேர்வழி. எப்பொழுது பார்த்தாலும் தன் மனைவியோடு கேலியும் கிண்டலும் செய்து

கொண்டிருப்பது தான் அவருக்கு வேலே. கொஞ்சநேரம் மனைவியை விட்டுப் பிரிந்திருக்கமாட்டார். கல்யாணி யின் சகோதரி, தாய் வீட்டிற்கு வந்துவிட்டால், வீடே 'கல கல' வென்று இருக்கும். அவள் சகோதரியும் கண வனும் ஹால் அறையில் டேரா அடித்திருப்பார்கள்.

கல்யாணி கூடத்திலே ஏதாவது வேலே செய்து கொண்டிருப்பாள். 'கணீ'ரென்று அவள் சகோதரியின் சிரிப்புச் சப்தம் கேட்கும், அதைத் தொடர்ந்தே அவள் கணவன் விழுந்து விழுந்து சிரிப்பதும் சேர்ந்து கேட்கும். இந்தச் சப்தங்கள் அவள் இதயத்திலே சம்மட்டியைக் கொண்டு அடிப்பது போலிருக்கும்.

"நான் என்ன கிழவியா? என் அக்காளேவிட என் அழகு குறைந்ததா? பின் அவள் மட்டும் அம்மாதிரி இன்ப வாழ்க்கை அனுபவிக்கிறாளே! எனக்கு ஏன் அது கிடைக்கவில்லே?....... ஏன் அது கிடைக்கவில்லே.......?" என்று அவள் நெஞ்சு அலறும்.

4

இப்படி உணர்ச்சியோடு போராடிக்கொண்டு அவள் வாழ்க்கை நடத்திவந்த சந்தர்ப்பத்தில்தான், என் நண் பன் சோமு அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி போகும்படி யான பிரமேயம் ஏற்பட்டது.

சோமு எங்களோடு கூடிக்கொண்டு திரிந்தானே தவிர அவனுடைய தகப்பனர் பணக்காரர். அவர்களுக்கு இருக்கும் சொத்தைக்கொண்டு இந்த உலகத்தையே வாங்கிவிடலாமே என்று என் பெரியம்மா கூட சொல்லு வாள். ஏழு வருடங்களுக்கு முன் இருந்ததுபோல அவன் இப்பொழுது சாதாரண சோமுவாக இல்லே. ஒரு பெரிய மனிதனுகிவிட்டான். அதோடு எங்கள் ஊர் குமர குருபரர் கோவிலுக்கு டிரஸ்டியாக வேறு வேலே பார்க்கிறன். அந்த டிரஸ்டி உத்தியோகம்தான் இந்தச் சம்பவத் திற்கே மூல காரணம் என்று சொல்லவேண்டும்.

எப்படியென்ருல், கல்யாணியின் தந்தையும் சோமு வும் தான், எங்கள் ஊர் கோவிலில் கூட்டுத் தர்மகர்த் தாக்கள், தங்கள் இருவர் கைக்கும் நிர்வாகம் வந்ததும்

அந்தக் கோவில் நிர்வாகத்தை பிரமாதமாகச் சீர்திருத்த வேண்டுமென்று திட்டம் போட ஆரம்பித்தார்கள். ஆகையால் சோமு எப்பொழுது பார்த்தாலும் அவர்கள் வீட்டிலேயே உட்கார்ந்துகொண்டு எப்படி எப்படிச் சீர்திருத்தலாமென்று அவரோடு கோட்டை கட்டிக்கொண்டு இருப்பான்.

அவர்கள் மகாநாட்டினல் பிரமிக்கத்தக்க மாறுதல் ஒன்றும் கோவில் நிர்வாகத்தில் ஏற்பட்டுவிடவில்லை. இருந்த போதிலும் அது கல்யாணியின் வாழ்க்கையில் ஒரு பிரமிக்கத்தக்க மாறுதலை ஏற்படுத்திவிட்டது.

சோமு பார்ப்பதற்கு அழகாக இருப்பான். பேசுவதற்கு ஆரம்பித்துவிட்டால்—எங்கள் மாமாதான் சொல்லுவார்—தாசிகூடதோற்றுப் போய்விடுவாள்; அவ்வளவு தளுக்காக பேசுவான்.

கல்யாணியின் வீட்டிற்கு அவன் அடிக்கடி போக ஆரம்பித்ததிலிருந்து, அவள் மனதிலே ஒரு பெரும் புயல் அடிக்க ஆரம்பித்தது. அவனுடைய தோற்றமும் பேச்சும் அவள் மனதை வெகுதூரம் கவர்ந்துவிட்டன.

அவன் வந்து விட்டானென்ருல், அவளை அறியாமலே அவள் மனதில் ஒரு குதூகலம் ஏற்படும். அதற்கு காரணம் என்ன வென்று அவளுக்கே தெரியாது.

சில சமயங்களில் தனியே உட்கார்ந்து கொண்டு அவள் யோசிப்பாள்; "சோமுவை எண்ணி நான் இப்படி தவிக்கலாமா? நான் என்ன கல்யாணம் ஆகாதவளா? எனக்கு கணவன் இல்லையா?........அவர் என்னை புறக்கணித்தது தவறு தான்! அதற்காக அதை விட ஒரு கொடிய தவறை நான் செய்ய வேண்டுமா?" என்று அலை பாயும் தன் மனதோடு போராடுவாள். இந்தப் போராட்டம் ஏற்பட்டதும் அவள் உடல் "கிடு கிடு" வென்று நடுங்கும் "ஈசா! ஏனடா இப்படி என்னைப் போட்டு வதைக்கிருய்!" என்று கண்ணீர் விடுவாள்.

5

வெகு நாட்கள் வரையில் கல்யாணியின் மனதில் இந்தப் போராட்டம் நடந்து கொண்டே இருந்தது.

"வாழ்க்கையை அனுபவிக்கத்தான் ஒவ்வொரு ஜீவனையும் ஆண்டவன் படைத்து இருக்கிறான். அப்படி இருக்கும்பொழுது எனக்கு அந்த உரிமை இல்லை என்று யார் மறுக்க முடியும்?" என்று தனக்குத் தானே, கேட்டுக் கொள்வாள்.

"என் கணவனை நான் தேர்ந்து எடுத்தேனா? எனது வாழ்க்கையை நிர்ணயம் செய்ய என் பெற்றோர் களுக்கு என்ன உரிமை இருக்கிறது? என்னை அவர் கள் பாழும் கிணற்றில் தள்ளி விட்டார்கள்! இன்று நான் வேறு யாரோடாவது, வாழ்க்கை நடத்தினால், அது அவர் களுக்கு அவமானத்தை விளைவிக்கலாம்! ஆனால் எனக் குக் கிடைக்க வேண்டிய இன்பத்தைப் பாழ்படுத்திய அவர்கள், அவமானத்தால் புழுங்கிச் சாகட்டுமே! நெஞ்சு உடைந்து அணு அணுவாகக் கரைந்து மாளட்டுமே!" என்று ஒரு ஆவேசத் தீர்மானம் செய்து கொண்டாள் கல்யாணி.

உலகம் என்ன விதமாகத் தன்னை ஏசினாலும் கட்டா யம் சோமுவோடு வாழ்க்கை நடத்துவது என்று முடிவு செய்து விட்டாள். தன் இதயத்தைத் திறந்து காட்டி சோமுவுக்கு ஒரு கடிதமும் எழுதி விட்டாள்.

6

மாதங்கள் இரண்டு கழிந்தன. சோமு இப்பொழு தெல்லாம் கல்யாணியின் வீட்டை விட்டு எங்குமே அசைவ தில்லை. கல்யாணியும் அவனும் உயிர்க் காதலர்களாகி விட்டனர்.

பல தடவைகளில் சோமுவும் கல்யாணியும் தனியே சந்தித்திருக்கின்றனர். ஆனால் இயற்கையின் சேஷ் டைக்கு கல்யாணி அடிமையாகி விடவில்லை. சோமுவை மணம் செய்து கொண்டு பகிரங்க வாழ்க்கை நடத்துவ தையே அவள் விரும்பினாள். திரை மறைவில், நெறி தவறி நடப்பதற்கு அவள் கொஞ்சங் கூட ஒப்பவில்லை.

ஆனால் கல்யாணி நினைத்தது போல், நடப்பதற்கு சட்டம் அனுமதிக்கவில்லை. இந்து சட்டப்படி ஒரு பெண் ணுக்கு விவாக ரத்து உரிமை கிடையாது. வேறொருவன்

மனைவியை யாராவது சட்டப்படி மணம் செய்து கொள்ள முயற்சி செய்தால் அவன் ஏழு வருஷம் சிறைக்குள் தவம் செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

இதையறிந்ததும் கல்யாணியின் மனம் துடி துடித்தது. மனித வர்க்கமே தனக்கு எதிராகச் சதி செய்வது போல அவளுக்குத் தோன்றியது.

"வேண்டாத புருஷனுடன் வாழ்நாள் முழுவதும் ஒரு பெண் மனம் புழுங்கிச்சாவது தான் நீதியா? தனக்கு மனைவி பிடிக்கவில்லை என்றால் ஆண் மாத்திரம் மணம் செய்து கொள்ளலாமாம்! ஆனால் கணவனால் நிராகரிக்கப் பட்ட பெண்ணுக்கு அந்த உரிமை கிடையாதாம்! இதற்கு பெயர் சட்டமாம்!.... இல்லை!... இது சட்டமில்லை! சதிகாரக் கும்பல்காரர்கள் செய்த ஒரு சூழ்ச்சி! பெண்ணை ஆணுக்கு அடிமைப் படுத்தி, பெண் இனத்தையே மிருகங்களாக்கச் செய்த ஒரு பயங்கர பித்த லாட்டம்! இம்மாதிரி சட்டம் இருப்பது அக்கிரமம்!" என்று அவள் நெஞ்சு துடி துடித்தது.

இதற்கு என்ன செய்வது என்று கல்யாணிக்குப் புரியவில்லை.

7

பல நாட்கள் வரை இதை நினைத்தே மனதைப் போட்டு அலட்டிக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் திடீரென்று அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. "எதற்காக, நான் சட்டம் சட்டம் என்று உயிரை விட வேண்டும்? அந்தச் சட்டம் தானே எனது வாழ்க்கையையே சீர் குலைத்தது. பெற்றோர்கள் பார்த்து வைத்த மாப்பிள்ளையைத் தான், மணம் செய்து கொள்ள வேண்டும் என்ற சட்டத்திற்குக் கட்டுப்பட்டுத் தானே, நான் ஒரு முரடனை மணம் செய்து கொண்டேன். அதே பாழாய்ப் போன இந்து சட்டம் தானே இன்று சோமுவை மணப்பதையும் தடை செய்கிறது. அந்த சட்டத்தை ஏன் கட்டி அழ வேண்டும்? அதை புறக் கணித்து—அலட்சியம் செய்து—அதற்கு சவச் சடங்கு செய்து விட்டு—ஏன் நான் நடக்கக் கூடாது?....சட்டப்

படி மணம் செய்து கொண்டால், சோமு கடைசிவரை பிரிய மாட்டார், என்ற உறுதிக்காகத் தானே சட்டத்தை நாடுகிறேன். இடையில் என்னை அவர் கை விட்டு விட்டால், இந்தச் சட்டம் அவரை என்ன செய்து விடப் போகிறது? எனது இன்ப வாழ்க்கையை திரும்பவும் எனக்கு அளித்து விடப் போகிறதா?....கிடையாது! ஆம்! நிச்சயமாகக் கிடையாது!...சட்டப்படி மணம் செய்து கொள்ளாவிட்டால், சோமு என்னைக் கைவிட்டு விடவா போகிறார்?....

"உன்னைத் தவிர வேறு யாரையும் இந்த ஜன்மத்தில் ஏறெடுத்துப் பார்க்க மாட்டேன்", என்று உள்ளத் துடிப்புடன் என் கரத்தைப் பற்றி எனக்கு சோமு வாக்குறுதி கொடுத்தது பொய்யா? அன்பின் மேலீட்டினால் "கல்யாணி! நீயே என் உயிர். உன்னை இழந்தால் நான் வாழ வேண்டிய அவசியமே இல்லை" என்று ஆர்வத்தோடு என்னை அணைத்துக் கொண்டு அவர் உறுதி கூறியது கூடப் பொய்யா? இவை யெல்லாம் பொய்யென்றால், இந்த உலகத்தில் எது தான் உண்மை? உயிருக்கு உயிரான ஒருவரின் வாக்குறுதி நிரந்தரமற்றது என்றால், வேறு எது தான் இந்த உலகத்தில் நிரந்தரமானது?....ஆகவே சட்டத்தின் உதவி தேவையில்லை! சமூகம் என்னைக் கேவலமாகப் பேசுமென்றாலும் அதைப் பற்றி அக்கரையில்லை. அவருடைய காதலியாகத் தான் நான் இருக்கப் போகிறேன். எங்கள் இருவரையும் நீண்ட நாள் சேர்த்து வைக்க காதலன்பிற்கு சக்தி உண்டு. இதற்கு சட்ட பூர்வமான மணம் தேவை இல்லை. மணம் செய்து கொள்ளாமலே அவரோடு இன்ப வாழ்வு நடத்தப் போகிறேன்!"....என்று தனக்குள் முடிவு செய்து கொண்டாள்.

8

கல்யாணி தன் முடிவின்படியே செய்து விட்டாள். வீட்டை விட்டு வெளியேறி, சோமுவோடு இன்ப வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தாள்.

ஊரெல்லாம் அவளைப் பரிகாசம் செய்தது. அவளை நடத்தை தவறிய பரத்தை என்று தூற்றியது. ஆனால் அவற்றை அவள் லட்சியம் செய்யவில்லை.

அவள் ஒரு அன்பு இதயத்திற்காக அல்லும் பகலும் தவித்துக் கொண்டிருந்தாள். தன் மீது அக்கரை கொள்ள, தனக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கும் ஒரு ஜீவனை அடைய அவள் துடித்துக் கொண்டிருந்தாள். இன்று சோமு அவளுக்குக் கிடைத்து விட்டான்.

சோமு அவள் எதிர்பார்த்ததைப் போலவே நடந்து கொண்டான். அவள் விரும்பியபடியே அன்பு செலுத்தினான். இன்று கல்யாணி யாரையும் லட்சியம் செய்யத் தேவையில்லை. சமூகத்தை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அவளுடைய அபிலாஷைகளெல்லாம் நிறைவேறி விட்டன....ஆண்டவன் நியமித்த 'விதி! விதி!' என்று கதைக்கிறார்களே, அதைக் கூட அவள் மீறி விட்டாள்....இவற்றையெல்லாம் நினைத்து அவள் கர்வம் கொண்டிருந்தாள், என்று கூடச் சொல்லலாம்.

ஆனால் வாழ்க்கை என்றுமே ஒரே நியதியில் செல்லுவது கிடையாது. மாறுதலும், ஏமாற்றமும் மனித வாழ்க்கையின், மாற்ற முடியாத அம்சங்கள். கல்யாணியின் வாழ்க்கையிலும், அவை ஏற்படுவதை யார் தடை செய்ய முடியும்?

9

கல்யாணி தனி வாழ்க்கை தொடங்கும் பொழுது தன் குழந்தையையும் தன்னோடு வைத்துக் கொண்டிருந்தாள். குழந்தையைத் தனியே விட்டுவந்தால் கவனிப்பாரற்று, அனாதையைப் போல அவன் இருக்க நேரிடுமே என்று நினைத்துத்தான் அவனையும் தன்னோடு கூட்டிக்கொண்டு வந்துவிட்டாள்.

குடித்தனம் நடத்த ஆரம்பித்தபொழுது சோமு, அந்தப் பிள்ளையிடம் அன்பாகத்தான் இருந்தான். எவ்வளவோ வாஞ்சையுடன்தான் நடந்து கொண்டிருந்தான்.

ஆனால், நாளடைவில் அந்தக் குழந்தையைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவனுக்கு ஒரு வேற்றுணர்ச்சி தோன்ற ஆரம்பித்தது.

ஒரு காலத்திலே, கல்யாணி யாரோ ஒருவனுடைய இன்பக் கருவியாக இருந்தாள் என்பதை அந்தக் குழந்தை சுட்டிக் காட்டுவது போலிருந்தது.

அந்தப் பிள்ளையைக் கண்டால் அவனுக்கு என்னவோ போலிருந்தது. இன்று தன் மனதில் அசைக்க முடியாத ஆதிக்கத்தைப் பெற்றிருக்கும் கல்யாணி, ஒரு காலத்தில் யாருக்கோ சொந்தமாக இருந்தாள் என்ற நினைவு ஏற்படும் பொழுது, அவன் உள்ளம் விவரிக்க முடியாத வேதனை அடையும்.

இந்த நினைவெல்லாம் இந்தப் பாழாய்ப்போன குழந்தையைப் பார்ப்பதால் அல்லவா ஏற்படுகின்றது! இந்தச் சனியனை தொலைத்துத் தலைமுழுகி விட்டால், ஒரு தொல்லையும் இல்லையே! இந்த ஜீவன் பிறப்பதற்கு மூல காரணம் கல்யாணியின் பெற்றோர்கள்தானே! அவர்கள் இவனை வைத்துக்கொண்டு கட்டி அழட்டுமே! என்று தன் மனதிற்குள் தீர்மானம் செய்து கொண்டான்.

இந்தத் தீர்மானத்தோடு அவன் கல்யாணியைப் பார்க்கப் போகும்பொழுது அவள் சமயலறையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

சோமுவைக் கண்டதும் "குழந்தை அங்கே விளையாடிக் கொண்டிருந்தானே! அவன் இன்னும் சாப்பிடவில்லை. கூப்பிடுங்கள்!" என்று ஆர்வத்தோடு கூறினாள்.

"அந்தச் சனியன் எங்காவது கிடப்பான். நீ போய்க் கூப்பிடு!" என்று எரிச்சலாகக் கூறினான் சோமு. சோமுவின் இந்த விசித்திர நடத்தை கல்யாணிக்கு ஒரு புதிராக இருந்தது. அவன் இம்மாதிரி பேசுவதற்கு காரணம் விளங்காமல் "ஏன் இம்மாதிரி பேசுகிறீர்கள்? அவன் உங்களுக்கு என்ன செய்தான்?" என்று கெஞ்சலாகக் கேட்டாள்.

சோமுவுக்கு அதற்குமேல் பொறுக்க முடியவில்லை.... "இதோ பார், கல்யாணி! அவனைக் கண்டால் எனக்குப்

பிடிக்கவே இல்லை. உன் இன்ப வாழ்க்கையைப் பாழாக்கிய ஒரு துரோகியின் அணு அவன். அவனைப் பார்க்கும் பொழுதெல்லாம் என் மனதில், விரும்பத் தகாத நினைவுகளெல்லாம் ஏற்படுகின்றன. என்னுடைய கல்யாணி ஒரு காலத்தில் யாருடைய சொத்தாகவோ இருந்தாள் என்று சதாகாலமும் எனக்கு நினைவூட்டிக் கொண்டு இருக்கிறான். கல்யாணி! அவனை எங்காவது தொலையச் சொல்லு........ஏன்? உன் தகப்பன் வீட்டிற்குப் போகச் சொல்லேன்! அவர்தானே இந்த விபரீதங்களுக்கெல்லாம் மூலகாரணம்" என்று படபடப்போடு கூறினான்.

கல்யாணியின் கண்களிலிருந்து 'பொல பொல' வெனக் கண்ணீர் வடிந்தது. சோமு இவ்வளவு விபரீதமாக நடந்து கொள்வான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. என்ன சொல்வதென்று புரியாமல் கற்சிலை போல் ஸ்தம்பித்து நின்று கொண்டிருந்தாள்.

இந்தச் சமயத்தில் வெளியே விளையாடிக் கொண்டிருந்த அவள் குழந்தை "அம்மா!" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே ஓடிவந்தான்.

அவனைக் கண்டதும் சோமுவின் ஆத்திரம் அளவு கடந்து போயிற்று. "சனியனே! இங்கே வராதே! எங்காவது தொலை!" என்று ஆத்திரத்தோடு அவனை நோக்கிக் கையை ஓங்கினான். அந்தக் குழந்தை பயந்து கொண்டே ஓடிப்போய் தன் தாயாரைக் கட்டிப் பிடித்துக் கொண்டது.

இவ்வளவு நேரம் பொறுமையாக இருந்த கல்யாணியால் அதற்கு மேலும் தாங்க முடியவில்லை.

அவள் ஒரு தாய்! அவளுக்கு இந்த உலகில் காதல் தேவையில்லை! செல்வம் தேவையில்லை! 'குழந்தை! குழந்தை!' என்ற ஒரே நினைவில், வாழ்வில் அடைய வேண்டிய பூரண இன்பத்தையும் அவள் அனுபவித்து விடுகிறாள். அப்படிப்பட்ட குழந்தை தன் எதிரிலேயே சீரழிக்கப்படுவதை அவளால் பார்த்துப் பொறுக்க முடியவில்லை.

தன் இதயத்தில் ஒரு திடமுடிவு செய்து கொண்டாள். அவளுக்கு கணவன் தேவையில்லை! காதலன் தேவையில்லை! தன் இன்ப விளக்கான குழந்தை ஒன்றே அவளுக்குப் போதும்! கேவலம் காம உணர்ச்சிக்காக, உலகில் சாமானியத்தில் கிட்டாத "தாய்" என்ற பட்டத்தை அவள் இழப்பதா? தன் அருமைக் குழந்தையை அனாதையாக விட்டுவிட்டு, காமப் பிசாசாக அலைவதா? "கூடாது" என்று முழங்கியது அவள் தாயுள்ளம்.

இந்த முடிவோடு நிதானத்தை இழக்காமல் சோமுவின் பக்கம் திரும்பினாள். "அவன் இங்கேதான் இருப்பான்! அவனைப் 'போ' என்று சொல்ல, யாருக்கும் உரிமையில்லை! அவன் இருப்பது பிடிக்காதவர்கள் வேண்டுமானால், வெளியே செல்லலாம்!" என்று உறுதியான குரலில் பேசினாள்.

சோமு இதைக் கேட்டு திடுக்கிட்டு விட்டான். "நீ சொல்வது உண்மைதானா? நான் வெளியே சென்றுவிடலாமா?" என்று பதட்டத்தோடு கேட்டான்.


"தாராளமாய்!..."

10

சோமு வீட்டை விட்டு வெளியே போய் விட்டான். கல்யாணி சிலையைப் போல் நின்றுகொண்டிருந்தாள்.

இன்று அவள் ஒரு அனாதை. சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவள். சட்டத்தை மீறிய குற்றவாளி. வாழ்க்கையின் ஒரே பிடிப்பாக இருந்த காதலனாலும் கைவிடப்பட்டாள். ஆனால் அதைப் பற்றி அவளுக்கு அக்கரையில்லை. இந்த நிலைமைகளெல்லாம் ஏற்பட்டதால் அவள் பட்டினி கிடந்து இறக்கும் நிலைமைதான் ஏற்படட்டுமே; அப்படி ஏற்பட்டாலும் தன் அருமைக் குழந்தையை அணைத்துக்கொண்டுதானே இறக்கப்போகிறாள்? அவள் செல்வத்தை (குழந்தையை) அவளை விட்டு யாரும் பிரித்துவிட வில்லையே! அது ஒன்றே போதும் அவளுக்கு! இந்த உலகத்தில் அவளுக்கு வேறெதுவுமே தேவை யில்லை!

அவள் ஒரு தாய்!



கொலைகாரர்களுக்கும் பயங்கரமான குற்றங்களைச் செய்யும் கைதிகளுக்கும்தான் தீவாந்திர சிட்சை கொடுப்பது என்ற, சம்பிரதாயம் சட்டத்தில் இருந்து வருகிறது.

ஆனால் மகா யோக்கியனும், எந்தக் குற்றத்தையுமே செய்வதற்கு லாயக்கற்ற அப்பாவியுமான ஜானகிராமன் அந்தமானுக்கு அனுப்பப்பட்டான் என்றால் அதை அவன் தலைவிதி என்றுதான் சொல்லவேண்டும்.

ஜானகிராமன், அந்தமான் தீவிலுள்ள ஒரு ஜெயில் வார்டர். அவனுக்கு வயது 23 தான் இருக்கலாம். தஞ்சை ஜில்லாவில் பட்டினி கிடந்து சாவதற்கென்றே தோன்றிய, ஒரு ஏழைக் குடும்பத்தில்தான் அவன் பிறந்தான். ஏதோ தன்னுடைய சொந்த முயற்சியைக் கொண்டு ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டான்.

அவனது பதினெட்டாவது வயதிலேதான் அவனுக்கு வார்டர் உத்தியோகம் கிடைத்தது. வேலையிலே அவனுக்கிருந்த திறமையையும் சூட்டிக்கையையும் கண்ட அதிகாரிகள் அவன் சம்பளத்தை உயர்த்தி அவனை அந்தமான் தீவில் சிறை வார்டராக நியமித்தனர்.

அந்தமான் தீவிலே இந்த இரண்டு வருஷகாலமாக அவன் தனியாக இருந்து வந்தான். ஆனால் அன்று முதல் இன்று வரை அவன் மனதில் விவரிக்க இயலாத வியாகூலம் தோன்றி அவனை சித்திரவதை செய்து கொண்டேயிருந்தது.

2

அன்றைய தினம் அவனுடைய மனம் மற்ற நாட்களை விட மிகவும் சோர்ந்திருந்தது.

வீடு வாசல் சொந்தக்காரர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள்? இவன் எங்கே இருக்கிறான்? இந்த உலகத்தில் கொலை செய்தவன்தான் பந்துக்களிடமிருந்து வெகு தூரத்தில் பிரித்து வைக்கப் படுகிறான் என்றால், இவன் எந்தக் கொலையைச் செய்தான்? இவன் ஏன் இந்தத் தொலைதூரத்தில் வந்து கிடக்க வேண்டும்?

இதை நினைக்க நினைக்க ஜானகிராமனுக்கு விநோதமாக யிருந்தது. தனக்குள்ளேயே லேசாகச் சிரித்துக் கொண்டான்.

"நல்ல வேடிக்கை" என்று அவன் வாய் முணு முணுத்தது.

கீழ்வானத்திலே தனது பூர்ண சோபையுடன் சந்திரன் உதயமானான். வாரித் தெளித்த வைடூரியக் கற்களைப்போல் நட்சத்திரங்கள் பல, ஆகாய வெளியிலே சிதறிக் கிடந்தன. பறவைக் கூட்டங்கள் பலவித இரைச் சலிட்டுக்கொண்டு அங்குமிங்கும் பறந்தன. ஓ, என்ற பேரொலியோடு கடலில் கிளம்பிய அலைகள் வேகமாக ஓடி வந்து கரையை முத்தமிட்டுத் திரும்பின.

ஜானகி ராமனின் உள்ளம் இந்த உல்லாசமான காட்சிகளால் புத்துயிர் பெறவில்லை. அப்படியே அயர்ந்து போய் அங்கேயிருந்த ஒரு மணல் திட்டில் சாய்ந்தான்.

சிறைச்சாலையில் சாப்பாட்டு மணியடிக்கும் சப்தம் கேட்டது. கைதிகள் இங்குமங்கும் பரபரப்புடன் அலைந் தனர். ஜானகிராமனின் மனக்கண்முன் அவர்களைப் பற்றி எண்ணற்ற எண்ணங்கள் தோன்றி மறைந்தன.

அந்தக் கைதிகள் எங்கே பிறந்தனரோ? அவர்களுடைய பிரிவை சகிக்காமல், எத்தனை தாய்மார்கள், எத்தனை காதலிகள், தவிக்கின்றார்களோ? இருந்தாலும் இந்த முட்டாள்கள் எதற்காக கொலை செய்யவேண்டும்! ஏன் கொள்ளையடிக்க வேண்டும்?

ஆனால் அவர்கள் எல்லாம் வேண்டுமென்றே அந்தக் குற்றங்களைப் புரியவில்லையென்று ஜானகிராமனுக்குத் தெரியும்.

ஏதோ ஒரு நெருக்கடியான சந்தர்ப்பம் அவர்களைக் கட்டி இழுத்துக்கொண்டு போய் அந்தக் கொடிய துறையில் விட்டிருக்கும். உள்ளபடியே ஒவ்வொருவர் இதயத்தையும் திறந்துகாட்டச் சொன்னால், எத்தகைய அற்புத நிகழ்ச்சிகள் அடைபட்டுக் கிடக்கின்றனவோ?

'சிலு சிலு' வென்று குளிர்ந்த காற்று வீசியது. ஜானகிராமன் உடல் குளிரால் சிலிர்த்தது. தன் கண்களை சிறிது மூடினான்.

3

தூரத்தில் இருட்டிலே ஏதோ ஓர் உருவம் லேசாகத் தென்பட்டது. அது யாரென்று ஜானகி ராமன் உற்றுக் கவனித்தான். அந்த உருவம் அவனை நெருங்கி வந்து கொண்டிருந்தது.

அப்படி நெருங்கி வந்து கொண்டிருந்த உருவம் ஜெகன்னாதன்தான் என்று ஜானகிராமன் புரிந்து கொண்டான்.

ஜெகன்னாதன் அந்தமானுக்கு அனுப்பப்பட்டு ஏழெட்டு வருஷங்களாகின்றன.

பட்டப்பகலிலே நடு வீதியில் ஒருவனை அரிவாளால் வெட்டி கொலை செய்ததற்காக அவனுக்கு தீவாந்திர சிட்சை விதிக்கப்பட்டிருந்தது.

அவனுடைய மகள் ஒருத்தி இந்தியாவில் இருந்து வந்தாள். அவளிடமிருந்து ஜெகன்னாதனுக்கு அடிக்கடி கடிதம் வரும். அந்தக் கடிதங்களில் தன் தகப்பனைப் பார்க்க எவ்வளவு கவலையோடு இருக்கிறாள் என்பதை நெஞ்சு உருகும் வண்ணம் எழுதி இருப்பாள்.

ஜெகன்னாதன் அந்தமானுக்கு அனுப்பப்பட்டதிலிருந்து அந்தப் பெண்ணை அவளுடைய மாமன் ஓர்

அநாதை ஆஸ்ரமத்தில் சேர்த்து விட்டான். அங்கேயிருந்து அவள் படித்துக் கொண்டிருந்தாள். அவளிடமிருந்து வரும் கடிதங்களை யெல்லாம் ஜெகந்நாதன் ஜானகிராமனுக்குக் காட்டுவான். அவற்றைப் படித்து விட்டு ஜானகிராமன் கண்ணீர் விடுவான். "அடபாவி; நீ ஏன் கொலை செய்தாய்?" என்று பச்சாத்தாபப்படுவான். இவற்றிற்கெல்லாம் ஜெகன்னுதனின் பதில் ஒன்றே ஒன்று தான்! "சுவாமி அவனவன் தலை யெழுத்துப்படி தான் உலகத்தில் காரியங்கள் நடக்கும். நாம் வருத்தப் பட்டு என்ன பிரயோஜனம்?" என்று வேதாந்தம் பேசுவான்.

சென்ற இரண்டு மூன்று தினங்களாக அவன் மலேரியா காய்ச்சலால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது ஜானகிராமனுக்குத் தெரியும். அவன் எப்படி, ஏன், இங்கே வந்தான்; என்பது ஜானகிராமனுக்கு ஒரு புதிராக இருந்தது.

ஆச்சரியத்தோடு "யார்? ஜெகன்னுதனு?" என்று கேட்டான். "நான் தான் சுவாமி" என்று நடுங்கிய தொனியில் பதில் வந்தது.

"எங்கே? இந்த இருட்டில் எப்படி வந்தாய்?" என்று குளிரிக் கொண்டே கேட்டான் ஜானகிராமன்.

"சுவாமி! மன்னித்துக் கொள்ளுங்கள். மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று அவன் காலில் விழுந்து அந்தக் கைதி மன்ருடினுன்.

ஜானகிராமின் மனம் கட்டு மீறிய ஆச்சரியத்தை அடைந்தது.

மன்னிப்பதாம்! எதற்காக; ஏன்; என்று அவனுக்குப் புரியவில்லை.

அந்தக் கைதி அவன் காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினுன்; "சுவாமி நான் தப்பித்துக்கொண்டு போக வேண்டும்! ஆமாம் சுவாமி, ஆமாம்!" பேசும் பொழுதே அவன் குரல் தடுமாறியது. அவன் கண்கள் புல புலவென நீரைக் கக்கின.

ஜானகிராமன் திடுக்கிட்டு விட்டான். "என்ன, என்ன" என்று படபடப்போடு கேட்டான்.

கைதி மிகவும் கெஞ்சிய குரலில், "சுவாமி! எனக்கு வெகு கடுமையாக சுரம் அடிக்கிறது. இந்த சுரத்தில் நான் கட்டாயம் செத்துப் போய்விடுவேன். ஆனால் கடைசியாக என் அருமைக் குழந்தையை ஒருதரம் என் கண்ணால் பார்க்க ஆசையாயிருக்கிறது...............நீங்கள் மற்றவர்களைப் போல் அல்ல...........ரொம்ப நல்ல மகாராஜன். அதனால்தான் சுவாமி உங்களிடம் வந்து உண்மையைக் கூறி வேண்டிக் கொள்கிறேன்............சுவாமி! நான் இனி தப்பித்துக் கொண்டு போனால், மனித சமூகம் என்னைக் கண்டு பயப்படத் தேவை இல்லை. இனி நான் கொலை செய்யப் போவதில்லை. பழி வாங்கும் நோக்கத்தோடு நான் தப்பித்துப் போக விரும்பவில்லை. ஆனால் என் இருதயத்தில் தாண்டவமாடிக் கொண்டு இருக்கும் என் அருமைக் குழந்தையைப் பார்ப்பதற்குத்தான் சுவாமி.......... என் உயிர் உங்கள் கையில் இருக்கிறது. காட்டிக் கொடுத்தாலும் நீங்கள்தான்! வழிகூட்டி வைத்தாலும் நீங்கள் தான்!" என்று பரிதாபத்தோடு பேசினான். இடை இடையே அவன் குரல் கம்மியது. கண்ணீர் காளுறு போல பெருக்கெடுத்தோடியது.

ஜானகிராமிற்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. நெஞ்சைப் பிளக்கும் அந்தக் கைதியின் வேண்டுகோள் ஒரு பக்கம்—தன்னுடைய கடமை ஒரு பக்கம்—இவை இரண்டும் போட்டி போட்டுக் கொண்டு அவன் உள்ளத்திலே பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தின.

அந்தக் கைதியை தப்ப விட்டுவிட்டால், ஜானகிராமனின் வேலை போய்விடும். ஆனால் ஒரு ஆன்மாவின் கடைசி கால ஆசை நிறைவேறும்! விடாவிட்டால்—காட்டிக் கொடுத்து விட்டால்—நிச்சயமாக அவனுக்கு வெகுமதிகள் கிடைக்கும். ஆனால் அந்தக் கைதி மரணத் தருவாயிலும், கையிலும் காலிலும் விலங்கு பூட்டப்பட்டு கிடப்பான். இறக்கும்பொழுது கைதி, மனம் கொதித்து அவனை சபிப்பான். அந்தச் சாபம் ஈரேழு தலைமுறைக்கும் ஜானகிராமனைச் சூழ்ந்து சுற்றிக் கொண்டிருக்கும்.

இப்படி நினைத்ததும் ஜானகிராமனின் உள்ளம் நடு நடுங்கியது.

பாவம்; எனது சுயநலத்திற்காக ஒருவரின் மரணகால இச்சையை தடுப்பதா? கூடாது; கூடாது, என்று தனக்குள் முணு முணுத்துக் கொண்டான்.

ஏதோ ஓர் முடிவு செய்தவன் போல் அந்தக் கைதியை ஏறிட்டு பார்த்தான். அந்தப் பார்வையிலேயே 'நீ போகலாமே' என்ற அர்த்தம் தொனித்தது.

ஜெகன்னாதன் ஒன்றும் பேசவில்லை. மௌனமாகத் தலைவணங்கி விட்டு கடற்கரையை நோக்கி வேகமாக நடந்தான். சிறிது நேரம் அந்தக் கைதி போவதைப் பார்த்துக் கொண்டே இருந்தான் ஜானகிராமன்.

எப்பொழுதோ ஒரு சமயத்தில், எங்கோ படித்த ஒரு வாக்கியம் அவன் நினைவிற்கு வந்தது.

"எவனொருவன் அயலான் சுக துக்கங்களில் அக்கறை கொள்கிறானோ, அவன் சுகதுக்கங்களில், ஆண்டவன் அக்கறை கொள்கிறான்" இதை நினைத்ததும் அவன் உடல் சிலிர்த்தது. உள்ளத்திலே ஒரு வீரம் பொங்கியது.

* * * *

சிலு, சிலு, என்று பனி பெய்து கொண்டிருந்தது. திடுக்கிட்டு விழித்துக் கொண்டான் ஜானகிராம்! சிறைச் சாலையின் மணி இரண்டு தடவைகள் ஆயாசத்துடன் அலறியது.

இரவு முற் பகுதியில் நடந்த அந்தச் சம்பவம், இவன் மனக் கண்ணின் முன் வந்து நின்றது. "அது கனவோ?....' அன்றி நினைவோ?...." என்று இவனால் தீர்மானிக்க முடியவில்லை. நேராக, ஜெகன்னாதன் கிடத்தப்பட்டிருந்த ஆஸ்பத்திரிக்குச் சென்றான். அங்கே இரு காவற்காரர்கள் ஏதோ, பேசிக் கொண்டிருந்தனர். அவன் இருதயம் 'பட பட' வென்று அடித்துக் கொண்டது.

"முஸாபர்!" என்று அவசரத்துடன் கூப்பிட்டான்.

"ஏன் ஸார்?" என்று பதில் வந்தது.

"கைதி 109—ஜெகன்னுதன்....உடம்பு எப்படி இருக்கிறது?" என்று பதட்டத்தோடு கேட்டான். அவன் குரல் கம்மியது.

"கொஞ்ச நேரத்திற்கு முன்னல் தான் ஸார், அந்தக் கைதி இறந்து விட்டான்," என்று அமரிக்கையாய் முஸாபர் பதில் அளித்தான்.

"அப்படியானல், அது ஒரு கனவு...........ஆம்! கனவு தான்!" என்று தனக்குத்தானே ஜானகிராம் கூறிக் கொண்டே மேலே நடந்தான்.

ஜெகன்னுதனின் மரணத்திற்குப் பிறகு ஜானகிராமின் உள்ளத்திலே சாந்தி என்பதே இல்லை.

இந்தியாவில் அனுதையாக விடப்பட்டிருக்கும் ஜெகன்னுதனின் மகள்—அந்தத் துர்ப்பாக்யவதி!—அவளை எண்ணி எண்ணி இவன் மனம் பதறும்.

"பாவம்! இந்த கொடிய உலகத்திலே தன்னந் தனியாக ஒரு பெண் வாழ்வது சாத்தியமான காரியமா?...........அதிலும் ஒரு அனுதை!...ஒரு கொலைகாரனின் மகள்!.....அவளை யார் மணப்பார்?.......யார் ஆதரிப்பார்?" என்று அவன் நெஞ்சம் குமுறும்.

அன்று சற்றேறக்குறைய அவன் மரணமான அதே நேரத்தில் இவன்கண்ட கனவின் அர்த்தந்தானென்ன?

இவ்வுலகிலிருந்து விடுதலை பெற்றுச் செல்ல இவன் உதவியை அவன் நாடினு?........

அப்படியானல்.......அப்படியானல்........அவளை — தன் மகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை இவன் மீது சுமத்திவிட்டுத்தான், அந்தக் கைதி இறந்தானு?........

ஜானகிராமுக்கு இவையொன்றும் விளங்கவே இல்லை. ஆனல் மனத்திலே ஒரு திடமான முடிவைச் செய்துகொண்டான். அந்தப்பெண்ணை கடைசிவரையில் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தன்னுடையது...... மேலும்....மேலும் அவளை ஏன் இவன் மணந்துகொள்ளக் கூடாது?

ஆம்! நிச்சயமாக!..... மணந்துகொண்டால் அவளையே மணந்துகொள்வது?..... இல்லாவிடில்?...... அந்த இன்ப வல்லியை..... ஆம்! "சாவை" அணைத்துக்கொள்வது!... இவ்வாறு தன் நெஞ்சிலே ஒரு அசைக்கமுடியாத உறுதி கொண்டான் ஜானகிராம்!.....நாட்கள் மாதங்களாகி வருடங்களும் மூன்ருகிவிட்டன.

இந்த இடைகாலத்திலே, ஜானகிராமின் உள்ளத்தி லிருந்து, அந்த "அறிமுகமில்லாத" பெண்உருவம் ஒரு கணமேனும் மறையவில்லை...அவளை எப்பொழுது காண் பேன்?...எனது அவா என்று நிறைவேறும்?...என்று அவன் எண்ணி எண்ணி ஏங்குவான்.

அன்று அவன் ஊரிலிருந்து ஒரு தந்தி வந்தது. அதில் அவன் இளைய சகோதரிக்கு மணம் நிச்சயமாகி விட்டதென்றும், வசதி இருந்தால், உடனே வந்துசேரும் படியும் எழுதியிருந்தது.

ஜானகிராம் தாய்நாட்டை விட்டு வந்து வருடங்கள் நான்காகி விட்டன.

ஆகவே, இப்பொழுது அவசியம், ஏற்பட்டிருக்கும் இந்தச் சமயத்திலே அவ்விடம் போய் வருவது எவ்வ ளவோ மன ஆறுதலாக இருக்கும், என்று நினைத் தான். அத்துடன் அவளை....அந்தக் கைதியின் மகளை ....தேடிக் கண்டு பிடிக்கவும் இது ஒரு நல்ல சந்தர்ப்ப மாகுமென்று, அவன் மனம் எண்ணியது. நேரே தலைமை அதிகாரியின் அறைக்குப் போய் தனக்குக் கிடைக்கக் கூடிய லீவு நாட்கள் நான்கு மாதங்கள் இருப்பதாக அறிந்தான். ஆகவே நான்கு மாத ரஜா பெற்றுக் கொண்டு தாய் நாட்டிற்கு கப்பலேறினன். அந்தமான் தீவை விட்டுக் கிளம்பும் போது, இறந்துபோன ஜெகன் னதனின் விலாசத்தைக் குறித்து வாங்கிக் கொண்டு வர அவன் மறக்க வில்லை.

3

ஜானகிராம் ஊருக்கு வந்து ஒரு மாத காலமாயிற்று. அவன் சகோதரியின் கல்யாணமும் முடிந்து விட்டது. இப்பொழுது அவளை—ஜெகன்னதனின் மகளைத் தேடிக்

கண்டுபிடிக்க வேண்டியது தான் முக்கியமான வேலை! சிறை அதிகாரிகள் குறித்துக் கொடுத்த விலாசப்படி அவன் அந்த கிராமத்திற்கு சென்றான்.

பன்னிரெண்டு வருடங்களுக்கு முன் தீவாந்திர சிட்சை விதிக்கப்பட்ட அந்தக் கைதியைப்பற்றி அவ்வூர் வாசிகள் பலருக்கு தெரியாமலிருந்ததில் ஆச்சரியமில்லை. கடைசியாக ஒரு வயோதிகரை, அவன் விசாரித்த பொழுது, அவர் கூறிய செய்திகள் அவனை நிலை தடுமாறச் செய்து விட்டன. ஒரு மாமாங்கத்திற்கு முன் நடந்த அந்தச் சம்பவத்தை தன்னுடைய மனதில் உருவகப்படுத்திக் கொள்ள, அக்கிழவருக்குக் கொஞ்ச நேரம் பிடித்தது.

கடைசியாக அவர், ஏக்கம் கலந்த குரலில் "ஆம்! ஜெகன்னதன் என்று ஒருவன் இருந்தான்.......பாவம்! ரொம்ப யோக்கியன்!......ஆனால் யோக்கியர்களுக்குத் தான் இது காலமல்லவே!........அந்தச் சம்பவம் நடந்த அன்று மத்தியானம் எதிர்பாராத விதமாய், அவன் சாப்பிடுவதற்காக வீட்டில் நுழைந்தான். அவன் வீட்டிற்கு அடுத்த வீட்டிலிருந்த ஒருவன் தன் மனைவியோடு சரசநிலையில் இருப்பதைக் கண்டான்! பிறகு! ஆண்மை உணர்ச்சி ஆவேசத்தோடு அவன் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டது....அதன் முடிவு?...அந்த காமாந்தகாரனின் ஆயுள் முடிவுதான்! பின்னர் சட்டம்! விசாரணை!......அந்தமான்!......"என்று கூறி விட்டு பெருமூச்செறிந்தார்.

ஜானகிராமிற்கு இவ்வுலகமே சுற்றுவது போலிருந்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு "அந்தப் பாவியின் மகள் எங்கே?" என்று அவசரமாய் கேட்டான்.

"யாரோ சொந்தக்காரன் அழைத்துப் போய் விட்டானென்று கேள்வி. எங்கே?.......யார்?......ஏன்?...என்று எனக்குத் தெரியாது" என்று அந்தக் கிழவனார் சொன்னார்.

அங்கே தனக்குக் கிடைக்கக் கூடிய விஷயங்கள் அவ்வளவுதான் என்பதை அறிந்த ஜானகிராம் அந்த

வயோதிகரை மேலும் மேலும் கேள்வி கேட்டு துன் புறுத்தவில்லை.

ஆகவே அவரிடம் விடைபெற்றுக் கொண்டு ஊருக்கு திரும்பினன். ஊருக்கு வந்த பிறகு அவன் மனம் நிம் மதியில்லாமல் துடித்தது. "அவளை எங்கே போய்த் தேடுவது?" என்று சதா ஏங்குவான்.

இவ்வாறு மாதங்கள் இரண்டு கழிந்தன. அவனு டைய ரஜா தீருவதற்கு இன்னெரு மாதம்தான் பாக்கி!.......

"இதற்குள் அவளைத் தேடிக் கண்டு பிடித்துவிட முடியுமா?" என்று அவன் நெஞ்சம் விம்மியது.

4

அன்று (சமீபத்தில் மணமான) அவன் தங்கை ராஜ லெட்சுமி, வீட்டிற்கு வந்திருந்தாள். அவளைப் பார்த்து விட்டுப்போக, அவள் சிநேகிதிகளில் பலர் வந்து சென்ற னர். அவர்களுள் அவ்வூர் ஆரம்ப பாடசாலையின் உபாத் தியாயினி லீலாவதியும் ஒருத்தி. லீலாவதி பார்வைக்கு மிகவும் வசீகரமாக இருப்பாள். அவளது வதனம் சதா புன்சிரிப்போடு இருக்கும்.

ஆனல் இவற்றை யெல்லாம்விட..............அவளுடைய கரிய விழிகளிலே புதைந்து கிடக்கும் சோக ஒளி!.........

அது என்னவென்றே ஒருவராலும் அறிந்துகொள்ள முடியவில்லை. தனது அறையில் ஏதேதோ யோசித்த வண்ணம் உட்கார்ந்திருந்தான் ஜானகிராம்! தற்செய லாக தலை நிமிர்ந்த அவன், தனக்குச் சிறிது தூரத்தில், லீலாவதி தன் தங்கையோடு பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தான்.

"போய் வருகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டு கிளம்பிய, லீலாவதி தன்னைக் கவனிப்பதைக் கண்டான். ஜானகிராமின் வலிய தேகக்கட்டும் முகத்திலே நிலவிய "களை" யும் அவள் உள்ளத்தைக் கவர்ந்து விட்டன. அப்படியே ஸ்தம்பித்து சிறிது நேரம் நின்று விட்டாள். ஜானகிராமன் மனம் என்ன என்னவோ கற்பனை செய்தது.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு, லீலாவதி தன் வீட்டை நோக்கி நடக்கலானுள். அவள் சென்று மறைந்ததும், ஜானகிராமுக்கு சுய உணர்வு வந்தது.

தன் உள்ளத்தை அவள் அபகரித்து விடுவாளோ?.... அந்தக் கைதியின் மகளைக் கைவிட்டு விடும்படி செய்து விடுவாளோ! என்று அவன் பயந்தான்.

சில நாட்கள் கழிந்தன. லீலாவதி அடிக்கடி அவன் வீட்டிற்கு வருவாள். இவ்வளவு காலமில்லாத ஒரு புது அத்யந்த அன்பு, ராஜலெட்சுமியிடம் ஏற்பட்டுவிட்டது போலும்!

அன்று ஜானகிராம் மட்டுந்தான் வீட்டிலிருந்தான். அவன் வீட்டினர் எல்லோரும் பக்கத்து கிராமத்திலிருந்த தங்கள் குல தெய்வத்திற்கு பூஜை போடச் சென்றிருந்தனர். வழக்கம்போல், லீலாவதி அன்றும் வீட்டிற்கு வந்தாள். வீட்டில் ஒருவரையும் காணுமல் ஜானகிராமன் அறைக்குள், "ராஜலெட்சுமி" என்று கூப்பிட்டுக் கொண்டே நுழைந்தாள்.

ஜானகிராம் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். யாரோ கூப்பிட்ட குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தான்.

எதிரே லீலாவதி நின்று கொண்டிருந்தாள்.

தன்னுடைய மனே உறுதியை இவள் கலைத்து விடுவாளோ, என்ற பயம் ஜானகிராமுக்கு மிகவும் உண்டு. ஆகவே மறுபடியும் தலையைக் குனிந்து கொண்டு எழுதப் போகிறவன் போல் பாசாங்கு செய்து கொண்டே "பூஜை போட போயிருக்கிறுர்கள்" என்றுன். அவன் குரல் தடுமாறியது. அதன் பிறகு அவள் என்னவென்னவோ அவனைக் கேட்டாள். அவன் மனம் எங்கோ சென்றிருந்தது. ஏதேதோ உளறினுன்.

சுமார் ஒண்ணரை மணி நேரம் கழிந்த பிறகு லீலாவதி தன் எதிரிலிருந்த மேஜையின் மீது உட்கார்ந்திருப்பதை உணர்ந்தான்.

"ஏதாவது உளறி விட்டோமோ?...."என்று அவன் பயந்தான். அவளைக் காதலிப்பதாக அர்த்தம் தொனிக்கும்

வார்த்தைகளைப் பிரயோகித்து விட்டோமோ, என்று அவனுக்கு பெரிய சந்தேகமாக இருந்தது.

தன்னுடைய குரல் நடுங்க அவளைப் பார்த்து "சகோதரி! நீ போய் விடு! நீ போய் விடு!....என் வைராக்கியத்தை அழித்து விடாதே!........ உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். என் இருதயத்திலிருக்கும் அந்தப் பெண்ணை....அந்த அபலையை....ஓட்டி விடாதே!...போ! போ!..."என்று பயித்தியம் பிடித்தவன் போல்க் கத்தினன்.

லீலாவதி ஒன்றும் பேசாமல் அவ்வறையை விட்டு வெளியே போனள்.

வாயிற் படியைத் தாண்டிச் செல்லும் போது நீர் தேங்கிய விழிகளோடு, அவனைப் பரிதாபகரமாகப்பார்த்தாள். அந்தப் பார்வை அவன் நெஞ்சைத் துளைத்தது. இதயத்தை பிளந்தது.

அவன் உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு எதிரே, லோக மாதாவின் படம் மாட்டப்பட்டிருந்தது. மகா கொடியவனை மகிஷாசூரனை, சம்ஹாரம் செய்த கட்டம் அது! அன்னை பராசக்தி மகா உக்கிரத்தோடு அக் கொடியவன் மேல், நர்த்தனம் செய்து கொண்டிருக்கிருள். அப் படத்தை நோக்கி, கரம் குவித்துக் கொண்டு "அன்னையே! சண்டிகேஸ்வரி! இது என்ன? இது என்ன?... என்னை ஏன் இப்படிச் சோதிக்கிருய்?"....என்று வாய் விட்டுக் கதறினன்.

அவன் கண்களிலிருந்து "கட-கட" வெனக் கண்ணீர் வடிந்தது.

தெருவாயிலிலே ஏதோ அரவம் கேட்டது. கண்களைத் துடைத்துக் கொண்டு சென்று பார்த்தான். கோவிலுக்கு போனவர்கள் எல்லோரும் வந்து கொண்டிருந்தனர்......

* * * *

அன்றிரவு படுக்கையில் படுத்து வெகு நேரம் வரையில் தூக்கம் வராமல், புரண்டு கொண்டு கிடந்தான். பனிரெண்டு மணிக்கு மேல் நன்ருக அயர்ந்து விட்டான்.

மணி ஒன்றிருக்கலாம். ஏதோ ஒரு உருவம் தெருவி லிருந்தபடியே, ஒரு லெட்டரை ஜானகிராமன் படுத்தி ருந்த அறை ஜன்னல் வழியாக, உள்ளே வீசி எறிந்து விட்டு இருட்டிலே மாயமாய் மறைந்தது.

பொழுது விடிந்ததும், கண் விழித்த ஜானகிராமுக்கு அக் கடிதம் தென்பட்டது.

சட்டென்று எடுத்துப்பார்த்தான். அதன் மேல்உறை யில் எழுதப்பட்டிருந்த கை எழுத்து எங்கோ பார்த்தது போலிருந்தது. வெகு நேரம் யோசித்துப் பார்த்தான். கடைசியில் "ஆம்! கண்டு பிடித்து விட்டேன். இது ஜெகன்னுதனுக்கு வந்த கடிதங்களிலிருந்த அவன் மகள் எழுத்துத்தான்!..." என்று கூறிக் கொண்டான்.

அவனுக்கு ஒரு பெரிய சந்தேகம் உண்டாயிற்று. "அவள் எப்படி இங்கு வந்தாள்?..." என்று திகைத்தான். பிறகு உணர்வு பெற்று அக்கடிதத்தை அவசர அவசர மாகப் பிரித்துப் படித்தான். அதில் எழுதியிருந்தது இது தான்!

"அன்பரே........ஒரு நடை தவறிய ஸ்திரீயின் வயிற் றில்—ஒரு கொலைகாரனெனக் கருதப்பட்ட அந்தமான் கைதிக்கு மகளாய் பிறந்தவளான எனக்குத் தங்களைப் போன்ற சீலர்கள் மணவாளர்களாய் கிடைப்பார் என்று நான் எண்ணியது தவறு.

எனது வாழ்க்கையிலே கடைசிப் பற்றுக்கோடாக நான் நம்பி இருந்த காதலும், எனக்கு ஒரு தோல்வி யையே, அளித்தது. ஆகவே எனக்கு இனி இவ்வுலகில் வேலையில்லை...."இதற்கு மேல் அவனல்:படிக்க முடிய வில்லை. அவனுடைய இருதயமே வெடித்து விடும் போலிருந்தது.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு கீழே கையொப் பத்தைக் கவனித்தான்.

"லீலாவதி என்கிற ஜானகி" என்றிருந்தது. அந்தக் கைதிக்கு வரும் கடிதங்களில் 'ஜானகி' என்று கையொப்ப

மிடப்பட்டிருந்தது, இப்பொழுது அவன் நினைவிற்கு வந்தது.

ஆனால் இப்பொழுது அவன் கண்களில் நீர் பெருக வில்லை. நெஞ்சம் விம்மவில்லை.

ஆம் துக்கத்தின் எல்லைக்கோட்டை ஏறி மிதித்து விட்டான். அவனுக்கு இனி துயர மேது?—ஆம்! கிடை யாதுதான்!

கடிதத்தைக் கிழித்துப் போட்டு விட்டு ஏதோ ஒரு முடிவு செய்தவன் போல் வீட்டை விட்டு வெளியேறி னன். அவன் சென்ற வழியிலே தான் லீலாவின் வீடு இருந்தது. அவள் வீட்டிற்கு எதிரே ஒரே கூட்டமாக இருந்தது. "அவள் தூக்குப் போட்டுக் கொண்டாளாம்!" என்று யாரோ முணு முணுத்தது அவன் செவிகளில் பட்டது.

